இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 32

சுடர் 32 | கதிர் 164 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 26 செவ்வாய்க்கிழமை 09.05.2017

## வடக்கு மாகாணத்துக்கென அருங்காட்சியகம் வேண்டும்

### மாகாண சபை அமர்வில் இன்று வருகிறது பிரேரணை

யாழ்ப்பாணம், மே 9
வடக்கு மாகாணத்துக்கு எனப் புதிய அருங்காட்சியமொன்றை அமைக்கவேண்டும் என வலியுறுத்தி வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வில் பிரேரணை முன்மொழியப்படவுள்ளது. மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் இந்தப் பிரேரணையை முன்மொழியவுள்ளார். >> 29

## இனப்படுகொலை நினைவு நாளில் களியாட்டங்கள் ஏதும் வேண்டாம்

### முல்லைத்தீவு மாவட்டச் சிவில் அமைப்புக்கள் கூட்டாகக் கோரிக்கை

முல்லைத்தீவு, மே. 9
முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூரும் நாளில் கேளிக்கை நிகழ்வுகளை நடத்திப் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களைநோகடிக்கவேண்டாம் என முல்லைத்தீவு மாவட்டச்சிவில் அமைப்புக்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.
முல்லைத்தீவு மாவட்ட சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்றுமுன் தினம் பிற்பகல் ஒரு மணியளவில் முல்லைத்தீவு கள்ளப்பாடு பொதுநோக்கு மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் >> 29

## மாணவர்களின் அனுமதி நடைமுறையில் திருத்தம்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 9
பாடசாலைகளுக்குப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறையில் திருத்தம் மேற்கொள்ள எண்ணியுள்ளதாகக் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.
குருநாகலில் நேற்று நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டிருந்தபோதே அமைச்சர் இதனைக் கூறினார்.
அங்கு மேலும் கருத்துத் தெரி >> 29

## மூன்று நாள்களாக வவுனியாவில் யானை அட்டகாசம்



வவுனியா, மே 9
வவுனியாவில் மூன்றாவது முறையாகவும் தனியாகச்சென்ற யானை வீடுகள், பயன்தரும் மரங் >> 29

## மக்களை ஒடுக்கும் அரசு வெகுவிரைவில் வீட்டுக்கு

### நாமல் ராஜபக்ச சூளுரை



கொழும்பு, மே 9
மக்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் இந்த அரசை வெகு விரைவில் வீட்டுக்கு அனுப்புவோம். ஐக்கிய மக்கள்சுதந்திரக்கூட்டமைப்பின் முழுமையான ஆதரவுடன் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஆட்சி அமையும் நாள் விரைவில் வரும்.
இவ்வாறு சூளுரைத்துள்ளார் கிந்த ராஜபக்சவின் புதல்வரும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச.
பத்தரமுல்லையில் அமைந்துள்ள மகிந்த ராஜபக்சவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலா >> 29

முச்சந்தி முரளி



புலிகளை வைச்சு பிழைப்பு நடத்துறத இவை இன்னும் கைவிடேல்ல பாருங்கோ...!

## புதிய அரசமைப்பு தொடர்பான இடைக்கால அறிக்கையில்

# திருத்தங்களை ஏற்காவிட்டால் மகிந்த அணி முழு எதிர்ப்பு

### வழிநடத்தல் குழுவிலிருந்து வெளியேறுவோம் எனவும் எச்சரிக்கை

கொழும்பு, மே 9
தாம் முன்வைத்த திருத்தங்கள் புதிய அரசமைப்புக்கான வரைவில் உள்வாங்கப்படாவிட்டால் தற்போது வழங்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையைத் தமது தரப்பு முழுமையாக எதிர்க்கும் என்பதுடன் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழுவிலிருந்தும் மகிந்த அணி வெளியேறும் என்று தெரிகிறது.
தற்போது வரை புதிய அரசமைப்புப் பணிகளில் மகிந்த அணியினர் இணைந்தே செயற்படுகின்றனர். நிறைவேற்று அதிகார முறைமை, தேர்தல் முறைமை என்பன தொடர்பில் சில முன்மொழிவுகளையும் அவர்கள் முன்வைத்துள்ளனர்.
இந்த நிலையில் புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வழிநடத்தல் குழு தனது இடைக்கால அறிக்கையைத் தயாரித்துள்ளது. கடந்த 3ஆம் திகதி இடைக்கால அறிக்கையின் வரைவு, வழிநடத்தல் குழுவின் சகல உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது. இடைக்கால வரைவு மீதான கருத்துக்களை, வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்கள் >> 29

## ஊழல் தடுப்பு குழுவின் செயலர் அலுவலகத்துக்கு மூடு விழா!

### ஆராயப்படுகிறது என்கிறது தலைமை அமைச்சர் அலுவலகம்

கொழும்பு, மே 9
தலைமை அமைச்சர் அலுவலகத்தின் கீழ் இயங்கிவரும் ஊழல், மோசடி தடுப்புக் குழுவின் செயலாளர் அலுவலகத்தை மூடுவதா அல்லது அதற்கு மேலும் அதிகாரங்களை வழங்குவதா என்பது தொடர்பில் தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
தலைமை அமைச்சர் அலுவலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இதற்காகச் சிறப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இலஞ்ச >> 29

## ஆள்கடத்தல் முகவர்கள் சென்னையில் கைது

### இலங்கையர்களை இந்தியக் கடவுச்சீட்டில் லண்டனுக்குக் கடத்தியவர்கள்

கொழும்பு, மே 9
இந்தியக் கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்திச் சட்டத்துக்குப் புறம்பாக இலங்கையர்களைப் பிரிட்டனுக்கு அனுப்பி வைத்ததாகக் கூறப்படும் முகவர்கள் இந்திய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சென்னை வானூர்தி நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த இராயப்பன் தேவக்குமரன் மற்றும் ஜூலி ஏன் வார்னர் என்ற பிரிட்டன் பெண் ஆகிய இருவருமே இந்தக் குற்றத்தின் சூத்திரதாரிகள் என்று இந்திய அதிகாரிகள் கூறு கின்றனர். இவர்கள் இவருவரும் இந்த மாதம் 4ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.
இந்த ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி >> 29

## மகிந்தவை அரசு பழிவாங்கவில்லை

### கூறுகிறார் விஜேயதாஸ

கொழும்பு, மே 9
முன்னாள் அரச த்லைவர் மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக் குறைக்கப்பட் டமை எந்தவொரு பழிவாங்கல் நட >> 29

## இந்தியாவின் குடியேற்றமாக இலங்கை மாற இடமளியோம்

### பொதுபலசேனா முழக்கம்

கொழும்பு, மே 9
இலங்கையை இந்தியாவின் குடியேற்ற நாடாக மாற்றுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்று பொதுபலசேனா அமைப்பு முழக்கமிட்டுள்ளது. >> 29

## ஆபத்தான புலிகளையும் விடுவித்துவிட்டு எனது பாதுகாப்பையும் குறைக்கிறது அரசு

### புலம்புகிறார் மகிந்த ராஜபக்ச



கொழும்பு, மே 9
மறுவாழ்வு வழங்கி விடுவிக்க முடியாதவர்கள் எனக் கருதி தொடர்ந்தும் தடுப்பில் வைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆபத்தான உறுப்பினர்களை விடுதலை செய்துகொண்டு மறுபுறத்தில் தனக்கான பாதுகாப்பையும் இந்த அரசு குறைத்துள்ளது என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச >> 29

## பயமிருந்தால் மகிந்த வீட்டுக் கதவைப் பூட்டி படுத்துறங்கவேண்டும்

### கூறுகிறார் சரத் பொன்சேகா

கொழும்பு, மே 9
மகிந்த ராஜபக்சவுக்குப் பயமிருந்தால், வீட்டுக்குள் சென்று கதவைமூடிக்கொண்டு படுத்துறங்கவேண்டும் என அமைச்சர் சரத் பொன் >> 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த தரப்பில் 11 எம்.பிக்கள் பதவியிழப்பர்?

## இரட்டைக் குடியுரிமை வைத்துள்ளமையால்

கொழும்பு, மே 9
இலங்கையின் அரசியலில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இரட்டைக்குடியுரிமையை, மகிந்த அணியில் 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் அவர்களும் பதவி இழக்கும் நிலை ஏற்படலாம் என்று தெரிய வருகின்றது.
இரட்டைக் குடியுரிமை காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் தொடர முடியாது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த வாரம் உத்தரவிட்டிருந்தது.
இதனைடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின், மகிந்த அணியில் இருக்கும் இரட்டைக் குடியுரிமைக் கொண்ட 11 பேரின் நிலமை குறித்துக் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.
மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவு தொடர்பில் தாம் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் கீதாகுமாரசிங்க அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## தாஜுதீன் கொலை வழக்கு; அநுரவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, மே 9
ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பிலான சாட்சியங்களை மூடிமறைத்துச் சதி செய்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் மேல் மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவுக்கு எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.
இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் ஜெயராம் ட்ரொஸ்கி முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது மறியல் நீடிக்கப்பட்டது.
கடந்த வியாழக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இரண்டாவது சந்தேகநபரான அநுர சேனநாயக்க சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அதேவேளை, இந்த வழக்கில் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கும் நாரஹேன்பிட்டி பொலிஸின் குற்றத் தடுப்புப் பிரிவின் முன்னாள் பொலிஸ் பரிசோதகர் சுமித் சம்பிக்க பெரேரா நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தார். இவர் இறுதியாகப் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## சட்டத்தின் ஆட்சி; இலங்கைக்கு 68 ஆவது இடம்

கொழும்பு, மே 9
சட்டத்தின் ஆட்சி நடைபெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 68 ஆவது இடத்தில் இடம்பெற்றுள்ளது. உலக நீதித் திட்டத்தின் சட்ட ஆட்சி சுட்டி 2016 இல் 113 நாடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலில் இலங்கை 68ஆவது இடத்தில் உள்ளது.
சாதாரண மக்களின் அனுபவங்கள், அரசின் பொறுப்புக்கூறல், ஊழல், இலஞ்சம், குற்றம் மற்றும் நீதியைப் பெறுதல் தொடர்பான மக்களின் உணர்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி, சட்ட ஆட்சி தொடர்பான இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.
இதில் டென்மார்க் முதலிடத்திலும், நோர்வே இரண்டாமிடத்திலும், பின்லாந்து மூன்றாமிடத்திலும் இருக்கின்றன. அதேவேளை தெற்காசிய நாடுகளில் நேபாளம் 63 ஆவது இடத்திலும், இந்தியா 66 ஆவது இடத்திலும், பங்களாதேஸ் 103ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 106ஆவது இடத்திலும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## புதிய தேர்தல் முறைக்கு இணங்கமாட்டாது மு.கா.

### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



கொழும்பு, மே 9
புதிய தேர்தல் முறைமைக்கு ஒரு போதும் இணங்கப் போவதில்லை என்று, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
எல்லை நிர்ணய நடவடிக்கைகளில் சிறுபான்மையினருக்கு நியாயம் வழங்கப்படாமை தொடர்பில் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளேன். புதிய தேர்தல் முறைக்கு நான் ஒருபோதும் இணங்கப் போவதில்லை - என்றார். (த-5)

## உலக சுகாதார மாநாட்டுக்கு வடக்கில் இருந்தும் இருவர்

யாழ்ப்பாணம், மே 9
ஜெனிவாவில் இடம்பெறும் உலக சுகாதார நிறுவனத்தின் 70ஆவது மாநாட்டில் இலங்கையிலிருந்து 16 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். வடக்கிலிருந்து வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் இதில் பங்கேற்கவுள்ளனர்.
உலக சுகாதார மாநாடு வருடாந்தம் ஜெனிவாவில் இடம்பெறுகின்றது. இந்த மாநாட்டில் இம்முறை இலங்கையில் இருந்து 16 பேர் கொண்ட அணி பங்கேற்கின்றது. இந்த 16 பேரில் இருவர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி ஆகிய இருவருமே இதில் பங்குகொள்கின்றனர்.
இந்த மாநாடு இம்மாதம் 22ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (த-101)

## ரூபா 7 லட்சம் பெறுமதியான நகை, பொருள்கள் கொள்ளை

### வீட்டில் தனித்திருந்த மூதாட்டியை தாக்கிக் கொள்ளையர் கைவரிசை

யாழ்ப்பாணம், மே 9
நெல்லியடிப் பகுதியில் தனிமையில் இருந்த வயோதிபரைத் தாக்கி நகைகள் உள்ளடங்கலாக 7 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி உடைய பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரணவாய் கரவெட்டிப் பகுதியில் இடம்பெற்றது.
அதிகாலைவேளை வீட்டின் கூரையைப் பிரித்து உள்நுழைந்த கொள்ளையர்கள் தனித்திருந்த 65 வயதான மூதாட்டியைத் தலையில் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதனால் மூதாட்டி மயக்கமடைந்துள்ளார். பின்னர் வீட்டில் சல்லடை போட்டு நகைகள், பணம் உள்ளிட்ட 7 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி உடைய பொருள்களைக் கொள்ளையடித்துத் தப்பித்துள்ளனர்.
மயக்கம் தெளிந்த மூதாட்டி சம்பவம் தொடர்பாக உறவினர்களுக்குத் தெரியப்படுத்தினார். உறவினர்கள் அவரை மந்திகை வைத்தியசாலையில் சேர்த்தனர். வைத்தியசாலைப் பொலிஸார் சம்வம் தொடர்பான முறைப்பாட்டைப் பதிவு செய்தனர். மோப்பநாயின் உதவியுடன் நேற்று தேடுதல்கள் இடம்பெற்றன. காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த தலைமையில் தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனப் பொலிஸார் மேலும் கூறினர். (த-21-26)

## ஒரே நாளில் மட்டும் 3 பெண்கள் கொலை

கொழும்பு, மே 9
நாட்டின் வெவ்வேறு இடங்களில் ஒரே நாளில் 3 பெண்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
கம்பளைப் பிரதேசத்தில் பெண் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் அவரது கணவன் கைது செய்யப்பட்டுள்ளார். குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது எனப் புதுளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
ஒபநாயக்க நகரத்தில் உள்ள விற்பனை நிலையத்துக்குள் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலையுடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவித்த பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.
இதேவேளை ஹபரண, அலுத்லியா பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் 28 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
படுகாயமடைந்த நிலையில் பெண்ணை சிறிய ரக லொறியில் ஏற்றிக்கொண்டு சென்ற நிலையில் அவரது கணவன் கைது செய்யப்பட்டுள்ளார். படுகாயமடைந்த பெண் ஹபரண வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.
சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (த-5)

## பாதுகாப்பான தொடருந்து கடவையை அமையுங்கள்

### நொச்சிமோட்டை மக்கள் கோரிக்கை

வவுனியா, மே 9
வவுனியா நொச்சிமோட்டைப் பாலத்துக்கு அருகில் பாதுகாப்புள்ள கடவையை அமைக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அண்மையில் குறித்த பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கடக்க முற்பட்ட வேளை ரயிலுடன் மோதுண்டனர். இதனால் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.
இந்தப் பகுதியில் மக்கள் குடிமனைகள் மற்றும் வாகனம் திருத்துமிடம், கடைத்தொகுதிகள் என்பன இருப்பதால் மக்கள் நடமாட்டமும் அதிகம். எனவே இந்தக் கடவையை ... கள் கடக்க ...
பாதுகாப்பான தொடருந்துக் கடவைகளில் கூடத் தற்போது நாடு முழுவதும் விபத்துக்கள் இடம்பெறும் நிலையில் மக்கள் அதிகம் பயன்படுத்தும் இந்தப் பாதுகாப்பற்ற ரயில் கடவை குறித்து அதிக கவனம் செலுத்தப்படவேண்டும். பாதுகாப்பான ரயில் கடவையை அமைப்பதுடன் அதில் காப்பாளரையும் நியமிக்கவேண்டும் எனவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
குறித்த பகுதி ஆபத்தானது எனப் பல தடவைகள் கூறியிருந்தோம். அதன் பின்னர் ஒரு விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மீண்டும் இவ்வாறு இடம்பெறாமல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் குறித்த ... னர். (த-21-402)

## மக்ரோனுக்கு நேற்று மைத்திரிபால வாழ்த்து

கொழும்பு, மே 9
பிரான்சின் புதிய அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இம்மானுவெல் மக்ரோனுக்கு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.
பிரான்சில் நடந்த இரண்டாவது கட்ட அரச தலைவர் தேர்தலில், தீவிர வலதுசாரி வேட்பாளர் மெரைன் லெ பென்னைத் தோற்கடித்து மையவாத வேட்பாளரான இம்மானுவெல் மக்ரோன் மாபெரும் வெற்றி பெற்றார்.
39 வயதான மக்ரோன், 66.06 சதவீத வாக்குகளையும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட மெரைன் லெ பென் 33.94 சதவீத வாக்குகளையும் பெற்றிருந்தனர்.
இந்த நிலையில் பிரான்சின் புதிய அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மக்ரோனுக்கு உலகத் தலைவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தனது கீச்சகப் பக்கத்தில் இட்டுள்ள வாழ்த்துக் குறிப்பில், குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ள இம்மானுவெல் மக்ரோனுக்கு வாழ்த்துக்கள். எமது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் செழிப்படைவதற்கு, இந்த வெற்றி மிகப்பெரிய அடித்தளமாக அமையும், என்று குறிப்பிட்டுள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச தலைவர்களின் பாதுகாப்பு விடயத்தில் ஒரேவித நடைமுறை

## சந்திரிகா குமாரதுங்க வலியுறுத்தல்

கொழும்பு, மே 9

முன்னாள் அரச தலைவர்களின் பாதுகாப்பு குறித்து ஒரே விதமாகவே செயற்படவேண்டும் என்று முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டில் போர் இல்லை. பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இப்படியான நிலையில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மேலதிக பாதுகாப்பு வழங்குமாறு கோருவது ஏன் என்று புரியவில்லை.

2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம். நான் அரச தலைவர் பதவியில் இருந்து ஓய்வு பெற்று சுமார் 15 மாதங்களில் மகிந்த மற்றும் அவரது சகோதரரான கோத்தபாய ராஜபக்ச ஆகியோர், எனக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பை நீக்கும்படி உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தனர். அந்தக் காலத்தில் நாட்டில் போர் நடந்து கொண்டிருந்தது. விடுதலைப் புலிகளால் எனக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலையும் காணப்பட்டது.



ஓய்வுபெற்ற பின்னர் எனது பாதுகாப்பு குறித்து பாதுகாப்புச் சபையின் சிறப்புக் குழுவொன்று ஆராய்ந்தது. அவர்கள் தேவையான ஆயுதங்களுடன் 300 பாதுகாப்புத் தரப்பினரை வழங்கவேண்டும் என்று பரிந்துரை செய்தனர். எனினும், நான் அந்தப் பரிந்துரையை நிராகரித்து 150 பேர் மற்றும் பாதுகாப்பு வாகனங்கள் உள்ளிட்ட 10 வாகனங்களை மட்டுமே ஏற்றுக் கொண்டேன்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச பாதுகாப்பு குறைக்கப்படுவது குறித்து மகிந்த அணி சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் குறித்து தொடர்ச்சியாகக் கவனம் செலுத்தியுள்ளேன். முன்னாள் அரச தலைவரின் பாதுகாப்பு குறித்து ஒரே விதமாகவே செயற்படவேண்டும் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன் என்றார். (த-5)

# வடக்குக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் வெசாக் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 9

வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வெசாக் வெளிச்சக்கூடு காட்சிப்படுத்தலும் பக்திப்பாடல் இசைத்தல் நிகழ்வும் நாளை புதன்கிழமையும், நாளை மறுதினம் வியாழக்கிழமையும் இரவு 7மணி தொடக்கம் வவுனியா ஸ்ரீ போதிதக்சிணாராமய விகாரையில் நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பை வவுனியா மாவட்டச் செயலகம், வவுனியா பிரதேச செயலகம், வவுனியா தெற்குப் பிரதேச செயலகம், அரச திணைக்களங்கள் மற்றும் பொலிஸ், முப்படையினர், சிவில் பாதுகாப்புப் படையினர், வவுனியா தெற்கு பௌத்த சங்கம் ஆகியன இணைந்து சிறப்பிக்கவுள்ளன. (த)

# மின்சாரக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது வாகனம்

## மாடுகளுக்கு வழிவிட முயன்றவேளை



கிளிநொச்சி, மே 9

கிளிநொச்சியில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த வாகனம் புளியங்குளம் பகுதியில் வீதியைக் கடந்த மாட்டுக்கு வழி விட முனைந்தவேளை விபத்துக்குள்ளானது.

கட்டுப்பாட்டை இழந்த குறித்த வாகனம் வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மின் கம்பத்துடன் மோதியது.

கிளிநொச்சியில் இருந்து பயணித்த தனியார் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

வாகனம் ஏ-9 சாலையில் பயணித்தவேளை புளியங்குளம் பகுதியில் மாடுகள் சில வீதியைக் கடந்துள்ளன. சாரதி அவற்றுக்கு வழி விட முனைந்துள்ளார். இதனால் வாகனம் வீதியை விட்டுவிலகி மின் கம்பத்துடன் மோதியது.

இதனால் வாகனத்தின் முன்பகுதி சேதமுற்றதுடன் மின் கம்பமும் முறிந்தது. வாகனத்தில் பயணித்தவர்களுக்குக் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இந்த விபத்தினால் மின்சார சபையினருக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்து காரணமாகக் குறித்த பகுதியில் ஒரு மணி நேரம் மின் தடை ஏற்பட்டது. (த-101)

# பழப் பயிர்ச் செய்கைக்கென வடக்கில் பயனாளிகள் தெரிவு

அச்சுவேலி, மே 9

பழப் பயிர்ச்செய்கை மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பயனாளிகளாக இணைந்து பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட விரும்பும் விவசாயிகள் தமது பிரிவு விவசாயப் போதனாசிரியர் மற்றும் விவசாய சம்மேளனங்களுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீடு மற்றும் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு மூலம் இந்த வருடம் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படக் கூடிய விவசாய நடவடிக்கைகளுக்கு விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாகப் பயனாளிகள் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பப்பாசிப் பயிர்ச்செய்கை, தேசிப்பயிர்ச்செய்கை மற்றும் மாதுளை, தோடை உள்ளிட்ட பயிர்களை உள்ளடக்கிய வளவியல் பயிர்ச்செய்கை நடவடிக்கை மற்றும் விவசாயப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு மானிய உதவிகள் மற்றும் உதவிகள் ஊக்குவிப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

வழங்கப்படவுள்ள உதவிகள் மற்றும் பயிர்கள், பயனாளிகளின் எண்ணிக்கை கொண்ட விவர அட்டவணைகள் பிரிவு ரீதியாக விவசாயப் போதனாசிரியர்களுக்கு வழங்கப்பட்டு உரிய பயனாளிகளைத் தெரிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பயனாளிகளாக இணைந்துகொள்ள விரும்பும் விவசாயிகள் தமது பிரிவு விவசாய சம்மேளனம் மற்றும் விவசாயப் போதனாசிரியர்களுடன் நேரில் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-11)

# சாவுத் தண்டனை கைதிகளின் மிகப் பெரிய வெசாக் தோரணம்

## வெலிக்கடைச் சிறைச்சாலை முன்பாக

கொழும்பு, மே 9

கொழும்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படும் வெசாக் தோரணங்களில் மிகப்பெரிய தோரணம் வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள சாவுத் தண்டனைக் கைதிகளால் சிறைச்சாலைக்கு முன்னால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றதென வெலிக்கடைச் சிறைச்சாலை அதிகாரி சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

71 அடி உயரத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்தத் தோரணத்தில் 15 ஆயிரம் மின்குமிழ்கள் பொருத்தப்படும் எனவும், நாளை முதல் 15 ஆம் திகதிவரை பொதுமக்கள் இதைக் கண்டு களிக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

சாவுத் தண்டனைக் கைதிகளுடன் ஆயுள் தண்டனைக் கைதிகளும் இணைந்து நிர்மாணிக்கும் இந்தத் தோரணம் கொழும்பில் அமைக்கப்படவுள்ள தோரணங்களில் மிகப் பெரியதாக இருக்கும் எனவும் சந்தன ஏக்கநாயக்க கூறினார். (த-5)

# சாந்தபுரம் கத்திக்குத்து வழக்கு; அறிக்கை சட்டமா அதிபருக்கு

கிளிநொச்சி, மே 9

கிளிநொச்சி சாந்தபுரம் இரணைமடு காட்டுப் பகுதியில் வயோதிபப் பெண்ணொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை எதிர்வரும் ஜூன் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படாத நிலையில் விசாரணை அறிக்கை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

இதனையடுத்து அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி சாந்தபுரம் காட்டுப் பகுதியில் கடந்த மார்ச் மாதம் 3ஆம் திகதி மேற்படி சம்பவம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

சாந்தபுரம் கிராமத்தில் வசித்துவரும் மேற்படி பெண் இரணைமடுக் குளத்திற்கு நன்னீர் மீன்பிடித் தொழிலுக்குச் சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்தபோது, இரணைமடு இராணுவத் தலைமையகத்துக்குப் பின்புறமாக உள்ள காட்டுக்குள் மறைந்திருந்த ஒருவர் திடீரெனப் பாய்ந்து வந்து குறித்த பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்டுள்ளார். இதன்போது பெண் அந்த நபருடன் மல்லுக்கட்டி கூச்சலிட்டதையடுத்து அவர் பெண்ணின் கழுத்தில் கத்தியால் குத்திவிட்டு இராணுவ முகாம் பக்கமாகத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்றவேளையில் குறித்த பெண்ணுக்கு முன்னால் ஐம்பது மீற்றர் தூரத்தில் சென்று கொண்டிருந்த அவரது மகன், தாயின் அலறல் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்துள்ளார். அப்போது தான் முன்னதாகக் குளத்திற்குச் சென்றுக்கொண்டிருந்தபோது பற்றைக்குள் அவதானித்த நபர் தனது தாயாரைக் கத்தியால் குத்திவிட்டுத் தப்பியோடுவதைக் கண்டதாகத் தெரிவித்திருந்தார்

அவ்வாறு தப்பிச் சென்றவர் ஊதாநிற மேலாடை அணிந்திருந்தார் என்றும், அவரை அடையாளம் காட்டமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பில் இராணுவத்தினரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் ஏற்கனவே பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது.

எனினும் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் முடிவுறாத நிலையில் அடையாள அணிவகுப்பை நடத்துவதில் சிக்கல்நிலவுவதாகப்பொலிஸார் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தனர்.

இந்தநிலையில் நேற்றையதினம் விசாரணை தொடர்பான அறிக்கை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மன்றில் தெரிவித்ததை அடுத்து நீதிவான் விசாரணைக்கு உத்தரவிட்டார். (த-ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் தங்கை சாவு

கொழும்பு, மே 9

முன்னாள் அரச தலைவரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்சவின் இளைய சகோதரி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

காந்தினி சித்ரானி ராஜபக்ச ரணவக்க (வயது - 58) என்பவரே உயிரிழந்தவ ராவார்.

நோய் காரணமாகக் கொழும்பு தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வந்தபோதே அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. ஒன்பது பிள்ளைகளைக் கொண்ட ராஜபக்ச குடும்பத்தில், இவர், கடைசிப் பெண் பிள்ளையாவார். (த-4)

# செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டுத் தாகசாந்தி



வவுனியா, மே 9

உலக செஞ்சிலுவையும் செம்பிறையும் தினத்தை முன்னிட்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் அன்ரன் புனிதநாயகம் தலைமையில் நேற்றுக் காலை வவுனியாவில் தாகசாந்தி நிகழ்வு இடம்பெற்றது. காலை 8.00மணி முதல் பிற்பகல் 1 மணி வரை வவுனியா சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்பாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்துக்குப் புதிய உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டதுடன் குருதிக் கொடைக்கான பதிவுகளும் இடம்பெற்றன.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக் கிளை உத்தியோகத்தர்கள், தொண்டர்கள் உட்படப் பலர் இதில் கலந்து கொண்டனர். (த)



# லேசர் தொழில்நுட்பத்தில் வெசாக் நிகழ்வு அலங்காரம்

## நாளை திறந்து வைப்பார் மைத்திரி

கொழும்பு, மே 9
நவீன லேசர் தொழில்நுட்பத்துடன் கூடிய வெசாக் அலங்காரம் மக்கள் பார்வைக்காக நாளை வெசாக் போயா தினத்தன்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

கொழும்பு காலிமுகத்திடலில் நிர்மாணிக்கப்படும் இந்த அலங்காரம் நாளை புதன்கிழமை மாலை 7 மணிக்கு முதன் முறையாகக் காட்சிப்படுத்தப்படும்.

காலிமுகத்திடலில் நிர்மாணிக்கப்படும் உலகின் முதலாவது நவீன லேசர் தொழில்நுட்பத்துடன் கூடிய வெசாக் அலங்காரம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இதன் உயரம் 60 அடிகளாகும். அகலம் 40 அடிகளாகும். புத்தரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கின்ற கதா பாத்திரங்கள் இந்த லேசர் கீற்று வெசாக் அலங்காரத்தில் காட்சிப்படுத்தப்படும்.

ஜேர்மன் நாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டுள்ள வெசாக் அலங்காரத்தை பேராசிரியர் பிரபாத் சந்திம உக்வத்த வடிவமைத்துள்ளார். விமல ஜீவ தொம்பவத்த இதற்கான பின்னனி இசை அமைத்துள்ளதுடன், திமுத்து சிந்தக்கவால் கதை விபரிக்கப்படும். இரவு வேளையில் ஆகாயத்தில் காட்சிப்படுத்தப்படும். இவ்வலங்காரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பக்தர்களின் மனங்களைக் கவருமென பேராசிரியர் பிரபாத் சந்திம உக்வத்த தெரிவித்தார். (த

# மறிச்சுக்கட்டி மக்கள் நடத்திய கவனவீர்ப்பு இடைநிறுத்தம்

### மாவில்லு வர்த்தமானிப் பிரகடனத்தில் திருத்தம் செய்ய அரசு இணங்கியதை அடுத்து



மன்னார், மே 9
மாவில்லு வர்த்தமானிப் பிரகடனத்தை நீக்குமாறு கோரிக் கடந்த 44 நாள்களாக மறிச்சுக் கட்டியில் நடத்திய கவனவீர்ப்புப் போராட்டத்தை மக்கள் நேற்று மாலை முதல் தற்காலிகமாக இடை நிறுத்தினர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய பேச்சின் மூலம் மாவில்லு வர்த்தமானிப் பிரகடனத்தில் உள்ள தவறுகளைத் திருத்த வழி ஏற்பட்டுள்ளதால் குறித்த போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்துமாறு அமைச்சர்களான ரிசாத் பதியுதீன், பைசர் முஸ்தபா மற்றும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி, முஸ்லிம் கவுன்சில் தலைவர் ஆகியோர் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டே இந்தப் போராட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கோரிக்கைக்கு அமைய அமைச்சர் பைசர் முஸ்தபா, அசாத் சாலி மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மறிச்சுக்கட்டிக்கு நேரில் வந்து அரச தலைவருடன் நடத்திய பேச்சின் விவரங்களை வெளியிட்டதுடன் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைத்தனர்.

எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை அரச தலைவரின் செயலாளருடன் நடத்தப்படவுள்ள பேச்சில் தீர்க்கமான முடிவொன்று கிடைக்கும் எனவும் அவர்கள் அங்கு தெரிவித்தனர்.

இதனையடுத்தே குறித்த போராட்டம் கைவிடப்பட்டது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வடக்கு மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன், மக்கள் காங்கிரசின் செயலாளர் சுபைதீன், முஸ்லிம் கவுன்சிலின் உபதலைவர் ஹில்மி அஹமட், சிரேஸ்ட சட்டத்தரணி என்.எம்.ஸஹீட் மற்றும் பிரதேச மக்கள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (த-56)

# சைட்டத்துக்கு எதிராக அடுத்த கட்டம் என்ன?

### ஆராய இன்று கூடுகின்றது மருத்துவ அதிகாரிகள் சங்கம்

சைட்டத்துக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது தொடர்பில் ஆராய மருத்துவ அதிகாரிகள் சங்கம் இன்று கூடவுள்ளது.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை அரசுடமையாக்குமாறும், எட்கா உடன்படிக்கை மற்றும் அரச சொத்துகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதை நிறுத்துமாறும் தெரிவித்துக் கடந்த 5ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைமைத்துவத்தின் கீழ் 30 இற்கும் அதிகமான அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால், நாட்டின் அத்தியாவசியத் தேவை பாதிக்கப்பட்டிருந்தது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இவ்வாறு தொடர்ச்சியாகப் போராட்டங்களை முன்னெடுத்து வருவதால் மக்கள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகுவதாக அரசு மீது கடும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இவ்வாறான பணிப்புறக்கணிப்பை மேற்கொள்வது சிலரின் அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழாகும் என்று அரசு, அவர்களின் போராட்டத்தை முற்றாக நிராகரிப்பதுடன், நாட்டுக்குத் தனியார் மருத்துவக் கல்லூரிகள் அவசியம் என்பதுடன், அதற்கு ஒரு பொறிமுறை தயாரிக்கப்படும் என்றும் கூறியுள்ளது.

இந்த நிலையில், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கூடிய ஆராயச் சங்கத்தின் உயர்மட்டக் குழு கொழும்பில் இன்று கூடுகிறது. இதன்போது அரசு எதிராக பல்வேறு தீர்மானங்களையும், போராட்டத்தை அரசு கண்டு கொள்ளாவிடின் அடுத்து முன்னெடுக்கப்பட உள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

### ரயில் நிலையம் முன் போராட்டம்

# மாணவர்கள் ஐவரை கைது செய்ய உத்தரவு

கொழும்பு, மே 9
மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாகப் பல்கலைக் கழக மாணவர்கள் நடத்திய போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஐந்து மாணவர்களையும் உடனடியாகக் கைது செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிவானுமான லங்கா ஜயரத்ன கொழும்புக் கோட்டை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளரான ரயன் ஜயலத், அதன் உறுப்பினர்களான அச்சல ஜயவர்தன, ஜதுரே சுனீத தேரர் உட்பட மேலும் இரு மாணவர்களைக் கைது செய்யுமாறே நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் போராட்டம் தொடர்பில் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்த 21 மாணவர்களும் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தனர். (த-5)

## இ.போ.ச. பேருந்துடன் மோதியது வாகனம்

சாவகச்சேரி மே.9
கொழும்பிலிருந்து வந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பேருந்து சாவகச்சேரிப் பேருந்து நிலையத்தில் பயணிகளை இறக்கிவிட்டுப் புறப்படுகையில் பேருந்து நிலையத்துக்குள் வந்த வாகனம் பேருந்துடன் மோதியது.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றது. தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை. (த-9)



# சீரணி மஞ்சத் திருவிழாவில் நேற்று யானைகள் ஊர்வலம்

யாழ்ப்பாணம், மே 9.
கண்டியில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்ட இரண்டு யானைகள் நேற்று இரவு சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்மன் ஆலய மஞ்சத் திருவிழாவில் கலந்து கொண்டன.

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்மன் ஆலய மஞ்ச திருவிழாவை முன்னிட்டு ஆலய வளாகத்தில் நேற்றுப் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதில் ஒரு நிகழ்வாகவே யானைகளின் ஊர்வலமும் இடம்பெற்றது. கண்டியில் இருந்து வரவழைக்கப்பட்ட யானைகள் அலங்கரிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டன. யானைகளைக் காண்பதற்காகப் பெருமளவு மக்கள் ஆலயத்தைச் சுற்றித் திரண்டிருந்தனர். (த-21)

# விபத்தை வேடிக்கை பார்த்தவர் மீது தாக்குதல்

### பொலிஸ் விசாரணை ஆரம்பம்

விபத்தை வேடிக்கை பார்த்தவர் மீது இனந்தெரியாதவர்கள் நடத்திய தாக்குதல் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மட்டுவில் கிழக்கில் கடந்த மாதம் 21 ஆம் திகதி விபத்து இடம்பெற்றது. டிப்பர் வாகனம் கடைக் கட்டடத்துடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்தது. இதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர் மீது, இன்னொரு வாகனத்தில் வந்த இனந்தெரியாதோர் சிலர் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த இராசதுரை குணசீலன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். 'விபத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, டபிள்யூ.பி எல்.எச் 3245 இலக்க வாகனத்தில் வந்தவர்கள் ஐந்து பேர் (விபத்துடன் தொடர்பில்லாதவர்கள்) [illegible] தாக்குதல் நடத்தினர்' என்று குணசீலன் தெரிவித்தார். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்துடன் தொடர்புடைய கடை உரிமையாளரே தாக்கப்பட்டதாக முதலில் தகவல்கள் வெளியாகியிருந்தன. விபத்தை வேடிக்கை பார்த்தவர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாகப் பொலிஸார் [illegible] பிட்டுள்ளனர். [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்திய திருச்சபையின் நிறைவாழ்வு மையம் திறப்பு

கிளிநொச்சி.மே 9

கிளிநொச்சி தென்னிந்திய திருச்சபையின் நிறைவாழ்வு மையம் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி டி.எஸ் தியாகராஜாவால் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது

தென்னிந்திய திருச்சபையின் கிளிநொச்சி வளாகத்தில் புனர்நிர்மானம் செய்யப்பட்ட குறித்த கட்டடத் தொகுதி நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல்வேறு திட்டங்கள் குறித்த நிறைவாழ்வு மையத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. உளநல சிகிச்சைகள், நடமாடும் மருத்துவ முகாம், பாலர் பராமரிப்பு நிலையங்கள், மாலை நேர கற்கைச் செயற்பாடுகள் உள்ளிட்ட பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



"இலங்கையில் இரண்டுபோர் அனர்த்தங்கள் இடம்பெற்றது எனலாம். ஒன்று இயற்கையாக இடம்பெற்ற சுனாமி. மற்றையது மனித செயற்பாடுகளால் இடம்பெற்ற கொடும் போர். சுனாமி பேரனர்த்தத்தின் போது ஆரம்பிக்கப்பட்ட நிறைவாழ்வு மையத்தின் பணிகள், போரின் பின்னரும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாதிப்புக்கள், இழப்புக்களில் இருந்து மீள முடியாதவர்களை இனம் கண்டு அவர்களுக்குக் கைகொடுக்கவே இந்நிலையம் உதவுகின்றது. பல்வேறு திட்டங்களை முன்னெடுப்பதற்கு கிளிநொச்சியைத் தளமாக கொண்டு இந்த நிலையம் செயற்படும். மக்களுக்கு நன்மை கிடைக்கும் பல திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்." என்று பேராயர் தெரிவித்தார். குறித்த நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையின் செயலாளரும் யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபருமான டீ எஸ் லொலமன், குருவானவர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஜ-6)

# தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், மே 9

வல்லை ஸ்ரீமுத்துமாரி ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெற்று நாளை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (த-35)

# இந்திர விழா

வடமராட்சி, மே 9

வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு வல்வை மக்களால் 50 ஆவது ஆண்டாக இந்திர விழா நடத்தப்படவுள்ளது. நாளை புதன்கிழமை இந்த விழா இடம்பெறவுள்ளது. வருடந்தோறும் இடம்பெற்றுவரும் இந்த விழா இவ்வாண்டு பொன்விழாவாக கொண்டாடப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-21)

# திருச்சபைக்கான குருமனையை முறிகண்டியில் அமைக்க ஏற்பாடு

## பேராயர் தியாகராஜா தெரிவிப்பு

கிளிநொச்சி.மே 9

முறிகண்டி தென்னிந்திய திருச்சபைக்கு சகல வசதிகளும் கொண்ட குருமனை ஒன்று விரைவில் நிர்மாணிக்கப்படும். குறித்த குருமனைக்கான கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

இவ்வாறு தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி டி.எஸ் தியாகராஜா தெரிவித்தார்.

முறிகண்டி திருச்சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறப்பு வழிபாட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

போருக்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் சேதமடைந்திருந்த திருச்சபைகள் அனைத்தும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டன. மக்களின் வழிபாட்டுக்கு ஏற்ற வகையில் அவை கையளிக்கப்பட்டன. திருச்சபைகளில் பணியாற்றும் குருவானவர்கள் தங்கி நின்று பணி செய்வதற்கு ஏற்ற வகையில் குருமனைகள் அமைக்கப்படும். அதன் முதல் கட்டமாக முறிகண்டி திருச்சபையில் சகல வசதிகளும் கொண்ட குருமனை ஒன்று அமைக்கப்படும்-என்றார்.

அதேவேளை பாரதிபுரம் திருச்சபையில் இடம்பெற்ற திருநிலைப்படுத்தல் வழிபாட்டில் கலந்து கொண்ட பேராயர், அங்கு திருநிலைப்படுத்தல் வழிபாட்டை ஆரம்பித்து வைத்தார். (ஜ-6)

## கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டு

# விளக்கமறியலில் இருந்தவருக்கு நேற்றுப் பிணை

யாழ்ப்பாணம்.மே 9

4 கிலோ கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என்று குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபருக்கு நேற்று பிணை வழங்கப்பட்டது.

மல்லாகம் நீதிவான் மன்றின் எல்லைக்குட்பட்ட பகுதியில் 4கிலோ கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என்று குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர், 2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி சட்டத்தரணி ஊடாக பொலிஸில் சரணடைந்தார். அன்றிலிருந்து அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்தக் குற்றச்சாட்டில் இரண்டு பேர் தொடர்புபட்டிருந்தனர். அவர்களில் ஒருவர் சம்பவ தினம் அன்றே பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர் பிணையில் விடு விக்கப்பட்டார்.

இரண்டாவது சந்தேகநபர்பிணைமனுக்கோரியிருந்தார். இது தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வழக்கைப் பரசீலித்த நீதிபதி, "குறித்த சந்தேகநபர் ஏழரை மாதங்களாக விளக்க மறியலில் இருந்து வருகின்றார்.

சந்தேகநபரைப் பிணையில் விடுவிப்பதற்கு அரச சட்டத்தரணி ஆட்சேபனை எதுவும் தெரிவிக்க வில்லை.

எனவே குறித்த நபரை 50 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையிலும் செல்வதற்கு மன்று அனுமதியளிக்கின்றது" எனக்கூறி உத்தர விட்டார். (ஜ-12)

# கலை இலக்கிய ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம் மே 9

சுன்னாகம் கலை இலக்கியச் சங்கத்தின் கலை இலக்கிய ஒன்றுகூடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயத் திருமண மண்டபத்தில் கலை இலக்கியச் சங்கத்தின் உப தலைவர் அ.ஜெயகுமாரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (த-8)

# சத்தியசாயி சேவா நிலையத்தில் நகர சங்கீர்த்தனம்

யாழ்ப்பாணம், மே 9

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இராமநாதன் வீதியிலுள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை புதன்கிழமை காலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனம் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு காலை 8.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து நண்பகல் நிகழ்வுகளில் வேதபாராயணம், அஷ்டோத்திரம், பஜனை, சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளன.

சிறப்புச் சொற்பொழிவை யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி வினோதா சண்முகராஜா வழங்கவுள்ளார். (த)

# சாவகச்சேரி மகளிர் மாணவிகளுக்கு சைக்கிள்கள், புத்தகப் பை வழங்கல்

தென்மராட்சி, மே 9

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கற்கும் பொருளாதார நிலையில் பின்தங்கிய இரு மாணவிகளுக்குச் சைக்கிள்களும் மேலும் ஒரு தொகுதி மாணவர்களுக்கு புத்தகப் பைகளும், பாதணிகளும் வழங்கப்படவுள்ளன.

கல்லூரியின் முன்னாள் ஆசிரியை திருமதி அ. ஞானசிங்கம் நினைவாக அவரது குடும்பத்தினரால் இந்த உதவிப் பொருள்கள், வழுங்கப்பட்டுள்ளன எனக் கல்லூரி அதிபர் திருமதி ல.முகுந்தன் தெரிவித்தார். (த-9)

# விபத்தில் மூவர் காயம்

தென்மராட்சி மே 9

முதன்மைச் சாலையில் சைக்கிளில் வந்த 71 வயது முதியவர் சாலையின் மறுகரைக்குச் செல்வதற்காகச் சைக்கிளைத் திருப்பியபோது அவ்வழியே வந்த மோட்டார் சைக்கிள் மோதியது. இதனால் இரு வாகனங்களிலும் பயணித்த மூவரும் காயமடைந்துள்ளனர். சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் மு.ப.11.00 மணியளவில் சாவகச்சேரி மடத்தடியில் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சைக்கிளில் பயணித்த கைதடி மத்தியைச் சேர்ந்த கந்தையா கந்தசாமி (வயது -71) என்பவர் வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவிலும் மோட்டார் சைக்கிளில் பயணித்த மானிப்பாய் ஆனந்தா சாலையைச் சேர்ந்த ரஞ்சன் குமார் கௌரிசங்கர் (வயது -17), திருநாவுக்கரசு பிரசாத் (வயது -21) ஆகியோர் விடுதியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# வீதி மின்விளக்குகள் ஒளிராமையால் சிரமம்

தென்மராட்சி மே. 9

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சரசாலை, மட்டுவில், கைதடி, நாவற்குழி போன்ற இடங்களில் பொருத்தப்பட்ட வீதி மின்விளக்குகள் ஒளிர்வதில்லையென அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

பிரதேச சபையால் கடந்த வருடம் பிரதான சந்திகள் உட்பட பல இடங்களில் வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டன. அவற்றில் பல பழுதடைந்து ஒளிர்வதில்லையெனவும், இது தொடர்பாகப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துக்கு அறிவித்தும் பழுதடைந்த மின்விளக்குகளுக்குப் பதிலாகப் புதிய விளக்குகள் பொருத்தப்படவில்லையெனவும், இதனால் இரவுவேளைகளில் மக்கள் நடமாடுவதற்கு அச்சம் கொண்டுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

பொதுமக்கள் குறித்து முறைப்பாடுகள் தொடர்பாக சபை மின்னிணைப்பாளர் மூலம் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. பழுதடைந்த மின்விளக்குகளுக்குப் பதிலாக புதிய மின்விளக்குகள் இலங்கை மின்சார சபையின் உதவியுடன் விரைவில் பொருத்தப்படுமெனப் பிரதேச சபையினர் தெரிவித்தனர். (த-9)

# கரவெட்டிப் பிரதேச செயலராக பொறுப்பேற்றார் ஸ்ரீமோகனன்

கரணவாய் மே 9

கரவெட்டிப் பிரதேச செயலராக கே.ஸ்ரீமோகனன் நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கரவெட்டிப் பிரதேசசெயலராகக் கடமையாற்றிய எஸ். சிவஸ்ரீ அண்மையில் தெல்லிப்பழைப் பிரதேச செயலராக இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

இவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட தெல்லிப்பழை பிரதேச செயலர் கே ஸ்ரீமோகனன் நேற்று கரவெட்டிப் பிரதேச செயலராக உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார். (த-108)



# நீர்வேலிக் கந்தன் தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம்.மே 9

நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

இன்றைய தினம் அதிகாலை 4 மணிக்குப் பூசைகள் ஆரம்பமாகி கொடி தம்பப்பூசை, வசந்த மண்டப பூசை இடம்பெற்று காலை 9 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணித்து வீதி வலம் வருவார்.

நாளை புதன்கிழமை சித்திரா பௌர்ணமி தினத்தன்று தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (த-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## சின்ன வெங்காய விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மே 9
யாழ்.குடாநாட்டில் உற்பத்திசெய்யப்பட்டு அறுவடை செய்யப்பட்ட சின்ன வெங்காயம் அதிகளவில் வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. குடாநாட்டில் சின்ன வெங்காயத்துக்குப் பற்றாக்குறையும் விலை அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளன.
கடந்த போகத்திலும் 800 ஹெக்டேயர் வரையான நிலப்பரப்பில் வெங்காயம் பயிரிடப்பட்டது. அவற்றில் 277 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்கள் பாதிப்படைந்தது.
தற்போதும் சிறுபோ கத்துக்கான வெங்காயச் செய்கையில் விவசாயிகள் பரவலாக ஈடுபட்டும் வருகின்றனர் என்று வட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர்அ.செல்வராசா தெரிவித்தார்.
புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி, நவக்கிரி, புன்னாலைக்கட்டுவன் ஊரெழு, உரும்பிராய், இடைக்காடு போன்ற பகுதிகளில் விவசாயிகள் சின்ன வெங்காயச் செய்கையில் பரவலாக ஈடுபட்டுள்ளனர். (ந-17)

# சித்த மருத்துவ சுவடிகளை கற்பிக்க வருகிறார்கள் இந்தியர்

## வடக்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை



யாழ்ப்பாணம், மே 9
வடக்கில் உள்ள ஆயிரக்கணக்கான சித்த மருத்துவக் குறிப்புகளை மாணவர்களுக்குக் கற்பிப்பதற்காக மொழித் தேர்ச்சி பெற்ற இருவரை இந்தியாவில் இருந்து அழைந்து வர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இந்த மாதம் 31ஆம் திகதி முதல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழ் மூதாதையர்கள் கைக்கொண்ட சித்த மருத்துவமானது தற்போது பாதுகாக்கப்படாது அழிந்து வருகின்றது.
பல நூறு ஆண்டுகளுக் முன்னர் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள் பல அழிவடைந்தமையும், பாதுகாப்படும் ஆயிரக்கணக்கான ஓலைச் சுவடிகளில் உள்ளவற்றை வாசிக்கும் ஆற்றல் கொண்டவர்கள் எம் மத்தியில் இல்லாமையுமே காரணம். 1600ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள் எம்வசம் உள்ளன. அதில் உள்ள தமிழ் வாக்கியங்கள் 1600ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்டவை. அவற்றைத் தற்போது வாசிக்க முடியாதுள்ளது.
மிகவும் பொக்கிசமான ஓலைச் சுவடிகளை பயன்படுத்த முடியாமல் எம்மில் பலர் அவற்றினை பராமரிக்க மட்டுமே செய்கின்றனர் என்ற விடயம் எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. எமது நீண்ட முயற்சியின் பயனாக இந்தச் சுவடிகளில் உள்ள எழுத்துக்களை மிகத் திறமையாக கற்றறிந்த ஓர் பாரம்பரிய தமிழ் எழுத்துக்கள் சார்பான பட்டதாரியையும் அவ்வாறுள்ள விடயத்தினை வாசித்து கூறும்போது அதன் பொருளைக் கூறும் ஆற்றல் கொண்ட ஓர் சித்த வைத்தியத்தில் பாண்டித்தியம் பெற்றவரையும் அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்தோம். அவர்கள் வட மாகாணத்தில் இத் துறையில் உள்ளவர்களுக்கு அவற்றைக் கற்பிக்கும் வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளோம். பயிற்சியும் எமது சுவடிகளை வைத்தே இடம்பெறுவதால் ஏக காலத்தில் அந்தச் சுவடிகளும் மொழிபெயர்க்கப்படக் கூடியதான வகையிலேயே அவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து வரும் இருவரும் முதல் கட்டமாக ஒரு மாதமே இங்கு தங்கியிருந்து எமது சித்த வைத்தியத்துறை மாணவர்களிற்கு கற்பிக்கும் ஒழுங்கமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கற்பதற்காக இதுவரையில் 120பேர் தேர்வு செய்யப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன– என்றார். (ந-101)

## இந்தியப் பிரதமரைச் சந்திக்க அனுமதிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 9
வடக்கு மாகாண மீனவர்கள் இந்திய மீனவர்களால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இந்தியப் பிரதமருடன் கலந்துரையாட நேரம் ஒதுக்கித் தர வேண்டும் என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திடம் நேரடியாகக் கோரிக்கை விடுத்துள்ளது.
இவ்வாறு அந்தச் சங்கத்தின் மன்னார் மாவட்டப் பிரதிநிதி எம்.என்.ஆலம் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
30 ஆண்டு காலப் போரில் அழிவுகளைச் சந்தித்த நாம் தற்போது எம்மை மீளக் கட்டியெழுப்ப முயல்கின்றோம். இந்திய இழுவைப் படகுகள் ஆயிரக்கணக்கில் எமது பகுதிக்குள் வந்து கடல் வளத்தை அள்ளிச் செல்கின்றன. எமக்கு பெரும் பொருளாதார இழப்பு ஏற்படுகின்றது. எமது பிரச்சினைகள் தொடர்பாக இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான்கு மாவட்டப் பிரதிநிதிகளும் கையொப்பமிட்டு அனுப்பியுள்ளோம்." என்றார். (ந-101)

## சிறு பயிற்சிகளின் மூலம் நோய்கள் குணமடையும்

### பிரதிபலிப்பு பயிற்சியாளர் இராஜேஸ்வரி தெரிவிப்பு

உடலில் காணப்படும் நரம்புகளின் பாதிப்பே உடலில் தாக்கங்களை ஏற்படுத்துகிறது. அவற்றை பயிற்சிகள் மூலம் குணப்படுத்த முடியும். எந்த நோய் ஏற்பட்டாலும் அதன் ஆணி வேராகக் கருதப்படும் நரம்பின் இணைப்பு உள்ள கை, கால்பாதம் ஆகியவற்றில் சிறு பயிற்சி செய்யும் போது நோய்கள் குணமடைய வாய்ப்புகள் உள்ளன.
இவ்வாறு பிரதிபலிப்பு பயிற்சியாளர் திருமதி இராஜேஸ்வரி ஈஸ்வரஞானம் தெரிவித்தார்.
சாவகச்சேரி சங்கத்தானை சாரதா சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று பிரதிபலிப்பு பயிற்சி மைய ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
லண்டன் மாநகரில் பிரதிபலிப்பு பயிற்சிக்கு பெறுமதிப்பு உள்ளது. இந்தப் பயிற்சி முறைகளை இலங்கையில் செய்முறைகள் மூலம் விளக்கவதற்காகவே வந்துள்ளோம். வடமராட்சியில் பெருமளவு நோயாளர்கள் பயிற்சிகளை மேற்கொண்டு பயன்பெற்றுள்ளனர். என்றார்.
இந்தப் பயிற்சி முறைகள் பற்றிய விளக்கங்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி மன்னாரிலும் 20 ஆம் திகதி வவுனியாவிலும் அதன் பின்னர் கிளிநொச்சியிலும் நடத்தப்பட்டு ஜூன் முதலாம் திகதி தொடக்கம் பத்து தினங்கள் யாழ்ப்பாணத்திலும் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் 076 410 8415 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ள முடியும்– என்றார். (ந-9)

## பாடசாலை மாணவருக்கு தொடர்பாடல் பயிற்சிகள்




கரணவாய், மே 9
சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தால் பாடசாலை மாணவர்களுக்கு வன்முறையற்ற தொடர்பாடல் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.
நேற்று தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்தில் தரம் 6 ,7 மாணவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன . குறித்த அமைப்பின் நிர்வாக அலு வலர் எஸ்.தேவராசா தலைமையிலான குழுவினர் பயிற்சிகளை வழங்கினர். (த-108)

## மாவடி இந்து இளைஞர் நடத்தும் பாரம்பரிய விளையாட்டு விழா

சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றம் நடத்தும் பாரம்பரிய விளையாட்டு விழா நாளை புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.
இளைஞர் மன்றத்தின் தலைவர் எஸ். சிவஜீவன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக மாவடி ஞான வைரவர் பரிபாலன சபை யின் தலைவர் த.சிவசுப்பிர மணியம் கலந்து கொள்வார்.
அன்றையதினம் பிற்பகல் 2 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும், தேங்காய்ப் போர், பாலர் பிரிவினருக்கான கேக் சாப்பிடும் போட்டி, தயிர் முட்டி உடைத்தல் போட்டி, ஏல விற்பனை, ஏல விற்பனைக்கான தேங்காய்ப் போர் என்பன இதில் இடம்பெறவுள்ளன.
தொடர்ந்து எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு வீதியோட்டப் போட்டி இடம்பெற்று பிற்பகல் 2 மணிக்கு வினோத உடைப் போட்டி, மெதுவான சைக்கிள் ஓட்டம், சங்கீதக் கதிரை, திருமணமானவர்களுக்கான போட்டி, தலையணைச் சண்டை, கயிறு இழுத் தல் என்பன இடம்பெறவுள்ளன என நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (த-21)

## இஞ்சி செய்கை வெற்றி

யாழ்ப்பாணம், மே 9
யாழ்.குடாநாட்டில் விவசாயிகள் மேற்கொண்ட இஞ்சிச் செய்கை பெரும் வெற்றியளித்துள்ளது.



65 வரையிலான விவசாயிகள் இஞ்சிச் செய்கையில் ஈடுபட்டனர். ஒவ்வொரு செய்கையாளர்களுக்கும் மானிய விலையில் ஐம்பது கிலோவரையிலான இஞ்சிக் கிழங்குகள் வழங்கப்பட்டன என்று வட மாகாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.
இஞ்சிச் செய்கை மிகவும் நுட்பமாகவும் அதற்காக தொழில்நுட்பத்துடனும் கையாள்வதன் ஊடாக செய்கையாளர்கள் அதிக பயனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ந-17)

## சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம் தொடர்கின்றது

வவுனியா, மே 9
வவுனியாவில் சுகாதாரத் தொண்டர்கள் நிரந்தர நியமனம் கோரி நடத்தும் போராட்டம் நேற்று 5 ஆவது நாளாகத் தொடர்ந்தது.
15 ஆண்டுகளுக்கு மேலாகத் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர். தமக்குத் தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
அதேவேளை, சுகாதாரத் தொண்டர்களின் போராட்டத்தால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் சிக்கல் நிலை ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது. (ந-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறட்சியால் விவசாயிகள் சிறுபோகத்தில் ஆர்வமில்லை

முல்லைத்தீவு, மே 9
முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சியால் சிறுபோகச் செய்கை குறைவடைந்துள்ளது. 9 கமநல சேவை நிலையங்களின் கீழ் 2017ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 459 விவசாயிகள் சிறுபோகச் செய்கை மேற்கொண்டனர். அவர்களுக்கான உர மானியக் கொடுப்பனவுகளாக 3 கோடியே 18 லட்சம் ரூபா பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டில் நிலவி வரும் கடுமையான வறட்சியால் குளங்களில் நீர் வற்றியுள்ளது. கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக செய்கையுடன் ஒப்பிடுகையில் இந்த முறை சிறுபோக நெற்செய்கையின் அளவு மிகக் குறைவடைந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகப் பெரிய குளங்களான வவுனிக்குளம் மற்றும் முத்துஐயன்கட்டுக் குளம் ஆகிய இரு நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் இந்த முறை சிறுபோக நெற்செய்கை முழுமையாகவே மேற்கொள்ளப்படவில்லை. அதே போன்று நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள குளக் காணிகளிலும் மற்றும் கமநல சேவை நிலையங்களின் கீழ் உள்ள சுமார் 200க்கு மேற்பட்ட நடுத்தர மற்றும் சிறிய குளங்களின் கீழ் சிறுபோக நெற்ச்செய்கை மேற் கொள்ளப்படவில்லை.

அதனால் விவசாயிகள் பொருளாதார ரீதியாகப் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் 783 விவசாயிகள் 783 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் அவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக ஏக்கருக்குத் தலா 5 ஆயிரம் ரூபாவாக 39 லட்சத்து 15 ஆயிரம் ரூபாவும், உடையார் கட்டு கமநல சேவை நிலையத்தின் கீழ் 750 விவசாயிகள் 600 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் அவர்களுக்கு 30 லட்சம் ரூபாவும், பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 925 விவசாயிகள் 2771.25, ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் அவர்களுக்கு 1 கோடியே 38 லட்சத்து 56 ஆயிரத்து 250 ரூபாவும், குமுளமுனை கமநல சேவை நிலையத்தின் கீழ் 4 விவசாயிகள் 12 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் அவர்களுக்கு 60 ஆயிரம் ரூபாவும், முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் கீழ் 275 விவசாயிகள் 600 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் அவர்களுக்கு 30 இலட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

ஒலுமடு ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் 250 விவசாயிகள் 500 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் 25, லட்சம் ரூபாவும், கொக்குத்தொடுவாய் கமநல சேவை நிலையத்தின் கீழ் 14 விவசாயிகள் 40 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் 2 லட்சம் ரூபாவும், ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழ் 275 விவசாயிகள் 343.75 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் 17 லட்சத்து 18 ஆயிரத்து 750 ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்தின் கீழ் 183 விவசாயிகள் 386 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் 19 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன - என்றார். (ற -101)



கொழும்பு அரசால் நடைமுறைப்படுத்தப்படும் போர் வீரர்கள் தினம் பலாலியில் நேற்று காலை நடைபெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது. பலாலி இராணுவத் தலைமையகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தின் உயர் அரச அதிகாரிகள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற – 5,106)

## இந்தியாவைப் பகைப்பதற்கு அனுமதிக்க வேண்டாமாம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கு ஆனந்தசங்கரி கடிதம்

யாழ்ப்பாணம், மே 9
இந்தியாவுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம். அதற்கு அனுமதியளிக்கவும் வேண்டாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு ஆலோசனை கூறியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி. இரா.சம்பந்தனுக்கு அனுப்பப்பட்டது என்று தெரிவித்து அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது

தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்களை கடும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன். ஒரு நாட்டை மட்டுமல்ல அந்த நாட்டு மக்களின் உணர்வுகளையும் புண்படுத்தும் வகையில் அவர்கள் அறிக்கைகள் விட முடியாது. சிந்தனையற்ற செயற்பாடுகள், அறிக்கைகள் போன்றவை கூடுதலாக தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்களிடமிருந்து வெளி வருவது, இந்தியாவுடனான நட்பையும் நல்லெண்ணத்தையும் கடுமையாக பாதிக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்களோ நானறியேன்.

அரசியலில் மிகவும் அனுபவமுடையவரும், இந்தக் கூட்டமைப்புக்கு தலைமை தாங்கும் நீங்கள் இந்தியாவுடன் படிப்படியாக குறைந்து வரும் நட்புறவையும், நல்லெண்ணத்தையும் வளர்த்தெடுக்க தவறி விட்டீர்கள்.

இந்தியா அயல்நாடு. எமக்கு இடர் ஏற்படும்போது முதலாவதாக வந்து நிற்பதே அவர்கள்தான். பல சிரமத்துக்கு மத்தியில், எமது நாட்டு மக்களுக்கு உதவ முன்வருகின்றவர்களை, பல தரப்பட்ட அறிக்கைகளைவிடுத்து, அவர்களின் மன உணர்வுகளை புண்படுத்த வேண்டாம் என்று ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கிறேன். எமது பிரச்சினையை தீர்த்து வைக்கக்கூடிய தகுதியுடைய நாடு இந்தியா மட்டுமே. இறுதித் தீர்வு ஏற்படும் வரை அதனுடைய செயற்பாட்டில் எவரும் தலையிடக் கூடாது.

எமது பிரச்சினைக்கு ஆதரவு கோரி தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தென்னாபிரிக்காவுக்குச் சென்றமை பல இந்தியர்களை மட்டுமல்ல எமது மக்கள் மத்தியிலும் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதை நீங்கள் கவனித்திருப்பீர்கள் என நினைக்கின்றேன். உங்களுடைய சீனப் பயணம் எதிர்க்கட்சித் தலைவர் என்ற கோதாவில் இடம்பெற்றிருந்தாலும் கூட அது தேவையற்றது.

குளவிக்கூட்டுக்கு கல்லெறிந்து எவரையும் சங்கடத்திற்குள்ளாக்க நான் விரும்பவில்லை. மக்கள் உங்களிடமிருந்து எதனை எதிர்ப் பார்க்கிறார்கள் என்பதை அறிந்திருப்பீர்களென நம்புகிறேன். என்றுள்ளது. (ற - 5)



## யாழ். நகர அபிவிருத்தித் திட்டத்தில் ஆரியகுளத்தின் சீரமைப்புப் பணி ஆரம்பம்

### மாநகர சபை பொதுசனத் தொடர்பு அலுவலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மே 9
யாழ்ப்பாண நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், நகரிலுள்ள குளங்களைப் சீரமைக்கும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக, ஆரியகுளம் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர சபையின் பொதுசனத் தொடர்பு அலுவலர் ச.லோகசிவம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலக வங்கியின் நிதி உதவியில் யாழ்ப்பாண நகர அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது. இந்தத் திட்டத்தில் யாழ்ப்பாண நகரில் உள்ள குளங்களைச் சீரமைப்பதும் ஓர் பிரிவாக உள்ளது.

இதற்கு அமைவாக, மாவட்டச் செயலகத்தின் உதவியுடன் யாழ்ப்பாணம் ஆரிய குளத்தைத் துப்புரவாக்கும் நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

ஆரிய குளம் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டது. கழிவுகளால் நிரம்பியும், பற்றைகள் சூழ்ந்தும் காணப்பட்டது. யாழ்ப்பா [illegible] காணப்பட்டது. அதனைச் சீர் செய்ய வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் மாநகரசபை ஆணையாளருடன் கலந்துரையாடினார். அதற்கு அமைவாக நாமும் ஆளுநர் அலுவலகமும் சேர்ந்து குளத்தை சுத்தப்படுத்தும் நடவடிக்கையை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தோம்.

குளத்தின் நீர்ப் பரப்பின் மீது பச்சை நிறமாக படர்ந்துள்ள தாவரத்தால் குளத்தில் நைத்திரஜன் செறிவு அதிகமாக காணப்பட்டது. இதனால் அருகில் உள்ள கிணறுகளுக்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. குளத்தில் உள்ள கழிவுகளை அகற்றி, அதனைச்சூழ உள்ள பகுதியினை சீரமைக்கும் பணிகளில் எமது ஊழியர்களை நியமித்துள்ளோம் - என்றார். ஒரு நாள் துப்புரவாக்கலின் போது 27 தடவைகள் உழவு இயந்திரங்கள் மூலம் கழிவுகள் அகற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. பிளாஸ்ரிக் கழிவுகள், இதர கழிவுகள் அவற்றில் அடங்கியிருந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது. குளத்தின் வெளிப்புறம், பிரதான வாய்க்கால் என்பனவும் துப்புரவாக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5,ரி)

## விவசாய பட்டதாரிகளுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறிய விவசாய பட்டதாரி மாணவர்களுக்கான ஒன்றுகூடல் எதிர்வரும் 14 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கிறீன்கிராஸ் விருந்தினர் விடுதியில் நடக்க வுள்ளது.

அதில் வடக்கு மாகாணத்தின் விவசா யத்துறையில் விவசாயப் பட்டதாரிகளின் வகிபங்கு தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய அனைத்து விவசாய பட்டதாரிகளும் தவறாது கலந்துகொள்ள வேண்டும் என்று ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். (ற - 8)



இறுதிப் போரின்போது காயமடைந்து முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிறப்புக் காற்று நிரப்பும் படுக்கை மெத்தைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று வழங்கப்பட்டன. மோட்டிவேசன் லங்கா நிறுவனம் அவற்றை வழங்கியது. வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் சுகாதார மேம்பாட்டு நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான நடமாடும் மருத்துவ சேவைபெறும் பயனாளிகளுக்கே அவை வழங்கப்பட்டன. (ற - 8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிடோம்

## இரணைதீவு மக்கள் உறுதி

கிளிநொச்சி, மே 9

தமது சொந்தக் காணிகளில் மீள்குடியமர்வு செய்யுமாறு வலியுறுத்தி இரணைதீவு மக்கள் முன்னெடுக்கும் சுழற்சி முறையிலான போராட்டம் நேற்று 8ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

"எமது சொந்தக் காணிகளில் எங்களை மீள்குடியமர்வு செய்யும் வரை சுழற்சி முறையிலான எமது போராட்டத்தை நாம் கைவிடப் போவதில்லை" என்று இரணைதீவு மக்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது: "நல்லாட்சி எனக் கூறிக் கொள்ளும் மைத்திரி அரசு, போர் நிறைவடைந்து 8 வருடங்கள் கடந்த பின்னரும், எங்களை எமது சொந்தக் காணிகளில் மீள்குடியமர்வு செய்ய முடியாத அரசாகக் காணப்படுகின்றது. கடற்படை வசமுள்ள எமது பூர்வீக மண்ணை விடுவித்து அங்கு சுதந்திர மாகத் தொழில் செய்யவும், அங்கு நாம் வசிப்பதற்கும் அனுமதி அளிக்கும் வரை போராட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம்.



பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இரணைதீவுக்கு நேரில் வந்து மக்களின் வாழ்விடங்களை ஆராய்ந்து, மீள்குடியமர்வு தொடர்பாக உரிய முடிவெடுப்பார் என்று ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அவர் இங்கு வருகை தர வேண்டும். மீள்குடியமர்வு, எமது வாழ்வாதரம் குறித்து கவனம் செலுத்த வேண்டும்." -என்றனர்.

**பின்னணி**

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள இரணைதீவில் மீள்குடியமர்த்துமாறு குறித்த பிரதேச மக்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் சுழற்சி முறையிலான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இரணைமாதா நகர் பகுதியில் 336 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 218 பேரும், நாச்சிக்குடா பகுதியில் 23 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றனர். (ஐ-6)

## ஓட்டோ விபத்தில் பெண் காயம்

முதன்மைச் சாலையில் சென்று கொண்டிருந்த ஓட்டோ சில்லு இறுகி அருகில் உள்ள வீதியோர மதிலுடன் மோதியதில் அதில் பயணித்த பெண் முகத்தில் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் பி.ப. 2.00 மணியளவில் பெரிய அரசடிப் பகுதி ஏ 9 சாலையில் இடம் பெற்றுள்ளது.

தெல்லிப்பளையில் நடைபெற்ற திருமண நிகழ்வுக்குச் சென்று விட்டு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் சம்பவம் இடம்பெற்றதெனவும், காயமடைந்த மீசாலையைச் சேர்ந்த பெண் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## ராஜயோக நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம்,மே 9

சங்கானை பட்டினசபை வீதியில் அமைந்துள்ள பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பொது மக்கள் நன்மை கருதி "சுகவாழ்வும் நற்பண்புகளும்" எனும் கருப்பொருளில் பல்வேறு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செல்வின் இரேனியஸால் ஆரம்பிக்கப்பட்டு நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை 3 தினங்கள் மாலை 7 மணி வரை பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

நாளை புதன் கிழமை மாலை 4 மணிக்குச் சிறப்பு தியான நிகழ்வும் மறுநாள் 11ஆம் திகதி வியாழக் கிழமை மாலை 4 மணிக்கு கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (த-10)

## கஞ்சாவுடன் கைதாகிய இந்தியர்கள் விடுதலை

மன்னார்க் கடற்பரப்பில் கடந்த ஆண்டு கஞ்சாப் பொதிகளுடன் கைது செய்யப்பட்ட 3 இந்தியர்களும் நேற்று மன்னார் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கஞ்சாப் பொதிகள் கடத்தி வந்த குற்றச்சாட்டில் இவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். இந்த மூவரையும் மன்னார் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தித் தடுப்புக்காவலில் வைத்திருந்தனர்.

இவர்கள் நேற்று மன்னார் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டு யாழ். இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டனர். இவர்களை இந்தியத் துணைத் தூதரகத்தினர் யாழ்ப்பாணம் அழைத்து வந்து விடுதி ஒன்றில் தங்க வைத்துள்ளனர். குறித்த மூவரும் விரைவில் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி எதிர்வரும் 11ஆம் திகதி இலங்கை வரவுள்ள நிலையில் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தியக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருக்கலாம் எனக் கூறப்பட்டது. (த-101)


## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல் வேலி |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 100 |
| கத்தரி | 80 | 110 | 140 | 100-120 |
| கரட் | 260 | 180 | 200 | 160-300 |
| மரவள்ளி | 60 | 80 | 80 | 50-60 |
| பயிற்றை | 80 | 140 | 160 | 140 |
| பாகல் | 140 | 200 | 180 | 200 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 90 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 180 | 140 | 200 | 160 |
| பூசணி | 60 | 60 | 60 | 60 |
| தக்காளி | 100 | 90 | 100 | 150-160 |
| வாழைக்காய் | 60 | 40 | 30 | 50 |
| கீரை | 20 | 30 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 40 | 20 |
| பச்சை மிளகாய் | 100 | 160 | 140 | 160 |
| புடோல் | 80 | 80 | 100 | 100 |
| கோவா | 140 | 160 | .160 | 160 |
| வெண்டி | 100 | 80 | 100 | 80 |
| போஞ்சி | 180 | 160 | 140 | 180 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 120 |
| தேங்காய் | 70 | 65 | 50-60 | 60-70 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 100-120 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 60-80 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 120 | 120 | 160 | 140-160 |
| இராசவள்ளி | 180 | 200 | 260 | 180-200 |
| முருங்கைக்காய் | 180 | 140 | 100 | 140-160 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | கிளிநொச்சி | சாவகச்சேரி |
|---|---|---|
| இறால் | 800 | 800 |
| நண்டு | 300 | 300 |
| கணவாய் | 800 | 800 |
| பாரை | 600 | – |
| சுறா | 700 | 1200 |
| சீலா | 400 | 600 |
| விளை | 400 | 400 |
| முரல் | 400 | 400 |
| கும்பிளா | – | 500 |
| கிளாக்கன் | – | – |
| ஓரா | 400 | – |
| திரளி | 250 | 300 |
| நகரை | 200 | – |
| சூடை | 150 | 150 |
| ஒட்டி | – | – |
| திருக்கை | 300 | 400 |
| மதனம் | 150 | 200 |
| கொய் | 60 | – |
| பாலை | 250 | – |
| வாளை | – | 400 |





பெண்களுக்கான விளையாட்டுச் சப்பாத்துக்களில் நெற் வேலைப்பாடுகளுடன் கூடியவாறான சப்பாத்துக்கள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை பார்ப்பதற்கு மிக எடுப்பாக இருக்கும். இவை 3 ஆயிரத்து 200 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ விபத்தில் கடை நாசம்



யாழ்ப்பாணம், மே 9

யாழ்ப்பாணம் திருநெல் வேலிச் சந்தியில் ரயர் ஒட்டும் கடை தீயில் எரிந்து முற்றாக நாசமானது.

திருநெல்வேலிச் சந்தியில் பலாலி வீதியில் உள்ள ஓர் ரயர் கடையின் மீதே முதலில் தீ பிடித்துள்ளது. அதை அவதானித்த அயலவர்கள் கடை நடத்துநருக்கும் தீ அணைப்புப் பிரிவினருக்கும் அறிவித்தனர். சம்பவ இடத்துக்கு விரைந்த தீ அணைப்புப் பிரிவினர் தமது பணியை முன்னெடுத்தனர்.

தீ அருகில் இருந்த மோட்டார் சைக்கிள் கடையின் மீதும் பரவியது. அங்கிருந்த இரு புதிய மோட்டார் சைக்கிள் உட்பட பல பொருள்கள் சேதமடைந்தன. இழப்பைத் தவிர்க்கும்பொருட்டு உடனடியாகவே கடை உடைக்கப்பட்டு உள்ளே இருந்த இரு புதிய மோட்டார் சைக்கிள்களும் வெளியே எடுக்கப்பட்டன. அதனால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது. ரயர்க் கடையில் இருந்த கொம்பிரசர் மற்றும் ரயர்கள் , தளபாடங்கள் என அனைத்தும் முற்றாக எரிந்து கட்டடத்தின் கூரைகள் இடிந்து வீழ்ந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

"திருநெல்வேலிச் சந்திப் பகுதியில் பல ஆண்டுகளாக தொழில் புரிகின்றேன். நேற்றுஅதிகாலை ஒரு மணியளவில் ரயர்க் கடை தீப்பற்றி எரிந்துள்ளது. தீ பரவலுக்கு விசமிகளின் செயற்பாடே காரணம் என்றே நான் முழுமையாக நம்புகின்றேன். எனது கடைக்கு அருகில் தீ வருவதற்கான சந்தர்ப்பம் இல்லை. கடையைப் பூட்டிய பின்பு மின் இணைப்புக்கான முதன்மை இணைப்பையும் நிறுத்தி விட்டே வீடு சென்றேன். மின் ஒழுக்கும் ஏற்பட சந்தர்ப்பம் இல்லை. கடையில் விளக்குகள் எவையும் கொளுத்தவும் இல்லை. இது விசமிகளாலேயே தீயிடப்பட்டிருக்க வேண்டும்" என்று ரயர்க்கடையின் உரிமையாளரான சந்திரன் தெரிவித்தார். கோப்பாய் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (ந -4, 101, 106)

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாவிடில் அமைச்சரின் வீட்டை முற்றுகையிடுவோம்

## கூட்டு எதிரணியினர் எச்சரிக்கை

கொழும்பு,மே 9

உள்ளூராட்சி சபைத் தேர்தலை விரைவில் நடத்தா விட்டால் அமைச்சர் பைசர் முஸ்தபாவின் வீட்டை முற்றுகையிடுவோம். இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சியினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியகூட்டுஎதிர்க்கட்சியைப்பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணசபை உறுப்பினர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களைப் பார்த்து அரசு அச்சம் அடைந்துள்ளது. அதன் காரணமாகவே தேர்தலை நடத்த அரசு தயக்கம் காட்டி வருகின்றது. தேவையான நேரத்தில் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றோம். எனவே, விரைவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு நடத்த வேண்டும். அவ்வாறு இல்லாது போனால் அமைச்சர் பைசர் முஸ்தபாவின் வீட்டை முற்றுகையிடுவோம். - என்றனர். (ஐ)

## மல்வானை காணி வழக்கில்

# பசிலுக்கும், நடேசனுக்கும் குற்றப்பத்திரிகை கையளிப்பு

கொழும்பு, மே 9

மல்வானை, மாப்பிட்டிகம பிரதேசத்தில் 16 ஏக்கர் காணியொன்றை விலைக்கு வாங்கி அதில் அதிசொகுசு வீடொன்றையும், நீச்சல் தடாகமொன்றையும் அமைத்திருந்தமை தொடர்பில் வழக்குத்தொடரப்பட்டிருந்த முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவுக்கும், வர்த்தகரான திருக்குமரன் நடேசனுக்கும் கடந்த 3ஆம் திகதி கம்பஹா மேல் நீதிமன்ற நீதியரசர் பிரியந்த பர்னாந்துவின் முன்னிலையில் சட்டமா அதிபரின் பாரதூரக் குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்டது.

பிரதிவாதிகள் இருவரையும் ஏற்கனவே பூகொட நீதிமன்றம் வழங்கியிருந்த பிணைகளின் கீழ் விடுவிப்பதாக நீதியரசர் அறிவித்தார்.

பசில் ராஜபக்ச இரு வாரங்களுக்கு ஒருமுறை கொழும்பு நிதிமோசடிப் பொலிஸ் பிரிவில் பிரசன்னமாகவேண்டுமென பூகொட நீதிமன்றம் விடுத்திருந்த உத்தரவை மேல் நீதிமன்ற நீதியரசர் நீக்கினார்.

பசில் ராஜபக்சவை 2016 ஜுன் 6ஆம் திகதி ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும், 20 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளிலும், அதே வருடம் ஒக்டோபர் 17ஆம் திகதி திருக்குமரன் நடேசனை 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளிலும் பூகொட நீதிவான் விடுதலை செய்திருந்தார். (ந)

# இயல், இசை, நாடகம் நாளை இலங்கை வேந்தனில் ஆரம்பம்

யாழ்ப்பாணம் மே 9

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக அரங்கு இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி கலையரங்கில் நாளை புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. நிகழ்வுகள் தொடர்ச்சியாக எதிர்வரும் 14 ஆம் திகதிவரை இடம்பெறும். முதலாம் நாள் நிகழ்வுகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் அ.பௌநந்தி தலைமையில் இடம்பெறவுள்ளது. முதன்மை விருந்தினராக வலிகாமம் வலயத்தின் ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் லீலாம்பிகை செல்வராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ந - 8)

# குளவிகளின் அச்சுறுத்தலால் பாடசாலைக்கு விடுமுறை

கொழும்பு,மே 9

குளவிகள் தாக்கும் அச்சுறுத்தல் காரணமாகப் பாடசாலை ஒன்றுக்கு நேற்று விடுமுறை வழங்கப்பட்ட சம்பவம் கொழும்பில் நடந்துள்ளது. கொட்டாஞ்சேனை, சென்லூசியஸ் கல்லூரி மாணவர்களுக்கே விடுமுறை வழங்கப்பட்டது.

குறித்த பாடசாலையின் வளாகத்திலுள்ள குளவிக் கூடு கடந்த வெள்ளிக்கிழமை கலைந்தது. மாணவர்களையும், ஆசிரியர்களையும் குளவிகள் கொட்டின. மறுநாள் சனிக்கிழமையன்று கொழும்பு மாநகர சபையிலிருந்து அதிகாரிகள் வந்திருந்தனர். அன்றைய தினமும் குளவிகள் மாணவர்களைக் கொட்டின. இந்த விடயத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் வந்து தான் கூடுகளை அகற்ற வேண்டும் எனக் கூறிவிட்டு அவர்கள் சென்றனர். வழமை போல் நேற்றுத் திங்கட்கிழமை காலை பாடசாலை கூடியது. காலைக் கூட்டம் நடைபெறும் போது அந்தப் பகுதி களைச் சூழ குளவிகள் ரீங்காரமிட்டுத் திரிந்தன. அவை கொட்டிவிடும் என்ற அச்சத்தில் காலைக் கூட்டம் முடிவடைந்தவுடன் மாணவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ந -ஐ)

# மண்டபம் அகதி முகாமில் மோதல் பொலிஸார் ஐவர் காயம்

கொழும்பு,மே 9

தமிழகத்தின் மண்டபம் அகதி முகாமுக்குள் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில், தமிழகப் பொலிஸ் அதிகாரிகள் உட்பட 5 பொலிஸார் காயம் அடைந்தனர் என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,"இராமேஸ்வரம் அருகே மண்டபத்தில் உள்ள முகாமில் இலங்கை அகதிகள் ஆயிரத்து 900 பேர் உள்ளனர். இந்த முகாமுக்குள் கடந்த சனிக்கிழமை தேவாலயத் திருவிழா இடம்பெற்றது. அன்றிரவு தேவாலயம் முன்பு இன்னிசைக் கச்சேரி நடந்தது. அதன் போது மது போதையில் இருந்த அகதிகள் சிலர் கூச்சலிட்டு, நடனமாடினர். கடமையில் இருந்த பொலிஸார் அகதிகளைக் கட்டுப்படுத்தினர். ஆத்திரமடைந்த அகதிகள் பொலிஸார் மீது கல் வீசித் தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில் மண்டபம் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட 5 பொலிஸார் காயமடைந்தனர். அவர்கள் இராமநாதபுரம் அரச மருத்துவமனையில்சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய 6 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் - என்றுள்ளது. (ஐ)

**அறை வாடகைக்கு**

தெஹிவளைச் சந்தியிலிருந்து 500m தூரத்தில் இரண்டு பெண்களுக்கு அறை வாடகைக்கு உண்டு.

**076 790 6092**

**தவறிவிட்டது**

தாவடியிலிருந்து யாழ்ப்பாணம் வரை இடைப்பட்ட பகுதியில் ஒரு தொகைப் பணம் (வெளிநாடு) வெள்ளிக்கிழமை 05.05.2017 அன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.

**077 815 2103**

**காணி விற்பனைக்கு**

நாவற்குழி A9 பிரதான வீதியில் இருந்து உள்றோட் அமுதா வீதியில் நில.பர.7 குளி. 13 அளவுள்ள வெறுங்காணி விற்பனைக்குண்டு.

**077 243 0256, 076 410 1833**

**கேள்விப்பத்திரம் கோரல்**

**யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் (வ-து)**

**கடைத்தொகுதி வாடகைக்கு விடுதல், நிலம் குத்தகைக்கு வழங்குதல்**

எமது சமாச வளாகத்தின் உட்பகுதியில் அமைந்துள்ள அரை நிரந்தரக் கட்டடக் கடைத்தொகுதிகளை வாடகைக்கு வழங்குவதற்கும் இக் கடைத் தொகுதிகளுக்கு அருகாமையிலுள்ள நிலத்துண்டுகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும் கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் அலுவலக நேரத்தில் சமாச பொதுமுகாமையாளருடன் தொடர்புகொண்டு கடைத்தொகுதிகளைப் பார்வையிடலாம். அலுவலக நேரத்தில் மாதிரி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேற்பக்கத்தில் "**கடைத்தொகுதிக்கான கேள்விப்பத்திரம்**" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 26.05.2017 ஆம் திகதிக்கு முன் **தலைவர், யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், இல.95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் நிராகரித்தல் தொடர்பில் சமாசத்தின் பணிப்பாளர் சபையின் முடிவே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் (வ-து)**
**யாழ்ப்பாணம்.**
**09.05.2017** (aja/in/1952)

**சட்டக் கல்லூரி பிரவேசப் பரீட்சை 2017**

**வவுனியாவில் நடைபெறும் செமினார்.**

**இடம்** :- வவுனியா புகையிரத நிலையத்துக்கு முன்னால் உள்ள விவசாய திணைக்கள ஒன்று கூடல் மண்டபம்.

**திகதி** :- 13.05.2017 - சனிக்கிழமை

**நேரம்** :- 9 -3 மணிவரை.

சகல பாடங்களும் நடைபெறும்.

**077 670 5511**

**அழையுங்கள்**

**வானம்பாடி வில்லிசைக்குழு**

077 444 7664 - தென்மராட்சி

077 803 0350 - வடமராட்சி

**பளை நகரத்தில்**

**சிறீ சாய் மெடிக்கல்**

(ஆங்கில வைத்திய நிலையம்)

✔ சகல நோய்களுக்குமான வைத்தியச் சிகிச்சை வழங்கப்படுகின்றது.

✔ பார்வையிடும் நேரம் கிழமை நாள்களில் பிற்பகல் 4.30 - 8.00 சனி, ஞாயிறு காலை 8 தொடக்கம் நண்பகல் 12 மணிவரை பிற்பகல் 4.30 தொடக்கம் இரவு 8 மணிவரை.

**076 707 8049**

**COMPUTER COURSES**

Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpack, M.Y.O.B

Diploma in **Video Editing** — Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio,

Diploma in **AutoCAD** — 2D & 3D Modeling

Advanced Diploma in **Hardware & Networking**

C++, JAVA

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Hotline:0777 173517

DMI COMPUTER EDUCATION

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (TVEC REG.NO P25/0056)

**DMI COMPUTER EDUCATION**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, ... Tel:.021 222 4403 |
| நெல்லியடி | M. M. V வீதி, ... Tel:,021 226 2470 |
| சாவகச்சேரி | No.174, ... (HNB அருகில்) Tel:.021 227 0775 |
| சுன்னாகம் | No.130, K.K.S வீதி, சுன்னாகம்.(NSB அருகில்) Tel:.021 224 1970 |
| கிளிநொச்சி | No.19 ... Tel:.021 228 5655 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர் சம்பளப் பிரச்சினைக்கு சமரசம் மூலம் தீர்வு

## காணுமாறு மேன்முறையீட்டு நீதிமன்று உத்தரவு

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான கூட்டு ஒப்பந்தப் பிரச்சினை தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது. அதைச் சமரசம் மூலம் தீர்ப்பதே சிறந்தது. சமரசம் காண முடியாதவிடத்து மனுவில் பெயர் குறிக்கப்பட்டுள்ள பிரதிவாதிகள் அடுத்து வரும் அமர்வில் ஆட்சேபனைகளைப் பதிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிராக மக்கள் தொழிலாளர் சங்கம் தாக்கல் செய்திருந்த ரிட் மனு மீதான விசாரணை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே இவ்வாறு உத்தரவிடப்பட்டது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தைத் தீர்மானிக்கும் கூட்டு ஒப்பந்தம் தொழில் சட்டத்துக்கும், இயற்கை நீதிக்கும், ஏற்கனவே அனுபவித்து வந்த உரிமைகளுக்கும் எதிரானது என்பதை ரிட் மனுவில் மக்கள் தொழிலாளர் சங்கம் சுட்டிக்காட்டியிருந்தது.

அதற்கு ஆட்சேபனையைத் தெரிவிக்க எதிராளிகள் அவகாசம் கோரினர். இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் காலம் தாழ்த்தாது சமரசத்துக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் எஸ். துரைராஜா தெரிவித்தார். வழக்கை மக்கள் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி இளையதம்பி தம்பையா தாக்கல் செய்திருந்ததுடன் அவரே முன்னிலையாகி வாதங்களை முன்வைத்தார்.

"08.05.2017ஆம் திகதியில் இருந்து நான்கு வார காலத்துக்குள் சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பில் தொழில் அமைச்சர் மற்றும் தொழில் ஆணையாளருடன் கலந்துரையாடி மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு கூட்டு ஒப்பந்தத்தை தொழில் ஆணையாளர் 2016 ஒக்டோபர் 16 ஆம் திகதி அரச வர்த்தமானியில் வெளியிட்டமை சட்டத்துக்கு முரணானதா என்பது பற்றிய முடிவை எடுக்க வேண்டும்.

இது சட்ட முரணானதெனில் அந்தத் திகதியிலிருந்து இரண்டு வாரத்துக்குள் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துடனும், சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுடனும் கம்பனிகளுடனும் கலந்துரையாடி இந்தப் பிரச்சினையை இணக்கப்பாட்டின் அடிப்படையில் சமரசமாகத் தீர்க்க முன்வர வேண்டும்" என்று நீதியரசர் எஸ். துரைராஜா குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜுலை 4ஆம் திகதி மேற்படி கலந்துரையாடல்கள் பற்றியும், சமரசத் தீர்வு எட்டப்பட முடியுமாயின் அது பற்றியும் சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நீதியரசர் கட்டளையிட்டார்.

இந்தப் பிரச்சினை சமரசமாக தீர்க்கப்படாவிட்டால் தீபாவளிப் பண்டிகை நெருங்கும் போது தோட்டத் தொழிலாளர்கள் மீண்டும் வீதிகளுக்கு இறங்கிப் போராடுவர். இது ஆரோக்கியமாக இருக்காது என்றும் அவர் கூறினார்.

இந்த வழக்கு ஜுலை 5ஆம் திகதி நீதி மன்றத்தில் அழைக்கப்படும். சமரசத் தீர்வு இருப்பின் அன்று அது பற்றி மன்றுக்கு பிரதிவாதிகள் அறிக்கை செய்ய வேண்டும். சமரச தீர்வு இல்லையெனில் பிரதிவாதிகள் அவர்களது ஆட்சேபனையை அன்று பதிவு செய்ய வேண்டும். ஆட்சேபனையை பதிவு செய்ய மேலும் கால அவகாசம் வழங்கப்படமாட்டாது எனவும் நீதியரசர் தெரிவித்தார்.

(ற-ஐ)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை **திருமதி பிரதீபா இந்திரதேவன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தர்மகுலசிங்கம் செல்வாம்பிகை**

கடந்த 02.05.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துள்ளார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பாடசாலை சமூகம்,**
**யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி,**
**அச்சுவேலி.**



## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சுப்பிரமணியம் ரவிக்குமார்**
(பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர் – காங்கேசன்துறை)



தோற்றம்
14.10.1980

மறைவு
24.04.2013

எங்கள் வாழ்வின் பாசமலரே
சித்தத்தை சிவமாக்கி சிந்தனையில் நீராக்கி
நித்தம் நித்தம் சிவ வழிபாடு செய்தீரே அப்பா
ஜெயம் பெற்றிட ஜெகதனில் அவதரித்தீரே
அபயம் கொடுத்து அண்டியோரை அரவணைத்தீரே
பயம் நீக்கி பாலகரை பண்புடன் வளர்த்தீரே
அப்பா ! நீங்கள் இன்றி நாங்கள் வேரோடு சாய்ந்த மரமானோம் அப்பா !
நீங்கள் எங்கு சென்றாலும் உங்கள் நினைவுதான்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

47, லவ்லேன்,
உடுவில்.

மனைவி: இராஜினி
பிள்ளைகள்: ர.பவுர்ணிகா
ர.நித்திலன்

(AKN 118) (14)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



**அமரர் சிற்றம்பலம் குலமணி**

மண்ணகம்
12.08.1946

திதி: பூர்வபக்க சதுர்த்தசி

விண்ணகம்
21.04.2016

பாசம் மிகுந்த எங்கள் தெய்வமே!
அன்று எமை உலகில் நிலைத்திட வைத்தீர்
இன்று உமை நினைத்து நெகிழ்ந்திட வைத்தீர்
என்றும் உம்மைப் போற்றி வாழ்கின்றோம்
என்றும் எம் உயிர் உள்ளவரை எம் பாசம் தொடர்ந்திருக்கும்
இறைவனடி நிலைத்து இன்புறுவீரே!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

(J/8535)(11)


# மட்டு. வடக்கில் 10,000 ஏக்கர் வயல்கள் பாதிப்பு

செங்கலடி, மே 9

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கு எல்லைப் பகுதிகளில் குளங்களுக்குச் செல்லும் நீரை மறித்து விவசாயம் செய்வதனால் வாகனேரி மற்றும் புனாணை நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழுள்ள சுமார் பத்தாயிரம் ஏக்கர் வேளாண்மை கருகி நாசமாகும் அபாயம் தோன்றியுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

பொலன்னறுவை மாதுறுஓயா குளத்திலிருந்து மட்டக்களப்பு வாகனேரிக் குளத்துக்குக் கொண்டு வரப்படும் நீர், புனாணை மேற்கு மற்றும் மயிலந்தனை பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் மறித்து நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

மாதுறுஓயா குளத்திலிருந்து சிறுபோகச் செய்கைக்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகனேரி மற்றும் புனாணை குளங்களுக்கு வருடாந்தம் நீர் வழங்கப்பட்டு வருகிறது.

மதுறுஓயா குளத்திலிருந்து இம்முறை திறக்கப்பட்ட 16 ஆயிரம் ஏக்கர் கனஅடி நீர் மயிலந்தனைப் பகுதியில் சட்ட விரோதமாக மறிக்கப்பட்டதால் விலாலோடை அணை உடைப்பெடுத்து நீர் கடலுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது.

விவசாயிகள் இணைந்து மயிலந்தனையில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட சட்ட விரோத தடுப்பு அணையை அகற்றி வாகனேரி குளத்துக்கான நீர் செல்ல ஏற்பாடு செய்ததுடன் விலாலோடை அணையை மீள அமைக்கும் பணிகளை மேற்கொண்டனர்.

மாதுறுஓயா குளத்திலிருந்து 16ஆயிரம் ஏக்கர் கனஅடி நீர் மூலம் வாகனேரி திட்டத்தின் கீழ் 8456 ஏக்கரிலும், புணானை திட்டத்தின் கீழ் ஆயிரத்து 565 ஏக்கரிலும் சிறுபோக வேளாண்மை செய்யத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக வாகனேரி நீர்ப்பாசனத் திட்ட முகாமைத்துவ குழுத் தலைவர் சிவலிங்கம் புஸ்பாகரன் தெரிவித்ததாவது, "பொலன்னறுவை மாதுறுஓயா நீர்ப்பாசனத் திட்டத்திலிருந்து வாகனேரி நீர்ப்பாசனத் திட்டத்துக்கு வருடாந்தம் 40ஆயிரம் ஏக்கர் கனஅடி நீர் வழங்கப்படும். ஆனால் வறட்சி காரணமாக இந்த ஆண்டு 16ஆயிரம் ஏக்கர் கனஅடி நீர் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது.

மாதுறுஓயாவிலிருந்து வரும் நீர் கடலுக்குச் செல்லாமல் விவ சாயிகளின் ஒத்துழைப்புடன் 17 ஆயிரம் உரப்பை கொண்டு விலாலோடையில் அணை அமைக்கப்பட்டது. இடையிலுள்ள சட்டவிரோத தடுப்பு அணைகள் அகற்றப்பட்ட நிலையில், மயிலந்தனையில் அமைக்கப்பட்ட அணையை மாத்திரம் அகற்ற முடியாமல் இருந்தது. மயிலந்தனைப் பகுதியில் சட்டவிரோத நீர்ப்பாசனம் பெற்று இராணுவத்தினர் விவசாயம் செய்வதனால் குறித்த பகுதியில் தடுப்பு அணை ஏற்படுத்தி கூடுதலான நீர்தேக்கி வைக்கப்பட்டது. இதனால் விலாலோடை அணை உடைப்பெடுத்து விவசாயத்துக்குக் கொண்டுவரப்பட்ட நீர் உப்பாற்றில் கலந்து கடலுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக விவசாயத்தைச் சிறந்த முறையில் மேற்கொள்ள முடியாமல் வேளாண்மை கருகிப்போகும் நிலை ஏற்பட்டது. இதையடுத்து விவசாயிகள் இணைந்து மயிலந்தனையில் அமைக்கப்பட்ட சட்டவிரோத அணையை அகற்றியதுடன், விலாலோடை அணையை மீண்டும் சீரமைக்கும் பணியை மேற்கொண்டனர்.

(ஐ-ய-47)


## முதலாம் ஆண்டு நினைவு

அமரர்
**தியாகராசா ஸ்ரீநாகேஸ்வரன்**



மண்ணில்
08.04.1968

விண்ணில்
20.04.2016

திதி: வளர்பிறை சதுர்த்தசி

எங்கள் குலவிளக்காய் திகழ்ந்த அன்புத் தெய்வமே.
நீங்கள் எம்மைப்பிரிந்து ஓராண்டு மறைந்தது எப்படியோ?
உங்கள் உடம்பு தான் எம்மை விட்டுப் பிரிந்தது.
ஆனால் எப்பவும் எம்முடனே தான் சங்கமித்து
இருப்பது எமக்குத் தெரியும்.
நீங்கள் அழைத்த குரல் இன்றும் காற்றில் கலந்து
எங்கள் காதில் கேட்கிறதே.
நீங்கள் இல்லாமல் சொல்லொணாத்
துயருடன் தடுமாறுகிறோம்.
பாசத்திலும் அன்பிலும் புத்திமதி சொல்லுவதிலும் சரி
உங்களுக்கு நிகர் யாருமே இல்லை.
உங்களுடன் பல்லாண்டு காலம் சங்கமித்து வாழ முடியாத
துர்ப்பாக்கியசாலிகள் யாம்.
எம்மைத் தேற்ற யாருமின்றி, வழியின்றிக்
கனத்த இதயத்துடன் தவிக்கின்றோம்.
மறு பிறப்பிலும் உம்மையே எம் இல்ல நாயகனாக
அடைய வேண்டி, உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

[illegible]
சித்தப்பாமார், சித்திமார், மாமாமார்,
மாமிமார், குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனொளிபாத மலைக்கு இரவில் செல்லத் தடை

கொழும்பு,மே 9

சிவனொளிபாத மலைப் பருவகாலம் நிறைவடைந்த பின்னர், இரவு நேரங்களில் சிவனொளிபாத மலையின் உச்சிக்கு யாத்திரிகள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று சிவனொளிபாத மலை தலைமை விகாராதிபதி பெங்கமுவே தம்பதெனிய தேரர் தெரிவித்தார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி சிவனொளிபாத மலைப் பருவகாலம் நிறைவு பெறுவதை முன்னிட்டு, அரச திணைக்கள அதிகாரிகளுடன் நல்லதண்ணி பௌத்த மத்திய நிலையத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மைக்காலமாக சிவனொளிபாத மலைப் பகுதியில் சமாதானத்தைச் சீர்குலைக்கும் வகையிலும், மூவின மக்களின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்கும் வகையிலும் சில சம்பவங்கள் இடம்பெற்றன. அதனால் பருவகாலம் நிறைவடைந்த பின்னர் யாத்திரிகர்கள் மலையேறுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பகல் வேலைகளில் யாத்திரிகர்கள் மலையேறலாம். அவ்வாறு மலையேறுபவர்கள் நல்லதண்ணி பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தல் வழங்கிய பின்னரே சிவனொளிபாதமலைக்குச் செல்லமுடியும் - என்றார்.

கடந்த டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகிய சிவனொளிபாதமலைப் பருவகாலம் எதிர்வரும் 11 ஆம் திகதியுடன் நிறைவு பெறுகின்றது.

அன்று தேவசிலைகள், ஆபரணங்கள் வாகன பவனியாக இரத்தினபுரி பாலாபெத்த, பெல்மடுல்ல, கலபொத்தலாவ, ரஜமகா விகாரையைச் சென்றடையும். அதேபோன்று பொகவந்தலாவ, பலாங்கொட, இரத்தினபுரி வழியாகவும் நல்லதண்ணி, லக்சபான, அவிசாவளை வழியாகவும் திருவுருவ ஆபரணங்கள் கல்பொத்தாவல ரஜமகா விகாரைக்குக் கொண்டு செல்லப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தன் தலையில் தானே மண் வாரிப் போட்ட மகிந்த



கொழும்பு,மே 9

முன்னாள் அரசதலைவருக்கான பாதுகாப்புக் குறைக்கப்பட வேண்டும் என்று முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவே நீதிமன்றின் உத்தரவைப் பெற்றுக் கொண்டார்.

இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அனுராதபுரம் தாதியர் பயிற்சிக் கல்லூரியின் புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புப் பற்றிப் பேசப்படுகின்றது. எனினும் மகிந்த ராஜபக்சவே, முன்னாள் தலைவரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட வேண்டுமென உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தார். முன்னாள் அரசதலைவருக்கு 30 பாதுகாப்பு உத்தியோகத்தர்களைப் பாதுகாப்புக்கு வழங்குதல் போதுமானது என்றும் மகிந்த நீதிமன்றிடம் கோரினார். அவரது கோரிக்கைக்கு ஏற்ப உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தார். ஆனால் மகிந்த ராஜபக்ச குண்டுத் தாக்குதல்களால் பாதிக்கப்படவில்லை. என்றார்.

அதேவேளை மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களில் மேலும் 49 பேர் நேற்று முன்தினம் முதல் நீக்கப்பட்டனர். இவர்கள் தவிர 39 பொலிஸ் உத்தியோகத்தர்களும் நீக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்கென 199 பொலிஸார் அமர்த்தப்பட்டிருந்தனர். சில நாள்களுக்கு முன்னர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 42 பேர் மகிந்தவின் பாதுகாப்புப் பிரிவிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர். தற்பொழுது அவரின் பாதுகாப்புக்கு 108 பேர் காணப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)



# மகிந்தவின் பாதுகாப்பு நீக்கம் அரசின் சதி

## என்கிறார் டலஸ்

கொழும்பு,மே 9

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்கு இருந்த அதிகாரிகள் நீக்கப்படுவது அரசின் சதி நடவடிக்கையாகும் என்று கூட்டு எதிர்க் கட்சி சார்பு நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புத் தொடர்பில் அரசு பொறுப்புச்சொல்ல வேண்டும்.

மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புத் தொடர்ச்சியாகக் குறைக்கப்படுவது தொடர்பில், அரசிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களின் கருத்துத் தொடர்பாகவும் ஆராயப்பட வேண்டும். எனவும் தெரிவித்தார். (ஐ)

# நாடு கடந்த தமிழீழ அரசால் மூவருக்கு விருது





கொழும்பு,மே 9

நாடு கடந்த தமிழீழ அரசின் வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு ரொறன்ரோவில் உள்ள ஸ்காபொரோ மாநாட்டு நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் 'தந்தை செல்வா ஞாபகார்த்த விருது' ஈழவேந்தனுக்கும், 'மாமனிதர் துரைராஜா ஞாபகார்த்த விருது' கலாநிதி சேவியர் பெர்னான்டோவுக்கும், 'நெல்சன் மண்டேலா ஞாபகார்த்த விருது' தென்னாபிரிக்க மனித உரிமைச் செயற்பாட்டாளரான யஸ்மின் லூயிஸ் சூகாவுக்கும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தந்தை செல்வாவின் பேத்தியான மல்லிகா வில்சன், அமெரிக்க மனித உரிமைகள் சட்டவாளர் ஹெதர் ரயன், கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களான பொப் ஸரோயா, கரி ஆனந்தசங்கரி, ஒன்ராறியோ மாநில சட்டமன்ற உறுப்பினர் ஜாக் மக்லோரன் மற்றும் கவுன்சிலர் நீதன் ஷான் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)



# 5 ஆயிரம் ரூபா நாணயத்தாளை நீக்கி விடுவதற்கு தீர்மானமில்லை

கொழும்பு,மே 9

தற்போது புழக்கத்தில் உள்ள 5 ஆயிரம் ரூபா நாணயத்தாளை நீக்கிவிடும் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் 5 ஆயிரம் ரூபா நாணயத்தாளில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் கையொப்பமிட்டுள்ளார். சிங்கப்பூர் குடியுரிமையுடைய அர்ஜுன் மகேந்திரனின் கையொப்பத்துடன் கூடிய நாணயத் தாள்கள் சட்டரீதியற்றவை என்று கூட்டு எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தியிருந்தனர்.

எனினும், இந்த நாணயத் தாள்களின் சட்டபூர்வத் தன்மை குறித்து எவ்வித சர்ச்சையும் கிடையாது என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதேவேளை, மத்திய வங்கி ஆளுனர் பதவியைப் பெற்றுக்கொள்ளும் போதுஅர்ஜுன் மகேந்திரனின் குடியுரிமை தொடர்பில் சர்ச்சைகள் கிடையாது என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்தார். (ஐ)

# 800 மில். டொலரை இலங்கைக்கு ஆசிய வங்கி கடனாக வழங்கும்

கொழும்பு,மே 9

இலங்கைக்கு இந்த வருடம் 800மில்லியன் டொலர் கடனை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு வருடாந்தம் 400 மில்லியன் டொலர்களைக் கடனாக வழங்கி வந்தது. எனினும் இந்தவருடத்துக்கான கடன் தொகையை இரட்டிப்பாக்கியுள்ளது.

இதுவே இலங்கைக்கு நாம் வழங்கும் அதிகபட்சக் கடன் தொகையாகும் என்று ஆசிய அபிவிருத்திவங்கியின்தெற்காசிய திணைக்களப் பணிப்பாளர் ஹூன் மே தெரிவித்தார். ஜப்பானின் யொக்கஹாமா நகரில் இடம்பெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் 50 ஆவது ஆண்டுக் கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தெற்காசியப் பிராந்தியத்தில் உயர்தர உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டநாடாக இலங்கை நல்லதொரு உதாரணமாகத் திகழ்கிறது. ஏற்கனவே இலங்கை தரமான உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ளது. தற்போது அதற்கு முன்னேற்றகரமான உட்கட்டமைப்பு வசதிகளே தேவையாகவுள்ளது. அது நாட்டின் பொருளாதாரத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியை அதிக வேகத்துடன் முன்னெடுக்கும்" - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## உலக நாடுகள் இனி என்ன செய்யும்?

இலங்கை அரசியலில் கடந்த சில ஆண்டுகளாகவே எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்ட மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. தான் நினைக்கும்போது ஆட்சியைக் கவிழ்க்கும் பலத்தைப் பெற்றுவிட்டேன் என்று முழக்கமிட்டுள்ளார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச. அரச தலைவருக்கான தேர்தலில் தோல்வியடைந்து சில ஆண்டுகளே ஆகியிருக்கும் நிலையில் மீண்டெழுந்து வந்து இந்த முழக்கத்தை அவர் நிகழ்த்தியிருக்கிறார்.

கடந்த மே தினத்தில் தலைநகர் கொழும்பின் காலி முகத்திடலில் கூடிய தனது ஆதரவாளர்களின் கூட்டத்தைப் பார்த்த பின்னரே மகிந்த இப்படி ஆர்ப்பரித்திருக்கிறார். சிங்கள, பௌத்த மக்கள் மத்தியில் தான் இன்னமும் செல்வாக்கிழந்துவிடவில்லை என்பதை நிரூபித்துவிட்டதன் மூலம் தனது ஆதரவாளர்களை உற்சாகப்படுத்தும் விதத்தில் மகிந்தவின் ஆர்ப்பரிப்பு நிகழ்ந்திருக்கிறது.

சிங்கள, பௌத்த சமூகத்தின் மத்தியில் மதிப்பிழந்துவிடாத மகிந்தவின் செல்வாக்கு, பலதரப்பினருக்கும் ஆச்சரியத்தையும், சிறியளவிலான எச்சரிக்கையையும் கொடுத்திருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. குறிப்பாக மகிந்தவை இலங்கையின் அதிகாரத்தில் இருந்து அகற்றுவதற்கு மறைமுக உதவிகளை வழங்கிய நாடுகளுக்கு இது ஒரு சங்கடமான நிலைதான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஒரு தடவை குறிப்பிட்டிருந்தார், இலங்கையில் இனப்பிரச்சினையை இராஜதந்திர முறைகளுக்கூடாகத் தீர்ப்பதன் மூலம் அதனை ஒரு சாத்தியமான முன்னுதாரணமாகக் காட்ட உலகம் விரும்புகின்றது என்று. அது உண்மையும் கூட.

2000ஆம் ஆண்டிலிருந்தே இலங்கையைத் தமக்கான ஒரு பரீட்சார்த்த களமாகத்தான் உலக நாடுகள் பயன்படுத்தி வருகின்றன. அப்போதிருந்த புலிகள், இலங்கை அரசு என்ற இரண்டு தரப்புகளையும் வைத்து பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர அவை முயன்றன. அது முடியாதபோது சம்பந்தப்பட்ட இரு தரப்புகளில் ஒன்றை முற்றாக அகற்றுவதன் மூலம் முடிவை எட்ட முயன்றன. அதற்காகவே போரை அவை முழு மூச்சாக ஆதரித்தன. கொழும்பு அரசுக்கும் வேண்டிய உதவிகள் அனைத்தையும் வழங்கின.

இந்தப் பரிசோதனை முயற்சியில் அந்த நாடுகளால் புலிகளை அழித்து அந்த இயக்கத்தைக் களத்திலிருந்து அகற்றுவதில் வெற்றிபெற முடிந்தது. ஆனால் மறுதரப்பான மகிந்தவைக் கொண்டு பிரச்சினைக்கு முடிவுகட்ட முடியாமல் போய்விட்டது. இதனால் மீண்டும் தமது பரிசோதனையை அவை முன்னெடுத்தன. இந்தத் தடவை போரில் தொடர்புபட்டிருந்த இரண்டாவது தரப்பையும் களத்திலிருந்து அகற்றுவதன் மூலம் தீர்வை எட்டும் முயற்சியாக இருந்தது.

இரண்டாவது தரப்பை அதிகாரத்திலிருந்து வெளியேற்றுவதிலும் உலக நாடுகள் வெற்றியடைந்தன என்றாலும் இன்னமும் இறுதி வெற்றியைப் பெறவில்லை. பரிசோதனை முயற்சி தொடர்கிறது. மைத்திரி ரணில் கூட்டு அரசினை அரியணை ஏற்றியதன் மூலமாவது தீர்வை அடைந்து தனது முயற்சியில் வென்றுவிடத் துடிக்கும் உலக நாடுகளுக்கு மகிந்தவின் இந்த முழக்கமும் எழுச்சியும் நிச்சயம் சவால்தான். இறுதித் தீர்வை நோக்கிப் பயணிக்கும் அவற்றின் பாதையில் உறுதியாக அமர்ந்திருக்கும் பாறாங்கல்லாக மகிந்த இப்போது உருமாறிவிட்டார்.

இனி இந்தப் பாறாங்கல்லைப் பாதையில் இருந்து அகற்றுவதில் அல்லது அதனைச் சுக்குநூறாக்கச் செய்வதில் அவை தமது சக்தியைச் செலவிட்டாக வேண்டும். இந்த நிலை வந்துவிடக்கூடாது என்பதால்தான் இந்தக் கூட்டு அரசைப் பாதுகாக்கவேண்டும் என்று அவை ஆரம்பம் முதலே சொல்லி வந்தன; செயலிலும் காட்டி வந்தன.

அவற்றையெல்லாம் மீறி மகிந்த மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே எழுச்சி பெற்று மிரட்டத் தொடங்கியிருப்பது வெறுமனே உலக நாடுகளின் பலவீனத்தால் மட்டுமல்ல, கூட்டு அரசின் தோல்வியாலும்தான். சொந்த நலன்களுக்காக எதிரியை வளரவிட்டு வேடிக்கை பார்த்ததன் விளைவையே அது இப்போது அறுவடை செய்கிறது. இந்த நிலையில் உலக நாடுகள் என்ன செய்யப்போகின்றன என்பதில்தான் அடுத்த கட்ட அரசியல் தங்கியிருக்கிறது.

# புனரமைப்பின்றிப் புறக்கணிக்கப்பட்ட தென்மராட்சிப் பிரதேசம்

ந.லோகதயாளன்

2 ஆயிரத்து 914 குடும்பங்களைச் சேர்ந்த 86 ஆயிரத்து 812பொது மக்கள் வாழும் ஓர் பிரதேச செயலாளர் பிரிவில் 4 ஆயிரத்து 762 குடும்பங்கள் நிரந்தர வீட்டு வசதிகளின்றி இன்றுவரை கொட்டகைகளிலும், அரை வீட்டுத் திட்டத்தின் கீழான பகுதி வீடுகளிலும் வாழ்வதோடு 3 ஆயிரம் வரையிலான குடும்பங்களுக்கு கழிப்பறை வசதிகளும் இன்றிக் காணப்படும் வட மாகாணத்திலுள்ள ஒரு பிரதேச செயலாளர் செயலாளர் பிரிவாக இன்றுவரை தென்மராட்சி இருந்து வருகின்றது.

போர் வேளையில் வன்னிப்பகுதிக்கும் யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குமான எல்லைப் பகுதியாக விளங்கிய குறித்த இந்தப் பிரதேச செயலாளர் பிரிவில் வாழ்ந்த பெரும்பாலான மக்கள் தொடர் இடப்பெயர்வின் மத்தியிலேயே வாழ்ந்தனர். 1020 சதுரக் கிலோ மீற்றர் பரப்பைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்டம், 15 பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்டது. இதில் 212 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட ஒரேயொரு பிரதேச செயலாளர் பிரிவாகவும், 60 கிராம சேவகர் பிரிவுகளுடனும் காணப்படும் இப்பிரதேசம் ஏ9 வீதியில் எழுதுமட்டுவாழ் முதல் நாவற்குழி வரையிலும் கச்சாய் முதல் வரணிவரையிலுமான பெரும்பிரதேசத்தை உள்ளடக்கியுள்ளது.

### போரின் காட்சிகளாக விளங்கும் கிராமங்கள் கொண்டது தென்மராட்சி

குறித்த தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவின் பல கிராமங்கள் இன்றும் போரின் நேரடிச் சாட்சிகளாகவே காட்சியளிக்கின்றன. தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவு, வடக்கின் மாவட்டங்களில் அதிக மக்கள் தொகையுடன் காணப்படும் பிரதேச செயலாளர் பிரிவான போதிலும் அனைவராலும் மறக்கப்பட்ட பிரதேசமாகவே காணப்படுகின்றது என தென்மராட்சி வாழ் மக்கள் தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

குறிப்பாக தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவின் ஜே/315 கிராம சேவகர் பிரிவான சந்திரபுரம் பகுதியில் மட்டும் 331 குடும்பங்கள் வாழ்கின்றன. அதில் ஒரு அங்கத்தவரை மட்டும் கொண்ட குடும்பமாக 39 குடும்பங்கள் கணக்கிடப்படும் நிலையில், ஏனைய 292 குடும்பங்களில் மட்டும் 88 குடும்பங்கள் இன்றுவரை அரை நிரந்தர வீடுகள்கூட இல்லாமல் ஓலைக் குடிசைகளிலேயே வாழ்கின்றன. இவ்வாறு வாழும் அந்த அவலக் குடும்பங்களில் 11 அரச ஊழியர் குடும்பங்களும் 7 வெளிநாடுவாழ் உறவுகள் உள்ள குடும்பங்கள் நீங்கலாக ஏனைய அனைவருமே நிரந்தரத் தொழிலோ அல்லது நிரந்த வருமானமோ அற்ற குடும்ப உறுப்பினர்களாகவே வாழ்கின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிக குளங்களைக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவாகவும் காணப்படும் தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் சிறிய குளங்கள் அல்லது நீர்த்தேக்கங்கள் என்ற வகையில் 120 நீர்நிலைகள் காணப்படுகின்றன. அவற்றின் மூலம் விவசாயத் தேவைக்குப் போதிய அளவு நீர் பெற இயலாதுள்ளது. 53 குளங்கள் அல்லது நீர்த்தேக்கங்கள் தூர்ந்துபோகும் நிலையில் காணப்படுகின்றன. இன்றுவரையில் இப்பகுதி மக்களில் பெரும்பாலானோர் குளிப்பதற்கு இத்தகைய நீர் நிலைகளையே பயன்படுத்துகின்றனர்.

இதற்கு முக்கிய காரணம் இந்தப் பிரதேச செயலாளர் பிரிவில் வாழும் குடும்பங்களில்1300 குடும்பங்களுக்கு கிணற்று வசதிகளும் கிடையாது. இதேபோன்று கெற்பேலி , கச்சாய் , கிளாலிப் பகுதி என்பவற்றில் அங்குள்ள முன்பள்ளிகள் மற்றும் மக்கள் வாழ்விடங்களும் அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலேயே காணப்படு கின்றன. காட்சியளிக்கின்றன.

தென்மராட்சிப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ்வரும் பல கிராமங்களது கிணற்று நீர், வாய்க்காலில் பாயும் நீரை ஒத்த நிறத்தில் காணப்படுகின்றது. அந்த நீரையே மக்கள் வடிகட்டி அருந்தும் அவலம் இன்றுவரையில் இடம்பெற்று வருகின்றது. இவ்வாறு அடிப்படை வசதிகளோ வாழ்வாதாரமோ, இருப்பிட வசதிகளோ அற்று, போரால் அழிவுற்ற பூமி போன்று காணப்படும் இப்பகுதிகளின் அபிவிருத்தி எதுவும் முன்னெடுக்கப்படாமைக்கான காரணம் தொடர்பில் கல்வயலைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தாயாரும் போராளிகளாகவிருந்து மாவீரர்களாகிப்போன இருவரது தாயாருமான ஜெயலக்சுமி என்ற பெண்மணி விபரிக்கையில் ,

1996ம் ஆண்டு முதல் பல தடவைகள் தொடர் இடப்பெயர்வு, அதன் பின்பு வன்னி வாழ்வு என இரு உழைக்கும் பிள்ளைகளையும் இழந்து, ஊர் திரும்பிய போது வாழ்ந்த வீடும் இல்லை . தற்போது இரு அங்கத்தவர்கள் தானே உள்ளீர்கள் என்பதன் அடிப்படையில் வீட்டுத் திட்டமும் இல்லை. இருக்கும் பிள்ளையோ அதிகம் கல்வி கற்கவில்லை. அதனால் தொழிலும் இல்லை. இதனால் தினமும் 3 நேர உணவு உண்பதற்கே சிரமநிலை. இன்று உள்ள ஒரு மகன் திருமண வயதையும் தாண்டி, கிடைக்கும் கூலி வேலைசெய்து கொண்டு வரும் பணத்திலேயே இருவரது வாழ்க்கையும் ஓடுகிறது. போதாததற்கு எனது மகளும் கணவர் இன்றி 4 பிள்ளைகளுடன் வாழும் நிலையில் மகளது பிள்ளைகளையும் ஆதரித்து உதவ வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

### புனரமைப்பற்ற நிலையில் தென்மராட்சியின் வீதிகள்

தனது குடும்பநிலை குறித்து விவரித்ததோடு, தாம் வாழும் கல்வயல் கிராமத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் எதுவும் இடம்பெற்றதில்லை எனவும் அக்கிராமத்து வீதிகள், மக்களோ, வாகனங்களோ பயணிக்க இயலாத நிலையில் சேதமடைந்து காணப்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

குறித்த பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வரும் வீதிகளில் இன்னமும் புனரமைப்புச் செய்யப்படவேண்டிய வீதிகள் தொடர்பான தரவுகளைச் சேகரித்தபோது, அது ஆச்சரியம் அளிப்பதாகவே இருந்தது. அதாவது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ்வரும் வீதிகளில் 26 கிலோ மீற்றர் நீளமான வீதியும் , வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ்வரும் வீதிகளில் 65 கிலோ மீற்றர் நீளமான வீதியும் செப்பனிடப்பட வேண்டி உள்ளதோடு சாவகச்சேரி நகரசபையின் ஆளுகையின் கீழ் உள்ள 27 கிலோ மீற்றர் தூரமான வீதியுடன், பிரதேசசபையின் ஆளுகையின் கீழ் உள்ள 403 கிலோ மீற்றர் நீளமான 146 வீதிகளுமாக மொத்தம் 521 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய நிலை காணப்படுகின்றது.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் தற்போது 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் , 16 மாகாண சபை உறுப்பினர்கள் இன்றுவரையில் பதவிகளில் இருந்தும், இந்த தென்மராட்சி மண்ணின் அவலம் இன்றுவரை தொடர்கின்றதெனில், அதற்கான தார்மீகப் பொறுப்பு இவர்கள் அனைவரையும் சார்ந்ததே. இத்தகைய பின்னடைவுகள் தொடர்பில் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, யாழ்ப்பாண மாவட்டத்தின் தேவைகள் தொடர்பில் நாம் அமைச்சுக்களின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளோம். குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவு உட்பட இன்னமும் 24 ஆயிரம் வீடுகள் தேவை. அதேபோன்று மாவட்டத்துக்கு 15 ஆயிரம் கழிப்பறைகளும் , 4 ஆயிரம் கிலோ மீற்றர் தூரமான வீதிகளும் செப்பனிடப்பட வேண்டிய தேவை உள்ளது. அதேபோன்று சுமார் 25 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கான மேம்பாடும் செய்யப்படவேண்டும்.

சாவகச்சேரிப் பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் அதுவோர் பரந்த பிரதேசம், என்ற அடிப்படையில் அந்தப் பிரதேசத்தின்பால் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். அப்பகுதியை உடனடியாக இரு பிரதேச செயலாளர் பிரிவுகளாகப் பிரிப்பதற்கும் பரிந்துரைத்துள்ளோம். அதற்கு அமைச்சும் இணங்கியுள்ளது. அப்பகுதி கண்டிப்பாக மேம்படுத்தப்பட வேண்டும். என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமது பலத்தை நம்பியே களத்தில் இறங்கும் தமிழ்மக்கள்

சேரலாதன்

மக்களின்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு அவர்களைத் திரட்டிப் போராட்டங்களில் ஈடுபட்ட தலைவர்களை அன்று கண்டோம். ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. மக்கள் தமது பிரச்சினைகளை முன்வைத்துத் தாமாகவே போராட்டங்களில் ஈடுபடுவதையும், தலைவர்கள் வெறும் பார்வையாளர்களாக அங்கு தலை காட்டுவதையும் இன்று காண்கின்றோம்.

தமிழர் பிரதேசங்களிலும் இதுதான் இன்று நடந்து கொண்டிருக்கின்றது. தமக்குச் சொந்தமான காணிகளை மீட்டெடுப்பதற்காகவும், காணாமற்போன தமது உறவுகள் குறித்து நியாயத்தைத் தேடியும் மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். தமது காணிகளை அடாத்தாகப் பிடித்து வைத்திருக்கும் படையினருக்கு எதிராகவும் இவர்கள் துணிச்சலுடன் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**அகிம்சைவழிப் பேராட்டத்தைக் கற்றுத்தந்த அண்ணல் காந்தி**

அகிம்சை வழியில் எவ்வாறு போராடலாம் என்பதை முழு உலகத்துக்கும் எடுத்துக் காட்டியவர் இந்தியாவின் தேசபிதா என அழைக்கப்படும் அண்ணல் மகாத்மாகாந்தி. இந்திய மண்ணை வெள்ளையர்கள் ஆக்கிரமித்து அடிமைப்படுத்தி வைத்திருந்ததைப் பொறுக்க முடியாத காந்தி தேச விடுதலைக்கான போராட்டத்தில் மக்களைத் திரட்டினார். அகிம்சை வழியிலான அவரது போராட்டத்துக்கு இந்திய மக்கள் தமது அமோக ஆதரவை வழங்கினார்கள். விடுதலை வேட்கையுடன் வீறுகொண்டு எழுந்த மக்களைக் கட்டுப்படுத்துதற்கு அந்நிய ஆட்சியாளர்களால் முடியவில்லை. வெள்ளையரின் துப்பாக்கிச் சூடு மற்றும் தாக்குதல்களில் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டனர். ஆனாலும் காந்தியின் அகிம்சைப் போராட்டம் இடைநிறுத்தப்படவில்லை. தொடர்ந்தும் இடம்பெற்றது. இறுதியில் வெற்றியும் பெற்றது. காந்தி என்ற அந்த மகத்தான மனிதரின் வழி காட்டல்களுக்கு மக்களின் ஆதரவு கிடைத்ததால் இந்தியா சுதந்திரம் பெற்ற நாடாக மாறியது.

**கறுப்பின மக்களது விடுதலைக்கு வழிகாட்டிப் புகழ்பெற்ற மண்டேலா**

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான தென்னாபிரிக்காவில் சிறுபான்மை வெள்ளையர்களால் பெரும்பான்மையினக் கறுப்பு மக்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். இவர்களது உரிமைகள் யாவுமே மறுக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன. ஆட்சி அதிகாரம் முழுவதும் வெள்ளையரின் வசம் இருந்ததால் தமது இஷ்டம் போன்று அவர்களால் செயற்பட முடிந்தது. உலக நாடுகளின் கண்டனங்களை வெள்ளையர்கள் கருத்தில் கொள்ளவில்லை. இந்த நிலையில் நெல்சன் மண்டேலா என்ற தென்னாபிரிக்கக் கறுப்பின மக்களின் தலைவர் ஒரு விடிவெள்ளி போன்று தோன்றினார். அவரது கருத்துக்களையும், செயல்களையும் இனவாத வெள்ளையர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சுமார் 26 ஆண்டுகள் இருள்சூழ்ந்த தனிமைச் சிறைக்குள் அவர் அடைத்து வைக்கப்பட்டார். அவரது கண்கள் ஒளியை இழந்த போதிலும் உள்ளத்தில் தோன்றிய சுதந்திர வேட்கை தணியவில்லை. இறுதியில் அவரது பேராட்டம் முழுவெற்றி பெற்றது. தென்னாபிரிக்கக் கறுப்பின மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க ஆரம்பித்தனர்.

எமது நாட்டில் கூட தலைவர்களின் வழிகாட்டலின் கீழ் போராட்டங்கள் இடம்பெறத் தவறவில்லை. தந்தை செல்வாவின் தலைமையின் கீழும் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டங்கள் இடம்பெற்றன.

இவற்றில் தமிழ் மக்கள் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டனர். தலைவன் வழியில் நாம் என்ற எண்ணமே மக்களிடம் அப்போது நிறைந்து காணப்பட்டது. ஆனால் இலங்கையின் ஆட்சியாளர்கள் அகிம்சைப் போராட்டத்தின் புனிதத் தன்மையை உணர்ந்து கொள்ளவில்லை. இதனால் இந்தப் போராட்டங்கள் அரசின் ஒடுக்குமுறைகளால் நசுக்கப்பட்டன. ஆனால் தந்தை செல்வா ஓய்ந்து விடவில்லை.

இன்றோ நிலைமை மாறிவிட்டது. மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாகத் தாமே முனவந்து போராட்டங்களில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது. இவற்றுள் சில ஏதோ ஒரு வகையில் வெற்றியும் பெற்றுள்ளன. ஆனால் இத்தகைய போராட்டங்களில் சில, உரிய இலக்கை எட்ட முடியாத நிலையிலும் உள்ளன. இதைத் தவிர்க்க [illegible] மக்களின் பிரச்சினை[illegible] கொண்டு அவர்களைத் திரட்டித் தலைவர்களே போராட்டங்களில் ஈடுபட வேண்டும்.

**தமது பலத்தில் நம்பிக்கை வைத்து களத்தில் குதித்துவரும் ஈழத்தமிழர்கள்**

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாணசபை உறுப்பினர்களும் அவர்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டவர்கள். மக்களின் பிரச்சினைகளுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களும் இவர்கள் தான். மக்கள் வடக்கு மாகாண சபையை எத்தனையோ. இடர்களுக்கு மத்தியில் பலத்த எதிர்பார்ப்புக்களுடன் தெரிவு செய்தனர். முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் அனைவருமே தமிழர்கள் என்பதால் ஒருவித உரிமையுடன் மக்கள் மாகாணசபை நிர்வாகத்தைப் பார்த்தனர். ஆனால் மாகாணசபையால் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிவைக்க முடியவில்லை என்பதுதான் உண்மை. சுங்கத் தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கான அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு மத்திய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக வெளிவந்த செய்தி, மாகாணசபை உறுப்பினர்களை மகிழ்ச்சியின் உச்சத்துக்கே கொண்டு சென்று விட்டது. இனிமேல்புதிய உயர் ரக வாகனத்தில் பறந்து செல்லப்போகின்றார்கள். ஆனால் தம்மைத் தேர்வு செய்து அனுப்பிய மக்களையும் இவர்கள் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழர்களின் தலைவர்கள் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தம்மை முழுமையாக ஒப்படைக்க வேண்டும்.

எந்தவொரு விடயத்திலும் மக்களை வழிநடத்திச் செல்வதற்கு இவர்கள் தயாராக இருக்க வேண்டும். மக்கள் தாமாகவே போராட்டத்தில் ஈடுபடட்டும்; நாம் பார்வையாளர்களாக இருப்போம், என இவர்கள் எண்ணிக் கொண்டிருப்பது [illegible] செய்கின்ற [illegible]



## ஆசிரியருக்கான கடிதம்

### பொலிஸார் மனம் வைத்தால் வாள்வெட்டுக் கலாசாரத்தை ஒழிக்கலாம்

குடாநாட்டில் மீண்டும் வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதால் மக்கள் அச்சத்துடன் காலத்தைக் கடத்தி வருகின்றனர்.

போர் ஓய்ந்த கையோடு குடாநாட்டில் விரும்பத்தகாத நடவடிக்கைகள் இடம்பெற ஆரம்பித்து விட்டன. திருட்டு, கொள்ளை, போதைப்பொருள்களின் பாவனை, வாள்வெட்டுச் சம்பவங்கள், அடாவடித்தனம் பெண்களுக்கு எதிரான நடவடிக்கைகள் என இவற்றைப் பட்டியலிட்டுக் கூற முடியும். இவற்றுள் மக்களை அதிக அளவில் பீதிக்குள்ளாக்கிய வாள்வெட்டுச் சம்பவங்கள் சிறிது காலம் ஓய்ந்திருந்ததன் பின்னர் தற்போது மீண்டும் தலை தூக்கியுள்ளன. சுதுமலைப் பகுதியில் இளைஞர் ஒருவரின் கையொன்று துண்டிக்கப்பட்டது. சாவகச்சேரியில் உள்ள உணவகம் ஒன்றினுள் நுழைந்த குழுவொன்று அங்கிருந்த மூவரை வாளால் வெட்டிப் படுகாயமடையச் செய்துவிட்டுத் தப்பியோடிவிட்டது. இந்தச் சம்பவங்கள் மக்கள் மத்தியில் பெரும் அச்சவுணர்வை ஏற்படுத்தி விட்டுள்ளன. அடுத்து எங்கு, என்ன நடக்குமோவென்ற கலக்கத்துடன் குடாநாட்டு மக்கள் அமைதியிழந்து காணப்படுகின்றனர்.

கல்விமான்களும், யோகிகளும், சித்தர்களும் உலவிய இந்தப் புண்ணிய பூமியில் இத்தகைய இழிவான சம்பவங்கள் இடம்பெறுகின்றமை ஒட்டுமொத்தக் குடாநாட்டு மக்களையும் தலைகுனிய வைத்துவிட்டது.

இளைஞர்கள் சிலர் மதுபோதை தலைக்கேறிய நிலையில் வாள்களைக் கையிலெடுத்து மற்றவர்களைப் பதம் பார்ப்பதாகக் கூறப்படுகின்றது. இதனைத் தடுக்க வேண்டிய முழுப்பொறுப்பும் பொலிஸார் வசமே உள்ளது. அவர்கள் தமது அதிகாரத்தை உச்ச அளவில் பயன்படுத்தி வாள்வெட்டுக் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து மக்களின் அச்சவுணர்வைப் போக்க வேண்டும். சிறியதொரு பிரதேசத்தை உள்ளடக்கிய குடாநாட்டில் குற்றச்செயல்களைத் தடுப்பதும், குற்றவாளிகளைக் கைதுசெய்வதும் கடினமானதொரு பணியாக இருக்க மாட்டாது. பொலிஸார் மனம்வைத்தால் வாள்வெட்டுக் கலாசாரத்தை முற்றாகவே ஒழித்துவிட இயலும்.

செ.நாகராசா
சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# யாழ்ப்பாணம் வண்ணை, குளங்கரை மருதடி

# ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்

# (நாச்சிமார் கோவில்)

# தேர்த்திருவிழா

# சிறப்பிதழ்

# 09.05.2017



## தேரேறி வரும் தேவியே சரணம்!



வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சித் தாய் இன்று தேரிலே ஆரோகணிக்கின்றாள். உலகமெல்லாம் பரவி ஏற்றித்தொழும் ஆதிபராசக்தியானவள் இந்த நாச்சிமார் கோயிலிலே கோயில்கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ காமாட்சியாக வீற்றிருக்கிறாள்.

இன்று அழகிய சித்திரத்தேரிலே அருட்காட்சி தரும் அம்பிகை விநாயகர். சுப்பிரமணியர் சகிதம் வீதிவலம் வரும் அழகே தனி. தேரேறிவரும் தேவியாக இன்று அருள்காட்சி புரிந்து நல்வாழ்க்கையை நல்கவேண்டுமென நல்லைக்குருமணியின் பாதம் பணிந்து அருளாசி வழங்கி உளமாரப் பிரார்த்தித்து வணங்கி வாழ்த்துகின்றோம். வண்ணை வாழ் அடியார் பெருமக்கள் அனைவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்றுத் தேரேறி வரும் தேவியை வழிபாடியற்றி நல்வாழ்வு வாழவேண்டுமென்று ஆசிநல்கிப் பிரார்த்தித்து வணங்கி நிற்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குரு முதல்வர்,**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,**
**நல்லை ஆதீனம்.**

## மஹோற்சவ குரு ஆசிச்செய்தி

சிவபூமி என்றழைக்கப்படும் ஈழ மணித் திருநாட்டின் வடபால் யாழ். வண்ணை மாநகரின் கண் வீற்றிருந்து வேண்டுவோர் வேண்டும் வரங்களை வாரி வழங்கிக்கொண்டிருக்கும் காமா அம்பிகையின் ஹேவிளம்பி வருட மஹோற்சவ வைபவத்தில் இன்று ரதோற்சவம் ஆகும்.(09.05.2017)

பஞ்ச கிருத்தியங்கள் என்று சொல்லப்படும் ஐந்தொழில்களைக் குறிக்கும் மஹோற்சவ விழாவில் அழித்தல் தொழிலை குறிக்கும் ரதோற்சவம் (தேர்த்திருவிழா) சிறப்புற எல்லாம்வல்ல அம்பிகையின் அருளை வேண்டி அன்னையானவள் எங்கள் எல்லோரினதும் ஆணவ மலங்களை அழித்து ரட்சிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

"சர்வே ஜனா: ஸுகினோ பவந்து"

**சிவஸ்ரீ சிவதாஸ சிவசுப்பிரமணியக் குருக்கள்**
**வண்ணை. காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்,**
**யாழ்ப்பாணம்.**

## கருணை மிகு காமாட்சி அம்பிகை இன்று ரதமேறி வருகின்றாள்!

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற அன்னை ஸ்ரீ காமாட்சி அம்பாள் வழிபடும் அடியார்களின் அல்லல் போக்கி அருளை அள்ளி வழங்குவதற்காக எழுந்தருளி வீற்றிருக்கும் இடம்தான் நாச்சிமார் கோயில் என வழங்கும் குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம்.

இந்த அருள்மிகு ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா. கருணைமிகு காமாட்சி அம்பாள் இன்று ரதமேறி வீதி வலம் வருகின்றாள். அழகிய சித்திரத்தேரிலே அம்பிகை ஆரோகணிக்கும் நல்லருட்காட்சி இன்று வண்ணையிலே காணலாம். இந்த ஆலயம் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஓர் ஆலயமாகும். முன்னாளில் நாவல் மரங்களும் மருதமரங்களும் நிறைந்திருந்த இடத்தில் கோயில்கொண்டிருந்த அம்பிகை வழிபாடு செய்கின்ற அடியார்களுக்கு அருள் சொரிந்து வினைதீர்க்கும் தாயாக எழுந்தருளி அருளாட்சி செய்கின்றாள்.

பொன்னாபரணஞ்செய்யும் வண்ணத்தவரின் குலதெய்வமாக விளங்கும் காமாட்சி அம்பாள் இங்கே மூலஸ்தானத்திலே வெகு பிரகாசத்துடன் வீற்றிருந்து ஒளிவீசி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள். இந்த வீதியால் போக்குவரத்துச் செய்கின்ற அடியார் பெருமக்கள் இங்கு இறங்கிவந்து விபூதி தரித்து, சந்தன குங்குமம் வைத்துக் கற்பூர தீபம் ஏற்றி வழிபட்டுச் செல்வது வழக்கமாகும்.

வருடந்தோறும் சித்திரா பௌர்ணமியைத் தீர்த்த நாளாகக் கொண்டு பதினைந்து நாள் மஹோற்சவம் நடைபெறுகின்ற இந்த ஆலயத்தில் அம்பிகையின் அலங்காரம் பார்ப்பதற்காக ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் அடியார்கள் இங்கு நாடித் தேடி ஓடி வருவார்கள்.

இங்கு நடைபெறுகின்ற திருவிழாக்களில் பத்தாம் திருவிழா மஞ்சம் மற்றும் கைலாசவாகனம், பெரிய சப்பரம். தேர். தீர்த்தம் என்பன சிறப்புத் திருவிழாக்களாகும். இவை எல்லாவற்றுக்கும் மேலாகப் பூங்காவனத்தன்று அம்பாள் வீதி வலம் வருவதற்கென்று விதவிதமான வண்ண வேலைப்பாடுகளுடன் கூடிய புதிய வாகனம் ஒன்று கைவண்ணத்தில் உருவாக்கப்படுவது சிறப்பம்சமாகும்.

ஆகவே, இன்றைய தேர்த்திருவிழா நாளில் அம்பிகையின் அலங்காரம் கண்டு தரிசித்து அருள்பெற்றுய்ய வருமாறு அம்பிகை அடியார்களை இருகரங்கூப்பி அழைக்கின்றோம்.

"அம்பிகையை வழிபட்டால் அதிக வரம் பெறலாமே"

**கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்**

செல்வ மஹால்
Chelva Mahal



1229,K.K.S. ROAD,
POONARI MARATHADI,
JAFFNA.
021 221 9779, 076 319 9779

திவ்ய மஹால்
Thivya Mahal



Wedding, Puberty, Reception,
Birthday party, Conference,
Catering Services.
No.1001, Vannarpannai,
K.K.S. Road, Jaffna. 021 321 9242
இல.1001, வண்ணார்பண்ணை,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 077 614 1374



B.K. மல்ரி சொப்
B.K. Multi shop
No. 05,K.K.S. Road,
Poonary marathady,
Kokuvil.
Tel : 021 222 1744,
021 221 7704.
இல. 05, கே.கே.எஸ். வீதி,
பூநாறி மரத்தடி,
கொக்குவில்.

ஸ்ரீ லக்ஷ்மி பிளாசா
Sri Lakshmi Plaza
திருமணம்,
கொண்டாட்டங்கள்
பெருநிறுவன நிகழ்வுகள்
பிறந்தநாள் விழா
விசேட நிகழ்வுகள்
இன்னும் பல..



E-mail :- jaffnasrilakshmiplaza@gmail.com
http://www.facebook.com/jaffnasrilakshmiplaza
021 222 9296, 075 783 6550,
0044 746 657 8511
இல.84, ஐயனார் கோயில் வீதி,
தட்டாதெரு சந்தி,(அருகில்)
யாழ்ப்பாணம்.

ஓம் விராட் விஸ்வபிரம்மனே நமஹ
ஸ்ரீ காளிகா
சிற்பாலயம்
ஆலயங்களுக்
குரிய சிற்பத்தேர்,
மஞ்சம், கைலாய
வாகனம்,
ஆலய சிற்பங்கள்,
சிற்பமாதிரி
சாஸ்திர
முறைப்படி செய்து
கொடுக்கப்படும்.



செல்லையா
பாலச்சந்திரன்
பூநாறி மரத்தடி,
K.K.S. Road,
யாழ்ப்பாணம்.



அனைத்து விதமான சைவ மற்றும் அசைவ உணவு வகைகளை சுவையாக உண்டு மகிழ்ந்திட...
Yarl Hotel
யாழ் ஹோட்டல்
மாங்களகரமான நிகழ்வுகள் அனைத்திற்கும்
நீங்கள் விரும்பிய உணவு வகைகளை
முற்கூட்டியே ஓடர் செய்து
பெற்றுக்கொள்ளலாம்.
AC / Non AC
Rooms
Available
இல: 1037, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 077 699 5009
கிளை: இல: 46/1, ஸ்ரேசன் வீதி,
வெள்ளவத்தை. தொ.பே: 077 581 7359



Rube Since 1983 Jewellery
S.Nanthagopal
T.P. 077 734 4070
N.Gajaruban
T.P. 077 739 6176
ரூபி
ஜுவல்லறி
No. 227–229, Kasthuriyar Road, Jaffna.
Tel : 021 221 6919
E-mail : info@rubejewelleery.com
Web: www.rubejewellery.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன்



# தேர்த்திருவிழா சிறப்பிதழ் 09.05.2017

வல்லை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் மெய் அடியார்களே!
நிகழும் ஹேவிளம்பி வருடம் சித்திரை மாதம் 26 ஆம் நாள் இன்று (09.05.2017) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நாதஸ்வரக் கலைஞர்களின் மங்கல வாத்தியங்கள் முழங்க எம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேரேறி அடியார்களுக்கு அருள்பாலிப்பார் அனைவரும் வருக! அம்பிகை அருள் பெறுக!!

## பிரதம குருவின் ஆசிச் செய்தி



வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாளினது ஹேவிளம்பி வருட பிரம்மோற்சவத்தின் பதின்நான்காம் நாளகிய இன்று அம்பாளினது இரதோற்சவம் நடைபெறுகின்றது. இச் சந்தர்ப்பத்தில் அடியேன் சிறப்பு மலருக்கான ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பசுபதியாகிய சிவபெருமான் சூரிய சந்திரர்கள். வருன்களாகவும். மற்றைச்சரம் அசரம் ஆகிய பொருள்கள் ஒவ்வொரு உறுப்புக்களாகவும். நான்கு வேதங்கள் குதிரைகளாகவும் அமைந்த தேரில் மேருவை வில்லாகவும் விட்டுவை அம்பாகவும் அக்கினியை அவ் அம்பின் சுடர்வாயாகவும் கொண்டு எழுந்தருளி பிரமாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்கு கொண்டு செலுத்த திரிபுரத்தசுரர்களை தமது திருப்புன்முறுவலால் எரித்தருளினார்.

திரிபுர சங்காரத்து உண்மைக் காட்சியை உணர்த்தி ஆணவம் கன்மம். மாயை என்னும் மும்மலங்களையும் அழிப்பதற்காக இரதோற்சவம் நடத்தப்படுகின்றது.

இந்நான் நாளில் அம்பிகை அடியார்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாளினது அனுக்கிரகம் கிட்ட அம்பாளை பிரார்த்தித்து எனது ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"லோகா சமஸ்தா சுசினோபவந்து"
இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்**
**J.P பிரதமகுரு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் ஆதினகர்த்தா – புற்றளை சித்தி விநாயகர் தேவஸ்தானம் இந்துமத குருபீடாதிபதி**

## தர்மகர்த்தா சபைத் தலைவரின் வாழ்த்துச்செய்தி

வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் ஹேவிளம்பி வருட மஹோற்சவம் 26.04.2017 ஆம் திகதி ஆரம்பமாகி மிகவும் கோலாகலமாக நடைபெற்று வருகின்றது. 14 ஆம் நாளாகிய இன்று அம்பாளினது இரதோற்சவமாகும் இந்நன்நாளில் இரதோற்சவ சிறப்புமலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். அழகிய மூன்று சித்திர தேரில் அம்பாள். பிள்ளையார். முருகன் ஆரோகணித்து அற்புதமாக பவனி வரும் கண்கொள்ளா காட்சியைக் காண ஆயிரம் கண்கள் போதாது அம்பாளினுடைய வடம் பிடிக்க அலையலையாக ஆண்களும். பெண்களும் திரண்டு வரும் அடியவர் கூட்டம் மக்கள் எல்லாம் கோடிக்கரை மாரித்தாயே தாசிந்தா மணல் தாயே என கோசம் செய்து தேர் வடம் பிடித்துவரும் இந்நாள் பொன்னான நாளாகும் சித்திர தேரேறி அம்பாள் வீதிவரும் வேளை உலகில் உள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் அம்பாளின் திருவருளினாலே மானிடப்பிறவி எடுத்த பயன் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ இறையாசி-வேண்டி வாழ்த்துகின்றேன்.

"அம்பிகையை தொழுதால் அதிக வரம் பெறலாம்"

**பாலசுப்பிரமணியம் உதயகுமார்**
**தலைவர்.**
**தர்மகர்த்தா சபை.**
**வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்**
**வல்வெட்டித்துறை.**

## தர்மகர்த்தா சபைச் செயலாளரின் வாழ்த்துச்செய்தி

சரித்திர பிரசித்தி பெற்ற வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாளினது தேர் திருவிழா இன்று நடைபெறுவதையிட்டு நான் பேருவகை அடைகின்றேன். அம்பாள் இன்று தேரேறிவந்து அடியார்கள் மனம் உருக அருளை அள்ளி வழங்கி எல்லோரும் இன்புற்று இருக்கவும் அம்பாளிடம் சரணடைந்த அனைவரும் கல்வி செல்வம் வீரம் மிக்கவர்களாகவும் வாழவும் எமது கலாசார பண்புகளுடனும். இந்து சமய கலாசாரத்தினை போற்றுபவர்களாகவும் வாழ எல்லாம் வல்ல அம்பிகையை வேண்டி இறைஞ்சி பிரார்த்தித்து எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்து அமைகின்றேன்.

**பொன் ஈஸ்வரலிங்கம்**
**செயலாளர்**
**தர்மகர்த்தா சபை**
**வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்,**
**வல்வெட்டித்துறை.**

**கோ.சி.ஆடையகம்**
யாழ்வீதி, வல்வெட்டித்துறை.
மங்கலகரமான நிகழ்வுகளுக்கு பட்டுவேட்டிகள் பட்டுப்புடைவைகள் மற்றும் பெரியோர்களுக்கு. சிறியோர் களுக்குமான ஆடைகளை தெரிவுசெய்ய நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
விலையில் மலிவு தெரிவில் நிறைவு

JEGA MOTORS
ஜெகா மோட்டோர்ஸ் ஹாட்வெயர்
Dealers in Electrical Goods,
Paint & Electrical Contractors
ஜெகா மோட்டோர்ஸ் ஹாட்வெயர்
யாழ் வீதி, வல்வெட்டி
021 226 3383

**S.S.V.R. மல்ரிசென்ரர்**
பலகை – தீராந்திவகை –
கொங்கிறீற்கல் பூச்சாடிகள் -
ஓடு, கூரைசீற்வகை
NILKAMAL பிளாஸ்ரிக் தளபாட வியாபாரம் மற்றும் போக்குவரத்து சேவை (ரிப்பர்.
கன்ரர் Hiace வான் A/C)
நாடவேண்டிய இடம்
S.S.V. R. மல்லி சென்ரர்
நெடியகாடுவல்வெட்டித்துறை
தொ.பே. 077 654 0056

**ஸ்ரீ லஷ்மி பவன்**
சைவ உணவகம்
யாழ்வீதி, வல்வெட்டித்துறை
எங்கள் நாவிற்கு சுவையூட்டும் சிறந்த சைவ உணவு வகைகளுக்கும். வைபவங்களுக்கான சைவ உணவுகளை ஓடர்களுக்கு பெற்றிட சிற்நத சைவ உணவகம்.
021 722 3161/ 077 968 5122

**இரத்தின மாளிகை**
தர உத்தரவாத்துடன் அனைத்து நகைகளும் வழங்கப்படும்
இரத்தின மாளிகை
தெளியம்பை வீதி,வல்வெட்டித்துறை.
தொ.பே.077 223 8577

**அம்பிகை காட்வெயார்**
பருத்தித்துறை வீதி,
வல்வெட்டித்துறை.
தொ.பே. 077 152 8901

**ஜே.என்.எஸ். சொப்பிங்சென்ரர்**
சகலவிதமான பலசரக்கு வியாபாரப் பொருள்கள் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
J.N.S. SHOPPING CENTER
ALADY, VALVETTITHURAI
077 291 8699

**கணபதி இருப்பகம்**
ORANGE யாழ் ஏக விநியோகஸ்தரும்
கட்டடப்பொருள் மொத்த சில்லறை விற்பனையாளர்
தொ.பே. 077 418 2338

**செல்வா உணவகம்**
சைவ அசைவ உணவுகள் மற்றும் வீட்டு விஷேசங்களுக்கான ஓடர் உணவுகள் தயாரித்து வழங்கப்படும். Phone மூலம் 500/= ரூபாவுக்கு மேல் ஓடர் செய்பவர் களுக்கு வீட்டிற்கு கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.
செல்வா உணவகம்
காங்கேசன்துறை வீதி,மதவடி - வல்வெட்டித்துறை
தொ.பே. 077 219 9479, 077 157 9336

**சிவகாமி**
ஹாட்வெயர் &எலெற்றிக்கல்
வல்வெட்டித்துறை
தொ.பே. 077 644 8547

DELTA SUPER STORES
சகலவிதமான பொருள்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
DELTA SUPER STORES
K.K.S.ROAD.VALVETTITHURAI
T.P.077 352 7579

**ஸ்ரீ முத்துமாரி ஸ்ரோர்ஸ்**
கே.கே.எஸ். வீதி, வல்வெட்டித்துறை
உரிமையாளர்: ஞா.பிறேமதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள்மிகு கைதடி வீரகத்திப்பிள்ளை

# வீரகத்திப்

# தேர்ச்சிறப்பு

## தேர்த்திருவிழா 09.05

### மகோற்சவ குருவின் ஆசியுரை

வீரகத்தி விநாயகர் இன்று தேரேறி வருகிறார். ஆலயங்களில் ஆகம முறைப்படி நடைபெறுகி வங் களில் ரதோற்சவம் என்பது மிகமிக முக்கியமானது. ஒவ்வொரு நாள்களும் சுவாமி வாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி தருகிறார். இருப்பினும் தேரில் ஏறி பவனி மிக முக்கியமானது. உருவிலே பெரியது அதனால் ஊர் கூடி தேரிழுப்பது என்பார்கள்.. யாவரும் ஒருவிதமான வேறுபாடின்றி ஒற்றுமையாக பெருமானை தேரில் ஏற்றி தே வருவார்கள். தேரில் ஆரோகணித்து வரும் விநாயகர் எல்லா அடியார்க்கும் அருள்பாலிப் விநாயகர் எழுந்தருளும் தேரானது சில்ப சாஸ்திரத்தில் "மஹாரதம்" என்று சொல்லப்படுகிற சில்பசாஸ்திரப்படி எல்லா வரிகளும், அடுக்குகளும் சாஸ்திரபிரமானப்படி செய்யப்பட்டுள்ளது இன்று தேரில் வலம் வரும் விநாயகர் எல்லா அடியார்க்கும் அருள்பாலிப்பாராக.

**பிரம்ம ஸ்ரீ ச.ஜெயந்தி நாதக்குருக்கள்**
**பிரதம குரு- வீரகத்தி பிள்ளையார் கோயில், கைதடி.**

## தேர் சிறப்புற வாழ்த்துவோர்.

| | | |
|---|---|---|
| **கோபன் பந்தல்சேவை**<br>**கவிசயன் றான்ஸ்போட்**<br>கைதடி கிழக்கு. | **ஐங்கரன் ஸ்ரோஸ்**<br>கைதடி கிழக்கு | **சுமித்திர** |
| **வீடியோ றங்கன்**<br>கைதடி | **மகிந்தினி**<br>**களஞ்சியம்**<br>கைதடி கிழக்கு | **கே.எஸ். பொ**<br>**எரிபொரு** |
| **விவா** மின் பொருள் இரும்பு வாணிபம்<br>கைதடிச் சந்தி | **வேணுகா**<br>**சைவ உணவகம்**<br>கண்டி வீதி, கைதடி. | **நியூ** |
| **யாழி சையன்**<br>**குட்ஸ்சொயிஸ்**<br>கைதடி தெற்கு. | **நியூ றஜிகா இரும்பகம்**<br>**அன் பல் பொருள் வாணிபம்**<br>கைதடி மத்தி | **வவி**<br>**வர்** |
| **சபேஸ் ஐஸ்கிறீம்**<br>கைதடி மத்தி. | **சிவறஞ்சன் குடும்பம்**<br>லண்டன் | **து.வரதர** |
| **ஓம் முருகா**<br>**பல்பொருள் வாணிபம்**<br>கைதடி தெற்கு. | **டணோயா**<br>**பந்தல்சேவை**<br>கைதடி தெற்கு. | **சிறிவா**<br>**ஸ்** |
| **வே.பொன்னுத்துரை**<br>**குடும்பம்**<br>கைதடி மேற்கு. | **கஜதீபன் குடும்பம்**<br>கைதடி மேற்கு | **குகன்** |
| **பிள்ளையார்**<br>**அரைக்கும் ஆலை**<br>கைதடி கிழக்கு. | **சந்தாணம்**<br>**மல்ரி சென்ரர்**<br>கைதடி தெற்கு | **பிள்**<br>**பல்** |
| **விநாயகர் ஸ்ரோஸ்**<br>கைதடிச் சந்தி. | **சாந்தன் குடும்பம்**<br>கைதடிச் சந்தி. | **டெட்டியா** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ளையார் கோயில் முதலாய கோயில்களின்

# ...ப் பிள்ளையார்

# ...பு மலர் – 2017

## ...05.2017 காலை 9.00 மணி





**விக்கினங்கள் தீர்க்கும் வீரகத்தி விநாயகர் சித்திரத் தேரேறி வருகின்றார்**

...பறுகின்ற மகோற்ச ...சுவாமி ஒவ்வொரு ...வனி வருவது தான் ...கள்.. ஊர் மக்கள் ... தேரை இழுத்து ...பாலிப்பார். இங்கே ...படுகிறது. அதாவது ...ள்ளது. இவ்வாறாக

ஆலயங்களில் நித்திய நைமித்தியங்களில் ஏற்படக்கூடிய குறைகளை நிவர்த்தி செய்வதற்காக வருடாந்தம் மகோற்சவங்கள் இடம்பெறுகின்றன. இவற்றில் கொடியேற்றம், வாகனத்திருவிழா, தேர், தீர்த்தம், கொடியிறக்கம் என்பன முறையே இறைவனின் பஞ்ச கிருத்தியங்களான படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்பவற்றை பிரதிபலிக்கின்றன. அந்த வகையில் பழமை, பண்பாடு, வரலாற்று சிறப்புமிக்க இவ்வாலயத்திலும் நூற்றாண்டு காலமாக மகோற்சவ பெருவிழா இடம்பெற்று வருவதோடு, 2013 ஆம் ஆண்டு மகோற்சவம் நடைபெற்ற பின்னர் 2014 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகள் மகோற்சவம் நடைபெறாது பெரியளவில் ஆலய திருப்பணிகள் செய்யப்பட்டு கடந்த ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற பின்னர், பக்த அடியார்களின் மிகுந்த எதிர்பார்ப்புடன் இவ்வாண்டு கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகி இன்றைய தினம் தேர்த்திருவிழா பக்திப்பரவசத்துடன் அடியவர்களின் ஆனந்தக் கண்ணீர் சொரிய அரோகரா கோசம் விண்ணைத்தொட எல்லாம்வல்ல எம் பெருமான் விநாயகப்பெருமான் தேரேறி வந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்கின்றார்.

பக்த அடியார்கள் ஆசாரசீலர்களாக இந் நிகழ்வுகளில் பங்குபற்றி எம்பெருமானின் இஷ்டசித்திகளை பெற்று பேரின்ப பெருவாழ்வு வாழ்வீர்களாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்"

**நம்பிக்கைப் பொறுப்பாளர்,- பரிபாலன சபையினர்.**

| | | |
|---|---|---|
| **...திரன் ஸ்ரோஸ்**<br>கைதடி மத்தி | **விசாகா ரேட்**<br>கைதடிச் சந்தி | **சூரியன் நகலகம்**<br>கைதடி |
| **...பொன்னம்பலம் அன்சன் ...பொருள் நிலையம்**<br>ஏ 9 வீதி, கைதடிச்சந்தி | **சிவராசா பிரகாஸ் குடும்பம்**<br>கைதடி | **ஆச்சி ஹொட்பூட்**<br>ரெஸ்ரோரணட்<br>கைதடி கிழக்கு. |
| **..., கணேசன் ஸ்ரோஸ்**<br>கைதடிச் சந்தி | **ஸ்ரீ நிசா** பல்பொருள் வாணிபம்<br>கைதடி மத்தி | **ரூபன் களஞ்சியம்**<br>கைதடி மத்தி |
| **...வி ஆட்ஸ்**<br>...ர்ண வேலை<br>கைதடி மத்தி | **பிரியங்கா**<br>**கதிரை வாடகை**<br>கைதடி கிழக்கு. | **சின்னப்பா குடும்பம்**<br>கைதடி கிழக்கு |
| **...தராசா குடும்பம்**<br>கைதடி தென் கிழக்கு. | **திலக்சன்**<br>பல்பொருள் வாணிபம்<br>கைதடி தெற்கு | **றாம் ரேட்சென்ரர்**<br>லிற்றோ காஸ் விற்பனையாளர்கள்<br>மானிப்பாய் வீதி, கைதடி. |
| **...ாலாம்பிகை ...ஸ்ரோஸ்**<br>கைதடி மத்தி. | **சிங்கராசா**<br>அரைக்கும் ஆலை<br>கைதடி வடக்கு. | **சிவராசா**<br>உழவு இயந்திரம்<br>கைதடி தெற்கு. |
| **...ர் வயறிங்**<br>கைதடி கிழக்கு | **விமல்**<br>வெல்டிங் வேக் சொப்<br>கைதடி மத்தி | **மதன்** தையலகம்<br>நவபுரம், கைதடி. |
| **...ளையார்**<br>...பல்பொருள் நிலையம்<br>கைதடிச் சந்தி | **வேல் முருகன்**<br>களஞ்சியம்<br>கைதடி வடக்கு. | **ஆரியபவான்**<br>சைவ உணவகம்<br>கைதடிச் சந்தி |
| **...யார் ஸ்ரோஸ்**<br>கைதடிச் சந்தி. | **லக்சன்**<br>குமரநகர், கைதடி. | மலர் ஒழுங்கமைப்பு<br>**பொ.தங்கராசா** |

(CS/3770)(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன்



# தேர்த்திருவிழா சிறப்பிதழ் 09.05.2017

பதினான்காம் திருவிழா நாளிற் சூரிய ஒளி பிரகாசிக்கும் வேளையிலே கணபதி முருகனுடன் எம் தாயார் "சித்திரத் தேர்களில் அமர்ந்து காத்தலிங்க சுவாமி தேருடன் சுற்றி வந்து, ஆன்மாக்கள் ஈடேறும் பொருட்டு தூல சரீரங்களை அழித்து, அடுத்துவரும் பிறவிகளில் புண்ணியஞ் செய்து ஈடேற வைக்கும் அழித்தற் தொழிலை உணர்த்தி, மக்கள் செய்யும் அர்ச்சனை உபசாரத்தை ஏற்று, அதன் பின் தூய பச்சை நிற அணிகளினால் அழகுகோலம் மேலுந் துலங்கும்படி, தேரினின்றும்" அபரோகணஞ் செய்வார். அன்றிரவு பிராயச்சித்த அபிடேகம் ஏற்று வாசனை கமழப் பூத வாகனத்திற் காட்சி தருவார். அடியார்களே நாமும் களிப்புடன் அம்பாளின் அருளை வேண்டி வழிபட்டு அருள் பெறுவோமாக.

**நாளை (10.05.2017) புதன்கிழமை
காலை தீர்த்தத்திருவிழாவும்,
வரலாற்று சிறப்புமிக்க இந்திர
விழாவும் மாலை நடைபெறும்.**

யாழ்நகரில் ASR Hotel



மிக விரைவில் ஆரம்பிக்கப்
படவுள்ள சர்வதேச
தரத்துடனான
நட்சத்திர தங்குமிட விடுதி
இல. 542, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 1356, 021 373 4116, 021 222 1355

யாழ் நகரில் 36 வருடங்களாக சேவையை வழங்கி வரும்
ஆர்.வி.ஜி மருந்தகம்
ARVEGIE MEDICALS



சகலவிதமான மருந்துகள், பால்மா வகைகள் மற்றும்
அனைத்துப் பொருள்களையும் நியாயமான விலையில்
எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
இல.504, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம
தொ.பே. 021 222 2129

RVG Company



விதிமுறையிற் பதினான் காந்தினம் விளங்குகின்ற சித்திரத்தேர் களிலாங்கே
கதிரொளியிற் கணபதி முருகன் உடனேறிக் காத்திலிங்கத் தேருடனே
துதிசெய்யும் மக்கள் அர்ச்சனை யையேற்றுச் சுற்றிவந்து அழித்தலையே
இதமாக உணர்த்திப் பச்சுடை எழில்தரவுங் கீழிறங்கி வருவாளே.
இல.58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 6806, 021 222 4766

Gowriy Printers
Quality Offset printers For Greeting
Cards. Cartoons, Brochures and Books.



207, Sri Ratnajothi Saravanamuthu
Mawatha (Wolfendhal Street) Colombo - 13
Tel: 011 243 2477 011 242 3433,
Fax: 011 242 3433

ASR
Wedding Halls





திருமணங்கள், பதிவுத்திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள் உட்பட சகலவிதமான
வைபவங்களையும் உங்கள் எண்ணம்போல் சிறந்த முறையில் அனைத்து வசதிகளுடனும்
சிறப்பாக நடத்திட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

வைகாசி 10,17, 22, 29 ஆனி 19, 26, 28, 30, ஆடி 05,
08 ஆவணி 08, 15, புரட்டாதி, 09

ஆகிய முகூர்த்த திகதிகளில் இடங்கள் இருப்பதால்
இப்போதே உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர்
கலாசார திருமண மண்டபம்.
இல.542, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 373 4116, 021 222 1355
Annamalaiyan Sri Ragaventhirar Enterprises (Pvt) Ltd
asmall@hotmail.com Find us on : Facebook.com/jaffnaasrenterprises

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கின் கல்வித்தரம் உயர அதிக கவனம் எடுக்க வேண்டும்

சி.நற்குணலிங்கம்

எமது மாணவர்களின் கல்வித் திறன் பின்னடைவைக் கண்டுள்ளது. இந்தச் சவாலை முறியடிக்க எல்லோரும் ஒன்றிணைந்து செயலூக்கத்துடன் பணியாற்ற சிறு சிறு விடயங்களில் கூட நாம் கூடிய அக்கறை செலுத்த வேண்டும். பின்னடைவுக்கு நாம் எல்லோரும் தான் பொறுப்பாளிகள். எனவே மனம் திறந்த நிலையில் எல்லாத் தரப்பினரும் செயலாற்ற வேண்டும். மனச்சாட்சியுடன் சிறிய விடயங்களில் கூட, கவனம் செலுத்துவதன் மூலம் நேரவிரயத்திலும் தனியார்வேறுபாட்டைஅடிப்படையாகக்கொண்ட கற்பித்தலிலும் கவனம் செலுத்தி அடைவு மட்டத்தில் உயர்வைக் காணமுடியும்.



**பாடசாலைகளில் விழாக்கள்**

பாடசாலைகளில் விழாக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. விழாக்களின் எண்ணிக்கை அதிகரிப்புகள் விழாக்களை ஆடம்பரமாக நடத்த முற்படுதல், விழாக்கள் நீண்ட நேரம் நடத்தப்படல், மாணவர்களது நிகழ்வுகள் அதிகரிக்க அவர்கள் பயிற்சி எடுக்கும் நேரம் அதிகரித்து புாடவேளை அடித்துச் செல்லப்படல். விழாக்களின்போது விருந்தினர்களது வருகைக்காக மாணவர்கள் நீண்ட நேரம் காத்து நிற்றல். மாணவர்களுடன் தொடர்பில்லாத சில விழாக்களுக்கு பொதுமக்கள் குறைவாக வருகை தந்திருப்பின் அந்த இடத்தை நிரப்ப கற்றல் இடைநிறுத்தப்பட்டு பாடசாலை மண்டபத்துக்கு மாணவர்கள் வரவழைக்கப்படுவார்கள். இது மட்டுமா வேறு திணைக்களங்களில்விழாக்களுக்கும்மாணவர்களதுநிகழ்ச்சிகள் பாண்ட் வாத்தியங்கள் பொறுப்பாசிரியருடன் கொண்டு செல்லப்படுகின்றன. இவை எமக்குத்தெரியாமல்எமது கல்வியில்பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதை மறுக்க முடியாது.

மாணவர்கள் பாட அலகுகளை முழுமையாகக் கற்று அவற்றை உள்வாங்கிப் பரீட்சைக்கு தம்மைத் தயாராக வைத்திருக்கும் நிலையில் தான் பாடசாலையில் பரீட்சைகள் நடத்தப்படுவது வரவேற்கத்தக்கதாகும். பிள்ளை முழுமை பெறமுன் திணைக்களங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் என அதிகபட்ச பரீட்சைகளை மாணவர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் ஏனோ தானோ என பரீட்சைக்கு முகம்கொடுக்கின்றனர். வரையறுக்கப்பட்டு திட்டமிட்ட முறையில், மாணவர் நிலையை மையப்படுத்தி கால இடைவெளிகளையும் கருத்திற்கொண்டு பரீட்சைகள் நடத்துவது விரும்பத்தக்கது.

**ஆசிரியர்களின் சுதந்திரம்**

ஆசிரியர்களும் சுதந்திரமாக இயங்க தமது குடும்பத்தில் அக்கறை செலுத்த வலயம், திணைக்களம் என்பன தடையாக இருக்கக் கூடாது. பரீட்சைகளுக்கு நேரசூசி தயாரிக்கும் போது, சனிக்கிழமைகளிலும் பாடம் போடப்படுதல், தனிப்பட்ட ஒரு சிலரின் தேவைக்கான செயலமர்வுகளிலும் ஆசிரியர்கள் பங்கு கொள்ள, பாடசாலை முடிவடைந்த பின் சனிக்கிழமைவேளைகளில் பங்குபற்ற இவற்றை கூடுமானவரை தவிர்த்தல் நன்று. சாதாரணமாக ஆசிரியர்கள் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடத்துதல், நிகழ்வுகளுக்கு பயிற்சியளித்தல் போன்ற பல்வேறு தேவைகருதி பாடசாலை நேரம் தவிர்ந்த வேளையிலும் பாடசாலைக்காக தமது நேரத்தைச் செலவு செய்கின்றனர் என்பதை மறந்துவிடக்கூடாது. எவ்வளவுக்கு ஆசிரியர்களது சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுகின்றதோ அதே வேகத்தில் கற்பித்தல் நடவடிக்கையிலும் பாதிப்பு ஏற்படும்.

பாடசாலை எதிர்கொள்ளும் படிவங்களின் தொகை அதிகரித்துள்ளன. அடிக்கடிவரும் படிவங்கள் நிரப்புவதிலும், அவை சரிபார்க்கப்படுவதிலும்கற்பித்தல்நேரம்விரயமாகின்றது. பெரும்பாலும் ஒரே விடயங்களை மாறி மாறி சந்திக்க நேரிடும். இவற்றை உரியவர்கள் ஒழுங்கான முறையில் உரிய இடத்தில் கோவைப்படுத்தப்படாத காரணங்களால் ஆசிரியர்களது கற்பித்தல் நேரம் தின்னப்படுகின்றது. இவற்றுடன் ஆசிரியர்களுக்கு வேறு வேலைகளும் ஒதுக்கப்பட்டிருப்பதால் (தேசிய, அஞ்சல் அடையாள அட்டைகளை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்). வேலைப்பழு அதிகரித்து சோர்வுத்தன்மை ஏற்பட வழிகோலும். பழைய மாணவர் சங்க பணத்தை அதிகம் கொண்டுள்ள பாடசாலைகளாவது எழுதுவினைஞர்களை அந்தப் பணத்தில் நியமித்து இந்த வேலைகளின் பங்காளிகளாக அவர்களை அமர்த்துவது கற்றலுக்கு பேருதவியாக அமையும்.

> பாடசாலை எதிர்கொள்ளும் படிவங்களின் தொகை அதிகரித்துள்ளன. அடிக்கடிவரும் படிவங்கள் நிரப்புவதிலும், அவை சரிபார்க்கப்படுவதிலும் கற்பித்தல் நேரம் விரயமாகின்றது. பெரும்பாலும் ஒரே விடயங்களை மாறி மாறி சந்திக்க நேரிடும். இவற்றை உரியவர்கள் ஒழுங்கான முறையில் உரிய இடத்தில் கோவைப்படுத்தப்படாத காரணங்களால் ஆசிரியர்களது கற்பித்தல் நேரம் தின்னப்படுகின்றது.

தண்டனை வழங்காது கற்பிப்பது பிரச்சினையான விடயம். பயத்தில் படிக்கக்கூடிய மாணவர்களும் இது சாதகமாக உள்ளது. அதிகம் வகுப்பறையில் கற்றல் கற்பித்தலுக்கு இடையூறு செய்யும் மாணவர்களையும் தண்டிக்க,கண்டிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கற்றல் மட்டுமல்ல, ஒழுக்கமும் பின்னடைவைக் கண்டு வருகின்றது மாணவர்களைக் கண்டிக்காதவரை அவர்கள் பின்னர் கலாசார சீரழிவுகளில் ஈடுபட்டு மன உளைச்சலுக்கும், நெருக்கீடுகளுக்கும் ஆளாகின்றனர். தாமும் ஆளாகுவதுடன் பெற்றோரையும் நெருக்கீட்டுக்கு உள்ளாக்குகின்றனர். இதை நோக்கும் போது பாதிப்பு ஏற்படுவதில் எந்த மாற்றமும் இல்லை எனக்கூறலாம்.

பாடசாலைகளில் அலகு ரீதியாக பாடசாலை மட்டத்தில்பரீட்சைகள்நடத்தப்படுவது குறைவு. வினாத்தாள் தயாரித்தல், திருத்துதல், பின்னூட்டல் பழைய மாணவர்களின் உதவியை நாடி பரீட்சையை நடத்துவதன் மூலம் அடைவு மட்டத்தை இலகுவாக உயர்த்தலாம்.

ஒழுங்காக வகுப்பறைக்குச் செல்லாத ஆசிரியர்கள்,பாட ஆயத்தமில்லாது வகுப்பறை செல்லும் ஆசிரியர்கள், நேரம் தாழ்த்திச் செல்பவர்கள், ஒழுங்காக கற்பித்தலில் ஈடுபடாதவர்கள், மாணவர் மையக் கற்பித்தலிலிருந்து விலகிச் செல்பவர்கள், மாணவர்களுடன் நல்லறிவைப் பேணாத ஆசிரியர்கள். ஒழுக்கத்துடனான ஆடை அணிந்துவராத ஆசிரியர்கள், பொருத்தமற்ற வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபடும்ஆசிரியர்கள்,நவீன உபகரணங்களைப் பயன்படுத்தாது கற்பித்தலில் ஈடுபடும்ஆசிரியர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதிபர் இவர்களைக்கண்டும்காணாது விடுதல் இவர்களுடன் கதைத்தல் முரண்பட வேண்டிவரும் என்பதால் நடவடிக்கை எடுக்காது விடல் அல்லது தட்டிக்கேட்காது விடல் மாணவர்களதுகல்வித்தரம்வீழ்ச்சியடையக் காரணமாகும். இந்த விடயங்களில் அதிபர், உள்ளக மேற்பார்வையாளர்கள், பிரதிஅதிபர், மேலதிகாரிகள் உரிய கவனம் செலுத்தி கல்வி உயர்வை எட்ட வழிகோல வேண்டும்.

**பல்வேறுவகையான மாணவர்கள்**

பல்வேறுவகையான மாணவர்கள் காணப்படுவதும் தனியார் வேறுபாட்டுக்கேற்ப கற்பித்தலில் ஆசிரியர்களுக்கு கடினத்தன்மையை ஏற்படுத்துகின்றது. மன எழுச்சிக் குறைபாடுடைய மாணவர்கள், நெருக்கீட்டுக்கு உள்ளான சீர்மிய உதவி தேவைப்படும் மெல்லக்கற்கும் மாணவர்கள். தாழ்வுச் சிக்கலுள்ள, வறுமைக்குட்பட்ட, உளக்குலைவுக்குட்பட்ட, வரவு குறைந்த, மிதமான இயல்பூக்கங்களைத் கொண்ட, பெற்றோரின் அக்கறை குறைந்த, கல்வியில் ஆர்வம் குறைந்த ஏனைய மாணவர்களின் கற்றலுக்கு இடையூறு விளைவிக்கும் மாணவர்கள், வகுப்பறைத் தொழிற்பாட்டில் ஒதுங்கிநிற்கும், கற்றல் உகரணங்களின்றி வரும், அமைதியாக இருப்பதை தவிர்க்கும், ஞாபகமறதியுள்ள, ஊட்டக் குறைபாடுடைய கலாசார சீரழிவு களில் ஈடுபடும், அதீத உணர்ச்சிவசப்படும் செயற்பாடுகளைக் கொண்ட மாணவர்கள் எனப் பலதரப்பட்ட மாணவர்களை ஆசிரியர்கள் சந்திக்கின்றனர். இவர்களை ஒரு முகப்படுத்தி கற்பித்தலில் ஈடுபடுவது என்பது ஆசிரியர்களுக்கு ஒரு சவாலான விடயம் தான். தண்டிப்பு, கண்டிப்பு இல்லாத இவர்களை வைத்து கற்பித்தலை மேற்கொள்வது இலகுவான காரியமல்ல. எவ்வாறாயினும் மாணவர்களது பின்புலம் கவனத்தில் எடுக்கப்பட்டு, தனி யார் வேறுபாட்டையும்கவனத்தில்கொண்டு,சிலஉத்திகளைக்கையாண்டுகற்பித்தலில்ஈடுபடுவதன் மூலம் கல்வித்தரத்தை உயர்த்த முடியும்.

வலயரீதியான தரப்படுத்தலில் இலங்கையிலுள்ள 98 வலயங்களில் முதல் 25 இடங்களுக்குள் வடமாகாணம் எட்டப்படவில்லை. இந்தச் சவாலானது முறியடிக்கப்பட வேண்டிய சவாலாகும். ஆசிரியர்களை சுயமாக சுதந்திரமாக இயங்கவிட்டு, ஆசிரியர்களுக்கு சுமையைக் கூட்டாது, முறையற்ற இடமாற்றங்களைதவித்து நிர்வாகரீதியான நெருக்கீடுகளுக்கு உட்படுத்தாது ஆசிரியர்களை வழிப்படுத்துவதன் மூலம் உடல், உள பாதிப்புக்களுக்கு உட்படாது மகிழ்வான கற்பித்தல் ஊடாக மகிழ்வான கற்றலுக்கான கவின்நிலை பாடசாலைகளில்தோற்றம் பெற்று எதிர்வரும் காலத்தில் நிச்சயமாக கல்வித்தரம் கல்வியின் நிலை உயர்வடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்குபவளே தாய் அழிப்பவள் அல்ல

## வெடிகுண்டுகளின் தாய் தொடர்பில் பாப்பரசர் கருத்து

ஊரோம், மே 9
அமெரிக்க இராணுவம் ஆப்கானிஸ்தானில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் 'வெடிகுண்டுகளின் தாய்' என்று அறியப்படும் குண்டை வைத்து நடத்திய தாக்குதல் தொடர்பில் பாப்பரசர் பிரான்சிஸ் தற்போது கருத்துத் தெரிவித்துள்ளார். அந்தப் பெயரைக் கேட்டபோது தான் கேலவமாக உணர்ந்தார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அணுகுண்டு அல்லாத குண்டுகளின் வரிசையில் அமெரிக்காவிடம் உள்ள மிகப்பெரிய குண்டு 'வெடிகுண்டுகளின் தாய்' என்று அறியப்படுகிறது. குறித்த குண்டுக்கு 'வெடிகுண்டுகளின் தாய்' என்று பெயர் வைத்தமைக்கு பாப்பரசர் தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.

வத்திக்கானில் மாணவர்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் உரை யாற்றுகையில், "வெடிகுண்டுகளின் தாய்" என்ற பெயரைக் கேட்ட போது நான் கேவலமாக உணர்ந்தேன். ஒரு தாய் உயிர் மட்டுமே கொடுப்பார். ஆனால், இது உயிரிழப்புக்களை மட்டுமே கொடுக்கிறது. இந்தக் கருவியை தாய் என்று அழைக்கிறோம். என்னதான் நடந்து கொண்டிருக்கிறது" எனப் பாப்பரசர் தெரிவித்தார். (ம)





# உலகத் தலைவ
# மக்ரோனுக்கு வா

பரிஸ், மே 9
பிரான்சின் அதிபராகப் பொறுப்பேற்றுள்ள மக்ரோனுக்கு உலகத் தலைவர்களிடம் இருந்து தொடர்ந்து வாழ்த்துக்கள் குவிந்த வண்ணமுள்ளன.

பிரான்ஸ் அதிபர் தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்று அன்றைய தினம் இரவே முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

கடந்த மாதம் 23 ஆம் திகதி நடைபெற்ற முதலாம் கட்டத் தேர்தலில் எவருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. மக்ரோன், பென் இருவரும் முதலிரு இடங்களைப் பிடித்தனர். லிபரல் கட்சியைச் சேர்ந்த இம்மானுவல் மக்ரோன், வலதுசாரிக் கொள்கையை உடையவரான மரின் லி பென் இருவரும் இரண்டாம் கட்டத் தேர்தலில் நேற்றுமுன்தினம் போட்டியிட்டனர். அளிக்கப்பட்ட வாக்குகளில் 65.9 சதவீத வாக்குகளைப் பெற்று மக்ரோன் வெற்றிபெற்றார். பென்னுக்கு 34.1 சதவீத வாக்குகளே கிடைத்தன. தேர்தலில் வெற்றிபெற்றதை அடுத்து உலகத் தலைவர்கள் பலரும் மக்ரோனுக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

"புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் மக்ரோனுக்கு ஆதரவாகத் தொடர்ந்து செயற்படுவோம்.

பிரான்ஸ் அரசுக்கு ஒத்துழைப்பை

# மாணவிகளைச் சந்தித்தார் நைஜீரிய அதிபர் புஹாரி



நைஜீரியாவில் போகோ ஹரம் ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்ட மாணவிகள் 82 பேர் நேற்றுமுன்தினம் அதிகாலை (இலங்கை நேரப்படி) விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களை அந்த நாட்டு அதிபர் புஹாரி நேற்றுச் சந்தித்தார்.

கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் சம அளவில் வாழ்ந்துவரும் நைஜீரியாவில் இஸ்லாமிய சட்டத்துக்கு உட்பட்ட ஆட்சியை கொண்டுவர வலியுறுத்தி போகோ ஹரம் ஆயுததாரிகள் போராடி வருகின்றனர். கடந்த எட்டு வருடங்களாக இந்தப் போராட்டம் நடைபெற்று வருகிறது. இதுவரை கிட்டத்தட்ட 20 ஆயிரம் மக்கள் உயிரிழந்துள்ளனர். கடந்த 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி போர்னோ மாகாணத்தில் சிபொக் என்ற இடத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி விடுதியில் இருந்து 276 மாணவிகளை கடத்திச் சென்றனர். அவர்களை பாலியல் அடிமைகளாகவும் விற்றுவிடப்போவதாக போகோ ஹரம் எச்சரித்தது. மாணவிகளை மீட்பது தொடர்பில் பேச்சு நடைபெற்று வந்த நிலையில் 82 மாணவிகள் நேற்றுமுன்தினம் அதிகாலை விடுவிக்கப்பட்டனர்.

"மாணவிகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய நைஜீரிய அரசு அனைத்து உதவிகளையும் செய்யும். மாணவிகளின் விடுதலைக்காகப் பணியாற்றிய சுவிற்சர்லாந்து அரசு, பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுக்கு நன்றி தெரிவிக்கிறேன்" என்று புஹாரி தெரிவித்தார். (ம)

# அகதிகளை விரும்புகிறது பிரான்ஸ்

பரிஸ், மே 9
பிரான்ஸ் அதிபர் தேர்தலில், லி பென் தோற்கடிக்கப்பட்டு, லிபரல் கட்சியைச் சேர்ந்தவரான மக்ரோன் வெற்றிபெற்றார். இந்த வெற்றியின் மூலம் பிரான்ஸ் மக்கள் அகதிகளை ஆதரிக்கும் போக்கைக் கொண்டுள்ளனர் என்ற கருத்து அல்லது அபிப்பிராயம் சொல்லாமல் சொல்லப்படுகிறது.

தேர்தல் பரப்புரையில் லி பென், அமெரிக்க அதிபர் ட்ரம்பின் பரப்புரையைப் பின்பற்றி சில சர்ச்சைக்குரிய கருத்துக்களை முன்வைத்திருந்தார். "பிரான்ஸின் பொருளாதாரம், அமைதி, சுய பாதுகாப்பு, வளர்ச்சி ஆகியவற்றுக்குப் பங்கம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற சட்டவிரோதக் குடியேறிகள் அத்தனைபேரும் வெளியேற்றப்படுவார்கள். மத்திய கிழக்கில் இருந்தோ அல்லது ஏனைய பாகங்களில் இருந்தோ வரும் அத்தனை அகதிகளும் என்றல்லாமல் ஆண்டுகளுக்குப் பத்தாயிரம் அகதிகள் மட்டுமே ஏற்கப்படுவார்கள். தேவையற்ற இடங்களில் உள்ள மசூதிகள் இல்லாமல் செய்யப்படும், சமூக நலத்திட்டங்களின் கீழ் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்'' போன்றவை பென்னின் முழக்கங்களாக அமைந்தன.

"அகதிகளை அனுசரித்துச் செல்லும் அதேநேரம் நாட்டின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த இயலும்" என்று வாதிட்டார் மக்ரோன். அவரது வாதம் பிரான்ஸ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பது இந்த வெற்றியின் மூலம் பகிரங்கமாகத் தெரியவருகிறது. பிரான்சில் தற்போது அடிக்கடி தீவிரவாதத் தாக்குதல்கள் நடைபெற்றாலும் அவற்றை அப்பாவி அகதிகளுடன் தொடர்புபடுத்தக்கூடாது என்பதை பிரான்ஸ் மக்கள் நன்கு அறிந்துள்ளனர். இதுவே மக்ரோனின் வெற்றி சொல்லும் கருத்து. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ர்கள்
ழ்த்து

வழங்க ஆர்வமாய் உள்ளோம்" என்று அமெரிக்க அதிபர் ட்ரம்பின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகை செய்தி வெளியிட்டது.

"எங்களது நீண்டகால நட்பு நாடுகளில் பிரான்ஸும் ஒன்று. புதிய அதிபருடன் விரிவான அளவில் பணியாற்ற நாங்கள் ஆர்வமாய் உள்ளோம்" என்று பிரிட்டன் பிரதமர் தெரேசா மே தெரிவித்தார். (ம)

# மற்றொரு அமெரிக்கக் குடிமகன் வடகொரியாவில் கைது

பியாங்யாங், மே 9

தங்கள் நாட்டில் இருந்துகொண்டு தமக்கு எதிரான சதி நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் வடகொரியா, அமெரிக்கக் குடிமகன் ஒருவரை நேற்றுமுன்தினம் கைது செய்தது.

பியாங்யாங் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து வந்த கிம் ஹாக்சாங் என்ற நபரே அவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவருடன் சேர்த்து இந்தப் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்துவந்த மூன்று அமெரிக்க குடிமக்களை வடகொரியா கைது செய்துள்ளது.



தனது நாட்டு குடிமக்களை கைது செய்து அவர்களை வடகொரியா பிணைக் கைதிகளாக பயன்படுத்துகிறது என்று கடந்த காலங்களில் அமெரிக்கா குற்றம்சாட்டியிருந்தது.

பன்னாட்டு சட்டதிட்டங்களை மீறிய அணுவாயுதப் பரிசோதனை விவகாரத்தில் வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் தற்போது போர்ப் பதற்றம் உருவாகியுள்ள நிலையில் இந்தக் கைது நடவடிக்கைகள் நிலைமையை மேலும் மோசமாக்கும் என்பது அரசியல்நோக்கர்களின் கருத்து. (ம)

# அடுக்குமாடி குடியிருப்பில் பற்றியது தீ; நால்வர் சாவு



சென்னை, மே 9

சென்னை – வடபழனிப் பகுதியில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு பேர் உடல்கருகி உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று சில இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

உயிரிழந்த நால்வரைத் தவிர மேலும் ஐவர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் ஏற்பட்ட தீ மிக விரைவாக ஏனைய பகுதிகளுக்கும் பரவியது என்றும், மின் கசிவே விபத்துக்குக் காரணம் என்றும் இரு வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ம)

# தொண்டர்களைச் சந்திக்கிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி

சென்னை, மே 9

தி.மு. கழக தலைவர் கருணாநிதி தனது பிறந்த தினமான ஜூன் மூன்றாம்திகதி தொண்டர்களைச் சந்திகவுள்ளார் என்று அந்தக் கட்சியின் செயலாளர் ஆர். எஸ்.பாரதிதெரிவித்தார்.



தி.மு. கழக தலைவர் கருணாநிதி, 1957 ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலில் குளித்தலைத் தொகுதியில் வெற்றிபெற்று முதல் முறையாகச் சட்டப்பேரவைக்குள் அடியெடுத்து வைத்தார். கடந்த 60 ஆண்டுகளில் போட்டியிட்ட எந்தத் தேர்தலிலும் தோல்வியைச் சந்திக்காதவர் என்ற வரலாற்றுப் பெருமை அவருக்கு உண்டு. அவர் சட்டப்பேரவைக்குள் நுழைந்ததின் 60ஆம் ஆண்டு வைர விழாவை தி.மு. கழகத்தின் சார்பில் கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் ஜூன் 3 ஆம் திகதி கருணாநிதியின் பிறந்தநாளை தி.மு. கழகத்தினர் சிறப்பாகக் கொண்டாடுவர். இந்த ஆண்டு பிறந்த நாளுடன்சேர்த்து கருணாநிதியின் சட்டப் பேரவை வைர விழாவையும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் நடக்கவுள்ள இந்த விழாவில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பிஹார் முதல்வர் நிதிஷ் குமார் உள்ளிட்ட முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பல்வேறு மாநில முதல்வர்களும் பங்கேற்க உள்ளனர். இந்த நிலையில் அன்றையதினம் கருணாநிதி தொண்டர்களையும் சந்திக்கவுள்ளார் என்று அந்தக் கட்சி மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

# தற்கொலை தாக்குதலில் 9 பொலிஸார் உயிரிழப்பு

பக்தாத், மே 9

ஈராக்கின் மோசூல் நகரில் பொலிஸாரின் சோதனைச் சாவடிக்கு அருகே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த ஆயுததாரி நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 9 பொலிஸார் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களைத் தவிர மேலும் மூவர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

# சுரங்கத்தில் விபத்து; 18 பேர் சாவு

சீனாவின் ஹவாங்பெங்கியாவ் நகரில் உள்ள தனியாருக்கு சொந்தமான நிலக்கரி சுரங்கத்தில் விசவாயுக் கசிவு ஏற்பட்டதில் 18 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 37 பேர் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டனர். வேறுசிலர் சுரங்கத்துக்குள் சிக்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அவர்களைத் தேடும் பணிகள் நேற்று மதியம் வரை தொடர்ந்தன. (ம)



பிரான்ஸ் அதிபர் தேர்தல் முடிவுகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஒரு மணியளவில் (இலங்கை நேரப்படி) வெளியாகின. லிபரல் கட்சியின் வேட்பாளர் மக்ரோன் மிகப்பெருளவான வாக்குகள் வித்தியாசத்தில் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்ரோனே அடுத்த அதிபர் என்று அறிவிக்கப்பட்டதும் தலைநகர் பரிஸில் உள்ள ஈபிள் கோபுரத்துக்கு முன்பாகவும் ஏனைய இடங்களிலும் திரண்டிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது ஆரவாரத்தை வெளிப்படுத்தினர். அது தொடர்பான ஒளிப்படமே இது. (ம)

# ஆப்கானின் ஜால் மாவட்டம் தலிபன் அமைப்பின் பிடியில்

குண்டூஸ், மே 9

ஆப்கானிஸ்தானின் குண்டூஸ் மாகாணத்தில் உள்ள கலா இ ஜால் மாவட்டம் தலிபன் அமைப்பின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது என்று அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஜபி குல்லா தெரிவித்தார். ஆப்கானிஸ்தான் அரசுக்குத் தலிபன் அமைப்பு பெரும்சவாலாக உள்ளது. அந்த அமைப்பை ஒடுக்க அங்கு அமெரிக்கப் படைகளும் முகாமிட்டுள்ளன. குண்டூஸ் மாகாணத்தின் கலா இ ஜாலை இரண்டு நாள்கள் தொடர்ந்த கடும் சண்டையின் பின்னர் தலிபன் அமைப்பு கைப்பற்றியது என்று அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஜபி குல்லா தெரிவித்த கருத்தின்படிஅறியவருகிறது. எனினும் இந்தத் தகவலை அரசு தரப்பு மறுத்துள்ளது என்றும்சிலஊடகங்கள் வெளியிட்டன. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையன்: அப்பாஇதுஎன்னசெடிப்பா...
அப்பா: சோத்துக் கற்றாழை
பையன்: அது சோறு குடுக்குமாப்பா




பையன்: சரி இது என்ன செடிப்பா
அப்பா: மணிபிளாண்ட்
பையன்: அப்போ இது காசு குடுக்குமாப்பா...

❤ ரோமியோ ❤ @Killer_Chubbly
யாரும் பாராட்டும் அளவுக்கு வாழத் தேவை இல்லை. நமக்கு உண்மையா வாழ்ந்தாலே போதும்...
11 324 169

# மீண்டும் இணையும் விஷால்-ஆர்யா

விஷால்–கார்த்தி முதன்முறையாக இணைந்து நடிக்கும் படம் `கருப்பு ராஜா வெள்ளை ராஜா'. மறைந்த இயக்குநர் சுபாஷ் எழுதியிருந்த கதையை நடிகரும், இயக்குநருமான பிரபுதேவா இயக்கித் தனது சொந்தத் தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் தயாரிக்க இருக்கிறார். ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்க உள்ள இப்படத்தில், கதாநாயகியாக `வனமகன்' படத்தில் நடித்துள்ள ஷாயிஷா சய்கல் ஒப்பந்தமாகி இருக்கிறார்.

நடிகர் சங்கக் கட்டடத்துக்குப் பணம் திரட்டும் விதமாக, இப்படத்தில் இணைந்து நடிக்க விஷால் மற்றும் கார்த்தி ஒப்பந்தமாகி இருக்கின்றனர். இப்படத்தின் மூலம் வசூலாகும் பணத்தை நடிகர் சங்கக் கட்டடம் கட்டப் பயன்படுத்த இருப்பதாக அறிவித்திருக்கின்றனர்.

இந்த நிலையில், நடிகரும், விஷாலின் நெருங்கிய நண்பருமான `கடம்பன்' ஆர்யா இந்த கலகல கூட்டணியில் இணைய இருப்பதாகப் படக்குழுவுக்கு நெருக்கமான தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆர்யா இப்படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க இருக்கிறார்.

முன்னதாக ஆர்யா – விஷால் இணைந்து `அவன் இவன்' படத்தில் நடித்திருந்தனர்.

அதுமட்டுமல்லாமல் நடிகர் சங்கத் தேர்தலின்போது ஆர்யா, விஷாலின் பாண்டவர் அணி சார்பில் கலந்துகொண்டு, விஷாலுக்கு ஆதரவு திட்டியிருந்தார். இந்நிலையில், அவருடன் மீண்டும் இணைந்து நடிக்கவிருப்பதாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.



குடிக்கிற தண்ணிய ஃப்ரிஜில வச்சது போய்...





குளிக்கிறத்துக்கு தண்ணிய ஃப்ரிஜில வைக்கனும் போல... என்னா வெயிலு...

இதையெல்லாம் கடந்து வந்தாச்சி...
இனி நாமளே போனாலும்
இப்படியொரு இடமும்...




அதே குழந்தைத் தனமும்
இருப்பது கஷ்டம்....!

ஒன்னு நீங்களே ஏதாவது ஒரு நல்ல பொண்ணா பாத்து எங்களுக்கு உசார் பண்ணி குடுங்க



இல்லனா எப்போ கல்யாணம்? ஏதாவது லவ் பண்றியானு? கேக்காம முடிகிட்டு இருங்க... 25 வயசுக்கு மேல சிங்கிளா இருந்தா உங்க தொல்ல தாங்க முடியல



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** அனைவரிடமும் அன்புடன் பழகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தால் சேமிக்க முயல்வர்.

**இடபம்:** நண்பர்களால் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். குடும்பத்தினரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். பெண்கள் ஆன்மிக நிகழ்ச்சியில் பங்கேற்பர்.

**மிதுனம்:** நேர்மையான குணத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் கவனம் செலுத்தி ஆதாயம் காண்பீர்கள். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கடகம்:** புதியவர்களிடம் நெருங்கிப் பழக வேண்டாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திக்கலாம். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரத் தாமதமாகும்.

**சிங்கம்:** உறவினர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமித வளர்ச்சி உண்டாகும். விருந்து உபசரிப்பில் கலந்து கொள்வீர்கள். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**கன்னி:** உழைப்புக்குரிய நற்பலன் உங்களைத் தேடி வரும். தொழில், வியா பாரத்தில் இருந்த இடையூறு விலகும். லாபம் உயரும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**துலாம்:** மனதில் இருந்த குழப்பம் மறையும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் ஆதாயம் உயரும். மனைவியின் செயல்பாடு பெருமை சேர்க்கும்.

**விருச்சிகம்:** பொறுப்பை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வளர்ச்சி உண்டாகும். திடீர் செலவால் சேமிப்புக் கரையும். உணவு விடயத்தில் கட்டுப்பாடு அவசியம்.

**தனுசு:** எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் கூடும். குடும்பத்தினரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். உறவினர் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும்.

**மகரம்:** உறவினருக்கு இயன்ற அளவில் உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் உண்டாகும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர்.

**கும்பம்:** நிதானத்துடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் லாபம் காண்பீர்கள். வெளியூர் பயணம் செல்ல நேரிடும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**மீனம்:** அன்றாடப் பணிகளில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைவதால் வருமானம் கூடும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். ஆரோக்கியத்தில் அக்கறை உண்டாகும்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 8 | | 4 | 7 | | |
| | | | | | 1 | | 6 | 3 |
| | | 1 | | | | | 8 | |
| | | 5 | | 3 | | | | |
| | | | | 5 | | 8 | | 9 |
| | | 7 | | | 8 | 5 | | |
| | | | 3 | | 2 | | 7 | |
| 9 | | | | | | | | 4 |
| | 2 | | | 6 | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 2 | 4 | 8 | 3 | 6 | 5 | 9 |
| 3 | 5 | 8 | 9 | 6 | 1 | 7 | 2 | 4 |
| 4 | 9 | 6 | 7 | 2 | 5 | 1 | 8 | 3 |
| 2 | 4 | 7 | 8 | 1 | 9 | 5 | 3 | 6 |
| 9 | 3 | 5 | 6 | 7 | 4 | 2 | 1 | 8 |
| 8 | 6 | 1 | 5 | 3 | 2 | 9 | 4 | 7 |
| 7 | 2 | 4 | 3 | 5 | 6 | 8 | 9 | 1 |
| 6 | 1 | 9 | 2 | 4 | 8 | 3 | 7 | 5 |
| 5 | 8 | 3 | 1 | 9 | 7 | 4 | 6 | 2 |


சுடோக்கு

ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டக் கற்கள்

## வைடூரியம்



வைடூரியம் கேரளாவில் கிடைப்பதே விலை உயர்ந்ததாகும். இது தவிர, ஒரிஸாவில் கிடைப்பது சற்று விலை குறைந்ததாக உள்ளது. பிரேசில், இலங்கை, அமெரிக்கா முதலிய இடங்களிலும் வைடூரியம் கிடைக்கின்றது.


### வைடூரியக் கல்லின் பயன்

வைடூரியக் கல்லை அணிவதால் மிகுந்த செல்வம், செல்வாக்கு உயரும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாம். இழந்த செல்வத்தை மீட்டுத் தரும். குருதி அழுத்த நோயைக் கட்டுப்படுத்தும். ஆன்மிக, தெய்வீக காரியங்களில் ஈடுபாட்டை அதிகரிக்கும். தற்கொலை எண்ணங்கள் வராது. மன நிலை புத்துணர்ச்சியுடன் இருக்கும்.

வைடூரியக் கல்லைத் தங்கத்தில் பதித்து ஆள் காட்டி விரல் அல்லது மோதிர விரலில் அணிந்த கொள்வது நல்லது. வைடூரியத் கல்லை கால சர்பயோகம் உடையவர்களும், கேது திசை நடப்பில் உள்ளோரும், 7,16,25 ஆகிய எண்களில் பிறந்தோரும் அணிவது உத்தமம். அஸ்வினி, மகம், மூலம் போன்ற நட்சத்திரக்காரர்களும் அணியலாம்.

புள்ளிகள், பள்ளங்கள், மங்கலான நிறங்கள் உடைய வைடூரியங்கள் தீமையான பலன்களை அடைய நேரிடும். எனவே வைடூரியத்தை நன்கு பரிசோதித்து அணிவது உத்ததமம்.

ஒப்பல், வைடூரியத்திற்கு மாற்றுக் கல்லாக ஒப்பல் என்ற கல்லை அணியலாம். ஒப்பல் கற்கள் ஏழு எண்காரர்களுக்கு மிகவும் உகந்ததாகும். இது பல வண்ணங்களில் கிடைத்தாலும் வெண்மை நிறம் கொண்ட கல்லே சிறந்ததாகும்.



# வரலாற்றில் இன்றைய தினம்

1450-திமுறிட் முடியரசர் அப்ம்அல்லதீப் படுகொலை செய்யப்பட்டார்.

1671 -மதகுருவாக வேடமணிந்த தோமஸ்புளூட் லண்டன் டவரில் முடிக்குரிய நகைகளைத் திருட முயற்சித்தார்.

1874 -மும்பை நகரில் குதிர இழுக்கும் பஸ்வண்ட இரண்டு வழித்தடங்களில் தனது சேவையைத் தொடங்கியது.

1877-பெருகரைக்கப்பால் 8.8 மக்னி ரியூட் அளவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் 2541 பேர் உயிரிழந்தனர். இவர்களில் சிலர் ஹவாய் ஜப்பான் போன்ற தூர இடங்களில் இருந்து வந்தவர்கள் ஆவர்.

1901-ஆஸ்திரேலியாவின் முதலாவது நாடாளுமன்றம் மெல்போர்னில் தொடங்கியது.

1936-அடிஸ் அபபாவை மே 5இல் கையகப்படுத்தியதையடுத்து முறைப்படி எதியோப்பியாவை இத்தாலி தன்னுடன் இணைத்துக் கொண்டது.

1942 -ஷின் கிவ் பொடோலியன் நகரில் 588 யூதர்கள் ஜேர்மனிய எஸ்.எஸ்.இனரால் கொல்லப்பட்டனர்.

1945-ஜேர்மனியரின் பிடியிலிருந்த சனல் தீவுகள் 5 ஆண்டுகளின் பின்னர் பிரித்தானியாவால் விடுவிக்கப்பட்டது.

1948-செக்கஸ்லேவேகியாவின் மே 9 ஆம் திகதிய அரசமைப்பு நடைமுறைக்கு வந்தது.

1955-மேற்கு ஜேர்மனி நேர்டோவில் இணைந்தது.

1969-பிரேசிலின் இராணுவ சர்வாதிகார ஆட்சியாளருக்கு எதிரான நடவடிக்கையாக கார்லோஸ்லாமார்கா தலைமையிலான முதலாவது நகர கெரில்லா அணியினரால் இரண்டு வங்கிகள் கொள்ளையிடப்பட்டன.

1970 -வியட்னம் போர்; வோஷிங்டன் நகரில் 75000 தொடக்கள்ம் 100 000 பேர் வரை போருக்கு எதிராக வெள்ளைமாளிகை முன் அணிதிரண்டனர்.

1974-வோட்டர் கேட் ஊழல் அரசதலைவர் நிக்சனுக்கு எதிரான முறைசார்ந்த விசாரணை அமெரிக்க நீதிவிசாரணைக் கமிட்டியால் தொடங்கப்பட்டது.

2003-சதீஸ்நம்பியாரின் அறிக்கைக்கு தமிழ்க் கட்சிகள் அதிருப்தி கண்டனம் யதார்த்தம் புரியாமல் தயாரிக்கப்பட்டது. பக்க சார்பானது குப்பையில் வீச வேண்டியதெனத் தெரிவிப்பு.

2003-வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தனியே பிரிப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு கோரும் மனுவை விசாரிக்க அப்பீல் நீதிமன்றம் முடிவு.

2003-புலிகளின் அரசியற் குழு ஸ்பெயினுக்குச் சென்றது.

2007-யாழ்.மாணவர்களின் பிரச்சினைகளை நன்கறிவேன் என யாழ். வந்த அமெரிக்க ராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு.

2016-மக்களின் கடும் எதிர்ப்பால் பூநகரியில் காணிப் பறிப்பு முயற்சி கைவிடப்பட்டது.

2016-சட்டவிரோத வாள்கள் உற்பத்தி செய்யத் தடை யாழ்.மேல் நீதிமன்றம் உத்தரவு.

2016-இரணைதீவு மக்கள் மீள்குடியமர விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு.

2016-ஆப்கானிஸ்தானில் எண்ணெய்த் தாங்கியுடன் பஸ்மோதி 73பேர் பரிதாபச் சாவு.

### நாளை

**சித்திரை-27**
புதன்கிழமை -10.05.2017
திதி: பூரணை பி.இ.03.15
நட்சத்திரம்: சுவாதி பி.ப.02.50
சுபநேரம்:04.24-05.54 வரை
ராகுகாலம்:11.54-01.24 வரை
சித்திராப் பூரணை விரதம், சித்திரகுப்த விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் சிறுநீரக நோய்க்கு முற்றுப்புள்ளி இடப்படுமா?

வன்னி மக்களை அச்சம் கொள்ளச் செய்யும் வகையில் உருவெடுத்துள்ளது சிறுநீரக நோய்.. வன்னியில் வவுனியா, முல்லைத்தீவு மாவட்ங்களைச் சேர்ந்த மக்களையே இந்த நோய் அதிகமாகப் பாதித்துள்ளது என்கின்றது வடக்கு மாகாண சுதார அமைச்சு. இந்த நோய்க்கான காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளன. எனினும் இந்த நிலையை மாற்றி அமைப்பது யார்? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

சிறுநீரக நோய் பரவுவதற்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் இல்லாமைதான்காரணம் எனக் கண்டறியப்பட்ட போதிலும் அனைத்து மக்களுக்கும் சுத்தமான குடிதண்ணீர் கிடைக்கப்பெறாமைக்கானகாரணம் தெரியவில்லை. மக்களுடைய இந்த முக்கியமான பிரச்சினையை விட வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு அப்படி என்ன முக்கியமான வேலை உள்ளது? என்ற கேள்வியும் எழவே செய்கின்றது. வடக்கு மாகாண அமைச்சுக்களின் சேவைகளில் மக்களுக்குத்திருப்தி இல்லையென்றே தோன்றுகின்றது. வடக்கு மாகணக்கல்வி அமைச்சு பொறுப்பேற்றதில் இருந்து இன்றுவரை வடக்கு மாகாணத்தைக் கல்வியில் முன்னுக்குக் கொண்டுவரமுடியவில்லை? மீன்பிடி அமைச்சு என்று ஒரு அமைச்சும் உள்ளது. எனினும் கொக்குளாய் முதல் சிலாபத்துறை வரை தென்பகுதி மீனவர்களால் உள்ளூர் மீனவர்கள் பாதிக்கப்பட்டு கொண்டே இருக்கின்றார்கள். அதற்கு இது வரை காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை, விவசாய அமைச்சும் பெயரளவில் மட்டுமே. பாதீனிய ஒழிப்புத் தொடர்பாகப் பேசுகின்றது. ஆனால் முழுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதைவிட வடக்கு மாகாண முதலமைச்சருடைய உள்ளூராட்சி அமைச்சினுடைய கழிவு அகற்றும் முகாமைத்துவம் சரியாக இடம்பெறவில்லை. தற்போது சுகாதார அமைச்சும் ஏனைய அமைச்சுக்களைப் போன்றே அசண்டையீனமாக உள்ளதாக மக்கள் கூறிக்கொள்கின்றனர். மக்கள் மத்தியில் இந்த அமைச்சுத் தொடர்பாக இருக்கும் கசப்பான அபிப்பிராயத்தை அந்த அமைச்சு உடைத்தெறிவதற்கான சிறந்த வாய்ப்பே இந்த சிறுநீரகம் தொடர்பான பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பது என நம்ப முடிகின்றது. சுகாதார அமைச்சு இதைச் செயல் வடிவில் காட்டுமா? இல்லை ஏனைய அமைச்சுக்களைப் போன்று கலந்துரையாடல்கள், அறிக்கைகளுடன் நிறுத்தி கொள்ளுமா என்பது கேள்வியாகவே உள்ளது.

சிறுநீரகப் பிரச்சினை தொடர்பான மீளாய்வுக் கூட்டம் மாதம் ஒருமுறை வவுனியாவில் இடம்பெறுகின்றது. சிறுநீரகச் சோதனைகளை செய்வதற்கு தற்போது செட்டிகுளம், மல்லாவி ஆகிய பகுதிகளில் இரு சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. அவை இரண்டு மாதங்களில் திறந்து வைக்கப்படுமெனவும் தெரிகின்றது. அதிகளவில் சிறுநீரக நோய் பாதிக்கப்பட்ட நோயாளர்களைக்கொண்ட இடங்களை இனங்கண்டு அங்கு 20 வயதிற்கு மேற்பட்ட சகலருக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ளத்திட்டமிடப்பட்டுள்ளது. எனசுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறு கூறிய அமைச்சு அதன் பிரகாரம் செயற்படுமானால் மக்களுக்குத்தற்போது ஆபத்தாக மாறியுள்ள குறித்த பிரச்சினையை ஒழித்துக்கட்ட முடியும் என நம்பலாம். மாறாக இது பேச்சளவில் என்றால். மக்களுடைய நிலை அந்தோ கதிதா ன். மக்கள் மத்தியில்தற்போது விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. அரசியலைப் பிரித்தறியக்கற்றுக் கொண்டுள்ளனர். இதற்கு மேலாக வெளியில் இருந்து ஒரு கூட்டம் தற்போதைய தமிழ் அரசியல் தலைமைகளை பற்றி விமர்சிப்பது மட்டுமன்றி அவர்கள் பற்றிய தவறான செய்திகளையும் மக்கள் மத்தியில் பரப்ப ஆரம்பித்துள்ளார்கள். எனவே எமது தலைமைகள் இதை உணர்ந்தவர்களாக மக்கள் மீது நல்லெண்ணம் கொண்டவர்களாகச் செயற்பட வேண்டும். அவ்வாறு செய்வார்களானால் அவர்கள் ஆலமரம்போல் பலவிழுதுகளைப் பரப்பி எப்போதும் நிமிர்ந்து நிற்பர்.



# விட்டுக் கொடு

பள்ளிக்கூட மணி ஒலிக்கிறது. தத்தம் வகுப்புகளுக்குச் செல்லும் மாணவ மாணவிகளை வரிசையாகச் செல்லும்படி கண்டளையிட்டார் ஆசிரியர். மூர்த்தி மட்டும் முன்னால் நகருபவர்களை இடித்துக்கொண்டு முன்னே போக எத்தனிக்கிறான். மூர்த்திக்கு தான் எதிலும் முன்வரிசையில் நிற்க வேண்டும் என்ற மனப்பான்மை. எவருக்கும் விட்டுக் கொடுக்கும் பண்பும் கிடையாது. வகுப்பறையில் எப்பொழுதும் அவன் முன் வாங்கில் தான் அமருவான். யாராவது தனக்கு முன்னால் இருந்தாலோ, நின்றாலோ அவர்களை இடித்துக் கொண்டும், முதுகில் பென்சிலால் குத்திக் கொண்டும் இருப்பான். அது மட்டுமல்ல, தனது பொருள்களை எவரும் தொட்டுப் பாப்பதைக் கூட அவன் அனுமதிப்பது கிடையாது. அப்படி, கூடப்படிப்பவர்கள் யாராவது தொட்டுப் பார்த்து விட்டால் அவர்களை அடித்து புரட்டி எடுப்பான். இதனால் இவனுக்கு உற்ற நண்பர்கள் என்று எவரும் கிடையாது. இவனது இந்த மாதிரியான குண இயல்புகளை ஆசிரியரும் தினம் தினம் கண் காணித்துத்தான் வந்தார்.

அன்று நன்நெறிப் பாடம். ஆசிரியர் கதை ஒன்று கூறத் தொடங்கினார்.

"விவேகானந்தர் மாணவராயிருந்த போது, படிப்பில் மட்டுமல்ல, மெய்வல்லுநர் போட்டிகளிலும் கெட்டிக்காராக இருந்தார். ஓட்டம் ஓடுவதில் மிகவும் வல்லவர் ஓட்டப் பந்தயங்களில் இவரே முதலாவதாக வருவார். பரிசும் கிடைக்கும்; பாராட்டுகளும் குவியும். ஆனால் இவருக்குப் பின்னால் ஓடி வருபவர்களுக்கு பரிசோ பாராட்டுக்களோ கிடைக்காத போது, அவர்கள் முகம் ஏமாற்றத்தால் வாடிப் போவதை விவேகானந்தர் கவனித்து வேதனைப்படுவார்.

ஒரு முறை ஒரு ஓட்டப் பந்தயத்தில் வேகமாக ஓடிக் கொண்டிருந்த விவேகானந்தர், காலில் சுளுக்கு ஏற்பட்டு ஓடச் சிரமப்பட்டு மெது மெதுவாக ஓட்டத் தூரத்தை ஓடி முடிக்க, இவருக்குப் பின்னால் வந்த நண்பன் இவரை முந்திக் கொண்டுசென்று வெற்றி பெற்று விடுகிறான். அவனுக்கு பரிசுகளும் பாராட்டுகளும் கிடைக்கின்றன. வெற்றி பெற்ற மாணவனுக்கு மிகவும் சந்தோஷம். அவனது சந்தோசமான முகத்தைக் காண விவேகானந்தருக்கு மனதுக்குள்ளே சந்தோஷமாக இருந்தது. அவர் அம் மாணவனிடம் சென்று கட்டித் தழுவி தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார். கட்டித் தழுவிய விவேகானந்தரின் காதுக்குள் அவரது நண்பர், "நண்பா காலில் சுளுக்குப் போல பாவனை செய்து நீ எனக்காக விட்டுக் கொடுத்ததை என்னால் உணர முடியாதா?" என்றான். விவேகானந்தர் அதிர்ச்சியடைந்தார். "இல்லை நண்பா... என்று விவேகானந்தர் ஏதோ கூற வர "நீ எதுவும் கூற வேண்டாம் உனது பெருந் தன்மை எவருக்கும் வராது. ஆனாலும் உன் தியாகச் செயலை நான் எவருக்கும் வெளியிட மாட்டேன்" என்று கூறி மீண்டும் அவரை நெஞ்சார தழுவி நின்றான்.

வெற்றியடைந்த மாணவனைப் பாராட்டிய ஆசியர்கள் விவேகானந்தர் கால் சுளுக்கி விட்டதாகக் கூறிச் செய்த பெருந்தன்மையான செயலை உணராதவர்களில்லை. ஆனாலும் அதனைக் காட்டிக் கொள்ளாமல் அவரையும் முதுகில் தட்டிக் கொடுத்து பாராட்டினார்.

விவேகானந்தர் விட்டுக் கொடுத்ததால் அவருக்கு மதிப்புத் தான் கூடியது. நீங்களும் விட்டுக் கொடுத்து பழகுங்கள். எல்லாம் தனக்கே உரியதென நினைக்காதீர்கள்" என்றார் ஆசிரியர்.

"சீ நான் ஏன் இப்படி நடந்து கொள்கிறேன்? காலையில் என் தம்பி எனது சைக்கிளை எடுத்ததற்கு அடி அடி என்று அடித்தேனே! அம்மாவும் கூட என்னைத் திட்டினார்களே! விவேகானந்தரால் தன் நண்பனுக்கு விட்டுக் கொடுக்க முடிந்ததென்றால் என்னால் மட்டும் ஏன் முடியாது?" நான் இனிமேல் இத்தகைய தவறுகளைச் செய்யக் கூடாது என்ற முடிவுடன் தனது சைக்கிளை வீடு நோக்கி திருப்பினான் மூர்த்தி.



## தெரிந்து கொள்வோம்

**1. பெண்களுக்குரிய பருவங்கள்**

| | | |
|---|---|---|
| பேதை | - | 08 வயதுக்கு கீழ் |
| பெதும்பை | - | 12 வயதுக்கு கீழ் |
| மங்கை | - | 16 வயதுக்கு கீழ் |
| மடந்தை | - | 25 வயதுக்கு கீழ் |
| அரிவை | - | 30 வயதுக்கு கீழ் |
| தெரிவை | - | 35 வயதுக்க கீழ் |
| பேரிளம் பெண் | - | 45 வயதுக்கு கீழ் |

**2. ஆண்களுக்குரிய பருவங்கள்**

| | | |
|---|---|---|
| பாலன் | - | 07 வயதுக்கு கீழ் |
| மீளி | - | 10 வயதுக்கு கீழ் |
| மறவோன் | - | 14 வயதுக்கு கீழ் |
| திறலோன் | - | 15 வயதுக்கு கீழ் |
| காளை | - | 16 வயதுக்கு கீழ் |
| விடலை | - | 30 வயதுக்கு கீழ் |
| முதுமகன் | - | 35 வயதுக்கு கீழ் |

**3. மனிதனின் பருவங்கள்**

| | | |
|---|---|---|
| பிள்ளை | - | குழந்தைப் பருவம் |
| சிறுவன் | - | பாலப் பருவம் |
| பையன் | - | பள்ளிப் பருவம் |
| காளை | - | காதற் பருவம் |
| தலைவன் | - | குடும்பப் பருவம் |
| முதியோன் | - | தளர்ச்சிப் பருவம் |
| கிழவன் | - | மூப்புப் பருவம் |


**4. பூவுக்குரிய பருவங்கள்**

| | | |
|---|---|---|
| அரும்பு | - | பூ அரும்பும் நிலை |
| மொட்டு | - | பூமொட்டுவிடும்நிலை |
| முகை | - | பூ முகிழ்க்கும் நிலை |
| மலர் | - | பூ மலரும் நிலை |
| அலர் | - | பூ மலர்ந்த நிலை |
| வீ | - | பூ வாடும் நிலை |
| செம்பல் | - | பூ வதங்கும் நிலை |

## வர்ணம் தீட்டுவோம்



## சாக்ரட்டீஸ் (கி.மு. 470 - 399)



இவர் சிறந்த தத்துவ ஞானி. கிரேக்க நாட்டின் தலைநகரான ஏதென்ஸ்சில் பிறந்தார். இவரது தந்தை ஒரு சிற்பி. சாக்கிரட்டீசும் சிறிது காலம் சிற்பியாக இருந்தார். பின்னர் அதனைக் கைவிட்டு அறிவூட்டும் நூல்களைக் படிக்கலானார். ஆன்மாவைப் பற்றியும், ஒழுக்கத்தைப் பற்றியும் மக்களுக்கு அறிவுரை கூறுவதையே இவர் தமது வாழ்க்கையின் குறிக்கோளாக கொண்டார். தத்துவ ஞானியான இவர், சிறந்த போர் வீரராகவும் இருந்து தாய் நாட்டைக் காப்பதற்காக நடந்த போர்களில் பங்கு கொண்டார்.

*"உன்னை நீ அறிந்து கொள்; இயற்கையில் எந்த மனிதனும் கெட்டவன் அல்லன்; மனிதனின் தீய குணத்துக்கு அறியாமையே காரணம். நல்ல குணத்துக்கு அறிவே காரணம்"* என்பவை இவருடைய தத்துவக் கொள்கைகள். இவருடைய போதனைகள் நாத்திகத்தைப் போதிப்பதாகவும், இளைஞர்களின் மனதைக் கெடுப்பதாகவும் இருக்கிறதென கி.மு. 399 இல் அரசினால் குற்றம் சாட்டப்பட்டார். நஞ்சு கொடுத்து மரண தண்டனை நிறைவேற்றுவது அக்கால வழக்கம். அதன்படி தனது நண்பர்களுடன் அறநெறி பற்றியும், ஆன்மாவைப் பற்றியும் பேசிய வண்ணம் சோக்கிரட்டீஸ் நஞ்சை அருந்தி உயிர் துறந்தார்.

இவர் இறப்பதற்கு முன் நிகழ்ந்தனவற்றையும், சாக்ரட்டீஸ் வெளியிட்ட கருத்துக்கள் பற்றியும், அவரது மாணவரான பிளேட்டோ ஒரு சிறந்த நூலை பின் வந்த நாள்களில் எழுதியுள்ளார்.

## பொருத்தமான உறவுமுறைகளுக்குரிய இலக்கங்களை கூட்டுக்குள் எழுதுவோம்

| | |
|---|---|
| 1. அம்மாவின் தங்கை ( ) | 1. பாட்டி |
| 2. அப்பாவின் அண்ணா ( ) | 2. பெரியம்மா |
| 3. அம்மாவின் தம்பி ( ) | 3. அத்தை |
| 4. அப்பாவின் தங்கை ( ) | 4. அம்மம்மா |
| 5. அம்மாவின் அக்கா ( ) | 5. மாமா |
| 6. அம்மாவின் அம்மா ( ) | 6. சித்தி |
| 7. அப்பாவின் தம்பி ( ) | 7. சித்தப்பா |
| 8. அப்பாவின் அப்பா ( ) | 8. பெரியப்பா |
| 9. அப்பாவின் அம்மா ( ) | 9. தாத்தா |

## கட்டங்களுக்குள் உள்ள எழுத்துக்களை வைத்து சொற்கள் ஆக்குவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ | தா | ய | ன் | தை | பூ |
| சை | கா | ந | னை | மி | ழை |
| வா | ந் | கூ | ய் | ச் | று |
| பு | ள | றா | ப் | ற் | ரை |
| ப | ரி | ச | ம | லை | கா |

1. ------------------------
2. ------------------------
3. ------------------------
4. ------------------------
5. ------------------------
6. ------------------------
7. ------------------------
8. ------------------------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலிட்டி கிணற்றிலிருந்து வெடி பொருள்கள் மீட்பு



யாழ்ப்பாணம், மே 9
மீள்குடியமர்வுக்கு அண்மையில் அனுமதிக்கப்பட்ட மயிலிட்டி வடக்குத் துறையில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து நேற்றுமுன்தினம் ஒரு தொகுதி வெடிபொருள்கள் மீட்கப்பட்டன.

7 மகசீன், 2 கைக்குண்டுகள், 1500ற்கும் மேற்பட்ட ஏகே 49 துப்பாக்கி ரவைகள், இனங்காண முடியாத 7 வெடிபொருள்கள் என்பனவே மீட்கப்பட்டன.

கடந்த வாரம் தமது காணிகளுக்குள் உள்ள கிணறுகளைத் துப்புரவு செய்யும் பணியில் மக்கள் ஈடுபட்டிருந்தனர். கிணற்றில் இருந்து சில வெடி பொருள்கள் மீட்கப் பட் டன. பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு வந்த அதிரடிப்படையினர் வெடிபொருள்களை எடுத்துச் சென்றனர். கிணறு துப்புரவாக்கும் பணிகள் கைவிடப்பட்டன. நேற்று முன்தினம் மீண்டும் அந்தக் கிணறு சிறப்பு அதிரடிப்படையினருடைய பணிப்பில் துப்புரவு செய்யப்பட்டது.

அப்போது வெடி பொருள்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-21,26)

# இலக்கியப் பெருவிழா 2 நாள்கள் புலோலியில்

யாழ்ப்பாணம்,மே 8
அகில இலங்கை இளங்கோ கழகத்தின் புலமை ஒலி இலக்கியப் பெருவிழா தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் நாளை புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமை மாலை 4மணிக்குத் தென்புலோலியூர் தமிழ்த்தாத்தா கந்த முருகேசனார் அரங்கில் பேராசான் தா.ஜெயவீரசிங்கம் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகும். 11ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்கு பேராசிரியர் கா.சிவத்தம்பி அரங்கில் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக் கழகக் கல்வியியல் துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி பங்கேற்பார். சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா சிறப்புரையாற்றுவார். கவிஞர் இ.த.ஜெயசீலன் தலைமையில் கவியரங்கமும், சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேலை நடுவராகக் கொண்ட சுழலும் சொற்போரும் நடைபெறும்.

11ஆம் திகதி பி.ப.4மணிக்கு பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அரங்கில் புற்றளை மகாவித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகும். வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் தொடக்கவுரையாற்றுவார். சிவன் அறக்கட்டளைக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத்தலைவர் வ.செல்வராஜா சிறப்புரை நிகழ்த்துவார். முதன்மை விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிறுவுநர் கணேஸ்வரன் வேலாயுதம் கலந்து கொள்வர்.

(த-10)

# தமிழ் மக்களின் தீர்வுக்காக இணைந்து செயற்படத்தயார்

## மறுவாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சி தெரிவிப்பு




முல்லைத்தீவு, மே. 9
கருணா விடயத்தில் எவ்வாறு தலைவரின் தெரிவு பிழைத்துப் போனதோ அதே போன்று தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தெரிவும் பிழைத்து விட்டது.

தமிழ் மக்களுக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அனைவரும் இதய சுத்தியுடன் செயற்படுவார்களேயானால் நாமும் அவர்களுடன் இணைந்து செயற்படத் தயாராகவே உள்ளோம்.

இவ்வாறு மறுவாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சித்தலைவர் கந்த சாமி இன்பராசா தெரிவித்தார்.

மறுவாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சியின் ஊடகச் சந்திப்பு புதுக்குடியிருப்பு பொன்விழா மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது கட்சியின் தலைவர் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஆயுதம் ஏந்திப் போராடிய நாங்கள், தற்போது அரசியல் நீரோட்டத் தில் இணைந்துள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்துக்கு ஆக்க பூர்வமாக எதனையும் செய்யவில்லை.

இன்று எத்தனையோ குடும்பங்கள் வாழ்க்கையைக் கொண்டு செல்ல முடியாது திண்டாடு கின்றார்கள். தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு விரைந்து செயற்படாது கால இழுத்தடிப்பையே செய்து வருகின்றார்கள். இவ்வாறான செயற்பாடுகளால் பொறுமையிழந்து நாங்கள் இன்று மறுவாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சி ஒன்றை ஆரம்பித்து முன்னகர்த்தி வருகின்றோம்.

எங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை தாருங்கள். நாங்கள் எல்லாவற்றையும் செயற்படுத்திக் காட்டுகின்றோம்.

அண்மையில் முன்னாள்போராளிகளும் தமிழ் அரசுக் கட்சியில் இணைந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அது காலம் கடந்த ஞானமாகவே நாங்கள் கருதுகின்றோம். இதுவரை காலமும் இல்லாது போன இந்த அக்கறை, தற்போது போராளிகளும் கட்சியை ஆரம்பித்து மக்கள் மயப்படுத்துகின்ற வேலைகளைச் செய்வதற்குக் களத்தில் இறக்கும் காலகட்டத்தில் விடுக்கப்பட்ட அழைப்பாக அது உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர், கிழக்கு மாகாணத்தின் தளபதியாக கருணாவைத் தெரிவு செய்த போது அவருக்கு அப்போது தெரியவில்லை கருணாவுக்குள் இருந்த அந்த மிருகத்தனமான செயற்பாடு.

அதே போல் தான் சிதறிக்கிடந்த அரசியல் கட்சிகளை ஒன்றாக இணைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பாக உருவாக்கி அதன் தலைவராக இரா. சம்பந்தனைத் தெரிவு செய்தனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாது. - என்றார்.

(ஐ-7)

## மரண அறிவித்தல்

### வனஜா ராமநாதன்



மணியர்பதி கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வனஜாராமநாதன் 06.05.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ராமநாதன் - நாகசுந்தரி தம்பதிகளின் புதல்வியும், முரளிதரன், கிரிதரன் ஆகியோரின் சகோதரியும், மலர்விழி (விஜி), பவானி ஆகியோரின் மைத்துனியும், டிலோஜன், லதுஷன், ஹம்சவர்த்தனி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**128, லோட்டஸ் றோட், வண். வடமேற்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

021 222 7293

(8532)(11)

## மரண அறிவித்தல்கள்

மண்ணில் 07 . 08 . 1928



விண்ணில் 07 . 05 . 2017

### திருமதி பிலோமினா யோசப்ஜேம்ஸ்

யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த திருமதி பிலோமினா ஜோசப் ஜேம்ஸ் 07.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (09.05.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்திலிருந்து புனித யாகப்பர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பி.ப 3.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப் படும்.

இநந்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**111/9, மவுண்கார்மேல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

077 481 3585



### திருமதி கமலாதேவி கனகசபை

வாளித்தொழிற்சாலை ஒழுங்கை, வீமன்காமம் வடக்கு மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி கனகசபை நேற்று (08.05.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் நவரத்தினம் கனகசபையின் அன்பு மனை வியும் காலஞ்சென்ற சுமந்திரன் மற்றும் லோகேந்திரன் (இ.போ.ச.காரைநகர்), கல்பனா, மோகனா ஆகியோரின் அன்புத் தாயாரும் இராமச்சந்திரன் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாவிட்டபுரம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வாளித்தொழிற்சாலை ஒழுங்கை, வீமன்காமம் வடக்கு, மாவிட்டபுரம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(AJA CS 3818)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ விசுவேசப்பிள்ளையார் கோயில்

மேற்படி ஆலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் **எதிர்வரும் 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு** ஆலய முன் மண்டபத்தில் நடைபெறும். எனவே அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

செயலாளர்
பரிபாலனசபை.

## தென்மராட்சி ஊர்கள் பற்றிய கட்டுரைகள், படங்கள், பெரியார்கள் அவசரமாக தேவை

தென்மராட்சியில் உள்ள ஊர்கள் பற்றிய பழைய வரலாற்றுக்கட்டுரைகள், பழைய வரலாற்றுப்படங்கள், தென் அங்கு வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கின்ற பிரமுகருடைய படங்கள் ஆவணக்குறிப்புகள் தென்மராட்சி ஆலயங்கள் பற்றிய வரலாற்றுக்குறிப்புக்கள் படங்கள் தென்மராட்சியில் உள்ள பாடசாலைகள் பற்றிய வரலாற்றுக் கட்டுரைகள் உடனடியாக அனுப்பி வையுங்கள்.

தென்மராட்சி பற்றிய மிக விரைவில் வெளிவரவுள்ள தென் மராட்சி பற்றிய வரலாற்று பதிவில் நீங்களும் இடம் பெறுங்கள்.

தொடர்பு:
Email - info@tamilsguide.com 077 277 2431

## மரண அறிவித்தல்

### திருமதி தவமலர் விஜயரட்ணம்



சங்கானை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமலர் விஜயரட்ணம் (08.05.2017) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை விஜயரட்ணம் (முன்னாள் சீப்சைட் உரிமையாளர் தலவாக்கலை) அவரிகளின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஜெயலட்சுமி தம்பதியரின் அன்புத்தவப்புதல்வியும் கந்தையா சண்முகதாசன் அவர்களின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்
தேவாலயவீதி, சங்கானை. 021 225 0766

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 10.04.2017 திங்கட்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### திரு.நல்லதம்பி ஆறுமுகம்
( MANTEX,யோகா ஆரணியம் )

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று 09.05.2017 செவ்வாய்க்கிழமை முகத்துவாரத்திலும், 11.05.2017 வியாழக் கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வு எமது இல்லத்திலும் நடைபெறும்.

**அதனைத்தொடர்ந்து அதே தினம் முற்பகல் 10.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை பம்பலப்பிட்டி, லோறன்ஸ் வீதி, இல. 75 இல் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில்**

நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**22,பெல்போனா அவென்யு,
பம்பலப்பிட்டி.
தொ.பேசி : 0112506497,0721040369**

**குடும்பத்தினர்**

# ஹாட்லிக் கல்லூரித் தினமும் ஒன்றுகூடலும் செப்ரெம்பரில்

யாழ்ப்பாணம், மே 8

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் தினமும் ஒன்று கூடலும் எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

செம்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி பழைய,சக மாணவர்கள் பங்குபற்றும் மட்டைப்பந்து, கால்பந்து, கூடைப்பந்து, பூப்பந்து,கிளித்தட்டு போன்ற விளையாட்டுக்களை உள்ளடக்கியதாகவும்,

5ஆம் திகதி நாதஸ்வரக் கச்சேரி, நாட்டுக்கூத்து, பட்டிமன்றம், பேச்சு, பாடல்கள், பரிசளிப்பு வைபவம், ஆசிரியர் கௌரவிப்பு, மாணவர்கள் பாராட்டுதல் போன்றவைகளை உள்ளடக்கியதாகவும்,

6ஆம் திகதி ஊர்வலம், கருத்தமர்வு போன்றவைகளை உள்ளடக்கியதாகவும் நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. (த-10)

## 3 மாடி கட்டடம் விற்பனைக்கு

மனோகரா சந்திக்கு அருகில் ஒவ்வொரு தளமும் 2000 சதுர அடி பரப்பளவுடைய கீழ்த்தளத்துடன் 3 மாடி கடை கட்டடமும் 6000 சதுர அடி உடைய Stores வசதியுடன் 5 பரப்பு விஸ்தீரணம் உடைய கடை கட்டடமும் காணியும் விற்பனைக்குண்டு. **077 234 9933**

## கண்ணீர் அஞ்சலி

வலி . கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரான **தியாகராசா தாமரைச் செல்வன்** அவர்களின் பாசமிகு தந்தையார்.



### சந்தன் தியாகராசா

அவர்கள் கடந்த (08.05.2017) திங்கட்கிழமை இறைபதமடைந்தமையால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

பணிப்பாளர்களும் பணியாளர்களும் வலி . கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 07.07.1928 இறப்பு 05.05.2017

### கலாபூசணம் டானியல் பெலிக்கான்
**(பிரபல நாட்டுக்கூத்துக் கலைஞரும் அண்ணாவியாரும்)**

பிரபல நாட்டுக்கூத்துக் கலைஞரும் அண்ணாவியாருமான கலாபூஷணம் டானியல் பெலிக்கான் 05.05.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இன்று (09.05.2017) செவ்வாய்க் கிழமை பரலோக மாதா கோயிலில் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
டானியல் சௌந்தரன் (மகன்) 077 610 3784



### சந்தன் தியாகராசா

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சந்தன் தியாகராசா நேற்று (08.05.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தன் - குஞ்சரம் தம்பதியரின் அன்பு மகனும் ரோகினியின் பாசமிகு கணவரும் தாமரைச் செல்வன் ( தலைவர் வலி.கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ), பன்னீர்ச்செல்வம் (பனை அபிவிருத்திச் சபை), செந்தமிழ்ச்செல்வன் (வர்த்தகர்), இளம்செல்வம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி வடக்கு வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அச்சுவேலி வடக்கு, குடும்பத்தினர்.
அச்சுவேலி. 077 0305 408

## S.R. இரத்தினசிங்கம்
**(சுன்னாகம் பிரபல வர்த்தகர்)**
**அவர்களின்**
**20ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு 11 . 04 . 1928



இறப்பு 21 . 04 . 1997

எங்கள் எல்லோரையும் விட்டுப் பிரிந்து இருபது ஆண்டுகள் சென்றாலும் எங்கள் எல்லோரின் மனதிலும் என்றும் ஆணிவேர் போல வாழ்ந்து வரும் எங்கள் அன்புத் தெய்வத்தை என்றும் நினைத்து அவரது ஆண்டுத் திதியை அவரது மல்லாகம் பங்களா ஒழுங்கையிலுள்ள இல்லத்தில் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி (பூம்பதம்), பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

**இரத்தினசிங்கம் யோகநாதன் (நோர்வே)
தேவானந்தன் வாசுகி.**

118, 2/2 W-A Silva மாவத்தை, கொழும்பு 6
பங்களா ஒழுங்கை, மல்லாகம்.
077 960 4095, 011 250 7686, 021 791 2421

## மரண அறிவித்தல்



### முருகர் சின்னத்துரை

கீரிமலை வீதி, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் சின்னத்துரை 08.05.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகர் (கன்னர்)-இலட்சுமி தம்பதியரின் பாசமிகு புதல்வரும் காலஞ்சென்றவர்களான கந்தையா வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் பத்மாவதியின் ஆருயிர்க் கணவரும் செல்வராணி, கந்தசாமி(இலங்கை வங்கி, வடமாகாணக் காரியாலயம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் ஜெயராணி, புஸ்பராணி, விஜயராணி(மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி), ஜெயராசா(நியூ கமல் செரமிக், யாழ்ப்பாணம்), புஸ்பராசா (தெல்லிப்பழை, ப.நோ. கூ, சங்கம்), காலஞ்சென்ற விஜயராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானகுரு, இரஞ்சினிதேவி, காலஞ்சென்ற ரவிக்காந்தன், ஜெயபாலசிங்கம், மகேந்திரராசா, விமலாதேவி, ஜேந்தினி ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், செல்லக்குட்டி, அப்புத்துரை, இராசாத்தி மற்றும் அப்பையா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரும் சுதாசினி, சுதர்சன், சுரேந்தினி, கிரிசாந்தி (வலி. வடக்கு, பிரதேச சபை)-றமணன் (பிரான்ஸ்), ரவிந்தன், கோபிகா (ஜேர்மனி) -மோகன் (ஜேர்மனி), தயாபரன் (பிரான்ஸ்), தர்சினி (பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மன்னார்), பிரதீபன், கஜதீபன், தேனுசா, நிதர்சன், மதுசா, சகானா, தரணிதரன், நித்திகா, தனுசியா ஆகியோரின்அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை பூரணை பெருவிழா

யாழ்ப்பாணம், மே 9

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் திருக்கோயிலில் சித்திரைப் பூரணைப் பெருவிழா நாளை புதன்கிழமை அதிகாலை 5.45 மணிக்கு அபிசேக ஆராதனைகள் இடம்பெற்று சித்திரைப் பூரணைத் தீர்த்தோற்சவமும் தர்ப்பணாதி அனுட்டானங்களும் நடைபெறவுள்ளது.

(த)


## கணினியாள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் தனியார் உயர் கல்வி நிறுவனத்திற்கு இருமொழி கணினி அறிவுடைய அனுபவம் உள்ள பெண் கணினியாளர் ஒருவர் உடன் தேவை.

CAPS
52, பலாலி வீதி, திருநெல்வேலி.
(சம்பத் வங்கி அருகில்)

077 386 7458

## கணக்காளர் தேவை (ஆண்)

எமது நிறுவனத்தில் கணக்குகள், சிட்டைகள் (Bill) எழுதுவதற்கு ஆங்கில அறிவுள்ள ஊழியர் தேவை. முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

- சுயவிவரக் கோவையுடனும் கிராமசேவகரின் சிபாரிசுக் கடிதத்துடன் நேரில் வரவும்.
- காலம் – திங்கள் முதல் சனி வரை
- பிற்பகல் 2.00 மணி முதல் 6.00 மணிவரை

சிவா நறுமணப்பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்தி அருகில்)


முத்துமாரிஅம்மன் துணை



## பொன்விழா காணும் வல்வையின் இந்திரவிழா

வரலாற்றுச் சிறப்புமிக்க வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு வல்வை மக்களால் நாளைய தினம் 10.05.2017 புதன்கிழமை மிகச் சிறப்பாக நடத்தப்படவுள்ளது.

## இந்திரவிழா

- 3 கிலோ மீற்றர் தூரத்திற்கு வீதிச்சோடனைகள்
- வானுயர் தெய்வ உருவங்கள் (போட்டிக்கோ)
- அதி உச்ச மின் அலங்காரங்களுடன் மின்னொளிகள்
- சிறிய பெரிய இராட்சத புகைகூடுகள் வான்நோக்கி பறக்கவிடுதல்
- சம நேரத்தில் 10 மேடைகளில் கலை நிகழ்வுகள்
- இன்னும் பல கண்குளிர்காட்சிகள் / கலை அம்சங்கள்

என்பன நடைபெறவுள்ளன என்புதை மிகவும் மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

முக்கிய குறிப்பு - 3 பிரதான வீதிகளிலும் மிதிவண்டி உட்பட வாகன பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வல்வைமக்கள் சார்பில்
வல்வை நெடியகாடு மோர்மட வரவேற்புக்குழுவினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி துரைரத்தினம்



கிளானை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி துரைரத்தினம் 07.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற க. துரைரத்தினத்தின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் கதிர்காமலிங்கம் (ஜேர்மனி), ரவீந்திரன் (ஜேர்மனி), முருகானந்தன் (கனடா), நந்தினி, இளமுருகன் (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், பிராந்திய உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான டாக்டர் மாணிக்கம், மணிமேகலை, சிவதாசன் மற்றும்திருநடராஜா(கனடா), வயிரவப்பிள்ளை, நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பத்மநாதன் (ஆசிரியர், கொல்லங்கலட்டி சைவவித்தியாலயம்), பவானிதிஷி (ஜேர்மனி), மைதினி (ஜேர்மனி), ஸ்ரீகாயத்திரி (கனடா), நளாயினி (ஆசிரியர், புத்தூர் சோமஸ்கந்தா பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் ஆரபி (ஜேர்மனி), அருண், ஆரூரன் (ஜேர்மனி), அபர்ணா, கரன் (கனடா), தர்சிகா (இராஜரட்டை பல்கலைக்கழகம்), ஸ்ரீலவன், தருணிகா (வேம்படிமகளிர் கல்லூரி), மோகன்ராம், மோகனாங்கி (யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை), நாகநர்த்தனன் (யாழ். இந்துக்கல்லூரி), தர்ஷனா (வேம்படி மகளிர் கல்லூரி), நாக கீர்த்தனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வைகாசி மாதம் 10ஆம் திகதி புதன்கிழமை அவரின் அன்பகம் இல்லத்தில் (கிளானை கொல்லங்கலட்டி) இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கிளானை
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்
0774422272

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

## நன்றி நவில்கின்றோம்



### அமரர் கனகரத்தினம் சிவம் (திருநெல்வேலி -பாலன்)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த எமது தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு எமதில்லம் நாடி வந்த எம் துயரில் பங்கு கொண்டு அனைத்து உதவிகளையும் நல்கிய அன்பு நெஞ்சங்களிற்கும்.

உறவுகளில்லா ஊரில் உயிரிழந்தவேளை எமக்கு ஆறுதல் அளித்து அனைத்துதவிகளையும் தாமே முன்னின்று செய்துதவிய நுவரேலியா வாழ் அன்புள்ளங்களிற்கும் மரணச் செய்தியறிந்ததும் தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிகள் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும். இறுதிக்கிரியை அன்று இரங்கலுரை நிகழ்த்திய அகில இலங்கை விஸ்வகர்ம குல சங்கத்தினருக்கும் .எமது மனம் நெகிழ்ந்த நன்றிகள்.

"கண் இமைக்குமுன்னே "
கவர்ந்து சென்ற காலனே- பப்பாவை
எங்கு கொண்டு சென்றாயோ -அன்புருவை
எப்பிறப்பில் காண்போமோ !

கடந்த (09.04.2017) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (09.05.2017) செவ்வாய்க்கிழமை அதிகாலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று அஸ்தி கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து 11.05.2017 வியாழக்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.


இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

போக்காலை வீதி,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.
021 205 5890

## மரணஅறிவித்தல்

தோற்றம்
30 . 05 . 1933



மறைவு
07 . 05 . 2017

### சபாபதிப்பிள்ளை கோபாலசாமி

(ஓய்வு பெற்ற புகையிரத தலைமை பாதுகாவலர்)

நீர்கொழும்பைப் பிறப்பிடமாகவும் அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை கோபாலசாமி 07.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - அஞ்சனாதேவி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமாதகௌரி(லண்டன்), இளங்கோ(நெதர்லாந்து), கலைச்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதர்சன் (லண்டன்), ரதி(நெதர்லாந்து), தவக்குமாரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அர்ஜீன், ரம்மியா, பிரதாப், சிந்துயா, யமுனா, பிருந்தா, சச்சின், ஆனந்தராம், ஹரிணி, சங்கீதா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, அருணாசலம், சோமசுந்தரம், முருகேசு மற்றும் புஸ்பகாந்தம், சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பரிபூரணம், நாகம்மா, பொன்னம்பலம் மற்றும் நேசமணி, இராஜேஸ்வரி, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2017) செவ்வாய்க்கிழமை மு.ப 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 226 4425, 072 408 2812

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இலங்கையின் நிதி நிலைமைகள் உறுதியற்றுத் தளம்பல் அடைந்துள்ளது

## உலக வங்கியின் உப தலைவர் டான் வில்சர் வலியுறுத்தல்

இலங்கையின் நிதி நிலைமைகள் உறுதியற்ற தளம்பல் தன்மையை அடைந்துள்ளதான கருத்து உலக வங்கியின் உப தலைவர் டான் வில்சரால் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

இதன்படி இலங்கை அரசு வருமான உள்ளீடுகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ பயணத்தை மேற்கொண்டு நாட்டுக்கு வருகைதந்த சந்தர்ப்பத்திலேயே இந்த விடயங்கள் அவரால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள டான் வில்சர், "இலங்கையின் நிதி நிலைமை மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளது. நிகர தேசிய வருமானத்தின் வீதத் திறகமைவாக 10 வீத வரி வருமானமே உள்ளது. இந்தச் சந்தர்ப்பத்திலே அரசு வரி வருமானத்தை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.


வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் முதலீடுகளை மேற்கொள்வதுடன் தொழில்புரிபவர்களின் வருமான அதிகரிப்பை முதலீடுகளினூடாக மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்றுநாட்டின் உட்கட்டமைப்புவசதிகளை அபிவிருத்திசெய்துகொண்டுவெளிநாட்டுமுதலீடுகளுக்கான சூழலை உருவாக்குவதன் மூலமும் இந்த இலக்குகளை சாத்தியப்படுத்திக்கொள்ள முடியும்" - என்றார்.



உலக வங்கியின் உப தலைவர் டான் வில்சர்

"நாட்டினுள் உருவாக்கப்படுவதான நிகர தேசிய வருமானத்தின் வீதத்திற்கமைவாக 10 வீத வரி வருமானமே தற்போது பதிவாகியுள்ளது."




# வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இடர் உதவி

## 2 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை அரசுக்கு வழங்க உலக உணவுத் திட்டம் நடவடிக்கை

வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணஉதவிகளைவழங்கஉலகஉணவுதிட்டம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென 2 மில்லியன் அமெரிக்க டொலர் தொகை மதிப்பீடுடைய நிதி மூலத்தை அரசுக்கு வழங்க உலக உணவு திட்டம் இணக்கம் தெரிவித்துள்ளது.

வறட்சி காரணமாக மொனராகலை, குருணாகல், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களைச்சேர்ந்த 6250 குடும்பங்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளதான கருத்து கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.




தவிர, இந்த நிதி மூலமானது குறித்த பிரதேசங்களில் வசிக்கும் வறுமை மற்றும் வறட்சியினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்குஒரு மாதத்திற்கு 10 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் 04 மாதகாலப்பகுதிக்குவழங்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பண வீக்கம் சராசரியிலிருந்து அதிகரித்துள்ளது

2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தின் பணவீக்கமானது 5 சதவிகிதமாகப் பதிவாகியுள்ளது.

முன்னதாக செப்ரெம்பர் மாதத்தில் 4.7 சதவிகிதமாக பதிவுப் செய்யப்பட்டிருந்த பணவீக்கமானது




0.3 சதவிகிதத்தினால் அதிகரித்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆண்டு அடிப்படையிலான சராசரியானது தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்படுத்திய மாற்றம் என்பது கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 3.8 சதவிகிதத்திலிருந்து ஒக்ரோபர் மாதத்தில் 4 சதவிகிதத்திற்கு அதிகரித்துள்ளது.

அந்த வகையிலே மாதாந்த மாற்றங்களைக் கருத்திற்கொள்ளும் போது, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மேற்படி மாதங்களில் 113.5 சுட்டெண் புள்ளியிலிருந்து 114.7 புள்ளியாக அதிகரித்திருந்த தன்மைகள் அறிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இறக்குமதியாகு பேரீச்சம் பழத்துக்கான மேலதிக வரி அறவீடுகள் நிறுத்தம்

## நிதி அமைச்சின் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் தகவல்

புனித ரமழான் காலத்தில் இறக்குமதி செய்யப்படுவதான பேரீச்சம் பழத்துக்கு மேலதிகமானபுதியவரிஅறவீடுகள்வையும்மேற்கொள்ளப்படாதெனநிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே பேரீச்சம் பழத்துக்கு விதிக்கப்பட்டிருந்தான வரி விதிப்பன வுகள் 70ரூபாவால்குறைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக புனித ரமழான் காலத்தில் வெளிநாடுகளில் இருந்து அன்பளிப்பாக வழங்கப்படும் பேரீச்சம் பழத்துக்கு செலுத்தவேண்டிய வரிச் செலுத்துகைகளை அரசு கொடுப்பனவு செய்யவுள்ளதான கருத்துக்களும் நிதி அமைச்சினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தவிர, 2015 ஆம் ஆண்டு



வரையானகாலப்பகுதியில் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பேரீச்சம் பழத்துக்கு மொத்தமாக130 ரூபாவரிஅறவிடப்பட்டதாக நிதி அமைச்சின் வியாபார மற்றும் முதலீட்டு கொள்கைத்திணைக்களம்விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2015ஆம்ஆண்டுநவம்பர் 20 ஆம் திகதி அத்தியாவசியப் பொருள்களுக்காக மேற்கொள்ளப்பட்டதான வரித்திருத்தத்துக்கு அமைவாகஒருகிலோகிராம்பேரீச்சம்பழத்துக்கு60ரூபாவிசேட வர்த்தக வரி அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை ஒரு கிலோகிராம்பேரீச்சம்பழத்திற்கு60 ரூபா நிர்ணயத்துடனான புதிய வரி அறவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என்ற தகவலை நிதி அமைச்சு கருத்துரைத்துள்ளமை குறித்து நோக்கத்தக்கது.


## பங்குச் சந்தை தகவல்கள்

CSE
COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை – யாழ் கிளை
147-2/3, K.K.S Road Jaffna - 212221455

8/5/2017
www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 26.89 | 6,667.46 | 6,640.57 |
| S&P SL20 | 25.65 | 3,827.34 | 3,801.69 |
| வியாபாரப்புரள்வு | | 637,767,230 | 767,472,640 |
| உள்நாடு:- கொள்வனவு | | 358,573,216 | 528,510,496 |
| விற்பனை | | 496,426,112 | 610,943,230 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 279,194,016 | 238,962,144 |
| விற்பனை | | 141,341,104 | 156,529,440 |



| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| கேமாஸ் கோல்டிங்ஸ் | HHL.N | 116.00 | 1,965,386 | 227985525.00 |
| டி எவ் சி சி வங்கி | DFCC.N | 124.00 | 1,002,720 | 120338013.00 |
| எல் பி பைனான்ஸ் | LFIN.N | 132.00 | 604,927 | 79708278.80 |
| காகில்ஸ் சிலோன் | CARG.N | 209.00 | 336,593 | 70684297.00 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 163.50 | 214,106 | 34979836.50 |
| மெல்ஸ்ரா க்ரோப் | MELS.N | 68.50 | 299,292 | 20633629.20 |
| அக்சஸ் எஞ்யினியறிங் | AEL.N | 26.50 | 635,284 | 16856740.80 |
| இலங்கை கொமரஷல் வங்கி | COMB.N | 147.00 | 113,181 | 16563699.30 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 240.00 | 69,676 | 16552579.10 |
| சம்பத் வங்கி | SAMP.N | 275.50 | 57,401 | 15784701.30 |

### அறிவித்தல்கள்

பங்குலாபம்
சனச டேவலப்மென் வங்கி - பங்குலாபம் Rs. 2.50
[illegible] சிமென் - ஒதுக்கங்களின் முதலாக்கம்
[illegible] பைனான்ஸ் - உரித்து வழங்கல்
[illegible] சிலோன் - உரித்து வழங்கல்

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 230 |
| விலை உழைப்பு | 12.6 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 2.6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆபத்தான...

லையும் விசனமும் தெரிவித்துள்ளார்.

அவரது ஊடகப் பிரிவால் அனுப்பி வைக்கப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்கவிற்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை நீதிமன்றத்தின் ஊடாகக்குறைப்பதற்கு, மகிந்த ராஜபக்ச நடவடிக்கை எடுத்ததாக அரசியல்வாதிகள் சிலர் கூறியமைக்கு ஊடகங்கள் முக்கியத்துவம் வழங்கியுள்ளன. இதனை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்.

மகிந்த ராஜபக்சவோ, முன்னாள் அரச அதிபர் செயலகமோ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரோ நீதிமன்றத்தில் இது தொடர்பில் மனுத்தாக்கல் செய்யவில்லை. அரச சார்பற்ற நிறுவனமே அதனை மேற்கொண்டிருந்தது.

முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து, அப்போதைய பாதுகாப்பு செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்ச அவரைச் சந்தித்திருந்தார். அதன் பின்னர் அதிகாரிகளுடன் ஆலோசனைகளை மேற்கொண்டார். இதனையடுத்த முன்னாள் அரச தலைவர் சந்திரிகாவுக்குத் தேவையான பாதுகாப்பு வழங்கப்பட்டது.

நீதிமன்றம் உத்தரவிட்ட போதிலும் முன்னாள் அரச தலைவரின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் சில வங்குரோத்து அரசியல்வாதிகள் தங்கள் பழிவாங்கல் நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காக அறிக்கைகளை விடுத்து வருகின்றனர்.

இலங்கையின் தற்போதைய அரசின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கான பல முயற்சிகள் இடம்பெற்றுள்ளன. இந்த வருட ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரைக் கொல்வதற்கான சதி அம்பலமானது.

அரசு தடுப்பில் உள்ள மிகவும் ஆபத்தான பயங்கரவாதிகளை தொடர்ந்தும் விடுதலை செய்து வருகின்றது. மகிந்தவின் காலத்தில் சுமார் 10 ஆயிரம் விடுதலைப் புலிகளுக்கு மறு வாழ்வு வழங்கப்பட்டது. மறு வாழ்வு வழங்க முடியாதவர்கள் என்று கருதியவர்களையே தொடர்ந்தும் தடுப்பில் வைத்திருந்தது. அவர்களை அரசு தற்போது விடுதலை செய்து வருகின்றது. இவ்வாறான பின்னணியிலேயே அரசு, மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பை பெருமளவில் குறைப்பதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளது என்று அந்த அறிக்கையில் உள்ளது. (உ-5)

## வடக்கு...

அவர் தனது பிரேரணையில் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் நீண்டகால வரலாற்றைக் கொண்டுள்ள வடக்கு மாகாணத்தில் தொல்பொருள் மூலாதாரங்கள் பல கண்டெடுக்கப்பட்டு இருக்கின்றபோதிலும் அவற்றை முறையாக பாதுகாக்கின்ற அருங்காட்சியம் வடக்கில் காணப்படாமை பெரும் குறைபாடாக உள்ளது. ஏனைய மாகாண சபைகள் தத்தமது மாகாணத்துக்கான அருங்காட்சியகங்களைக் கொண்டு நிர்வகிக்கின்றபோதிலும் எமது சமூகம் சார்ந்து காணப்படுகின்ற வடக்கு மாகாணத்தில் அருங்காட்சியம் இல்லாமை பெரும் பின்னடைவாக உள்ளது.

எனவே வடக்கு மாகாணத்துக்கான அருங்காட்சியகம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துவதுடன் வடக்கு மாகாணத்தில் இடம்பெறுகின்ற தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளில் வடக்கு மாகாண சபை தனது அவதானங்களையும் பங்களிப்புக்களையும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நடவடிக்கைகள் வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறுவதற்கு வழிவகை செய்யப்படவேண்டும் என்றுள்ளது. (த-3)

## இனப்படுகொலை...

கருத்து தெரிவிக்கையிலேயே சிவில் அமைப்புகள் மேற்கண்டவாறு கோரியுள்ளன.

அவை மேலும் தெரிவித்ததாவது:

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூரும் மே மாதம் 18ஆம் திகதியோ அல்லது அதன் பெயரிலோ எந்தவிதமான களியாட்ட நிகழ்வுகளையும் நடத்தவேண்டாம். எமது இனம் அழிக்கப்பட்ட அன்றைய நாளை நாம் கொண்டாட்டமாகக் கருதிவிட முடியாது. உணர்வுபூர்வமாக எமது உறவுகளுக்கு அஞ்சலி செய்து பூசிக்கும் நன்னாளில் எமக்கு நடந்த வன்கொடுமையை மறந்து கேளிக்கை நிகழ்வுகளில் எம்மை ஈடுபடுத்திக் கொள்வது எம் இனத்துக்குச் செய்யும் துரோகமாகவே கருதப்படும்.

காணாமற்போனவர்களுக்குப் பதில் கிடைக்கவேண்டும் என்பதற்காகவும், பொதுமக்களின் காணியில் இருந்து இராணுவம் வெளியேறவேண்டும் எனவும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவரும் இந்தக் காலகட்டத்தில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை அடியொற்றிக் கேளிக்கையில் யாரும் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறின. (த-7)

## மாணவர்களின்...

வித்த கல்வி அமைச்சர் அகில விராஜ், பாடசாலைகளுக்குப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளும் நடைமுறை தொடர்பில் குற்றச்சாட்டுக்களையும் அநீதிகள் தொடர்பிலான முறைப்பாடுகளையும் அதிபர், பெற்றோர் மட்டுமல்லாது பழைய மாணவர் சங்கங்களும் முன்வைக்கின் றன.

இதற்குச் சில மாற்றங்களை உட்சேர்க்க வேண்டியுள்ளது. புத்திஜீவிகள், அதிபர்கள் உள்ளிட்ட பலர் அங்கம் வகிக்கும் குழு இதற்காக அமைக்கப்பட்டும் அதன் பரிந்துரைகள் இன்னும் கிடைக்கவில்லை. இந்தக் குழுவின் பரிந்துரைகள் குறித்து கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றார். (த-5)

## ஊழல்...

ஊழல் விசாரணை ஆணைக்குழு, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு (எவ்.சி.ஐ.டி.), ஊழல் மோசடி தடுப்புக் குழுவின் செயலாளர் அலுவலம் ஆகியவற்றின் அதிகாரிகள் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைமை அமைச்சர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஊழல், மோசடி தடுப்புக் குழுவின் செயலாளர் அலுவலகம் 2015 இல் அமைக்கப்பட்டது. ஊழல், மோசடிகள் தொடர்பில் மக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை ஆராய்ந்து அவற்றை இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அல்லது எப்.சி.ஐ.டி. ஆகியவற்றிடம் ஒப்படைக்கும் நோக்கிலேயே இது அமைக்கப்பட்டது. (உ-5)

## ஆள்கடத்தல்...

மாதங்களில் மட்டும் ஆறு இலங்கையர்கள் இந்திய கடவுச் சீட்டின் மூலம் மும்பை சத்திரபதி சிவாஜி பன்னாட்டு வானூர்தி நிலையத்திலிருந்து லண்டனுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்ற தகவல் தேவக்குமரனிடம் நடத்திய விசாரணையில் இருந்து தெரியவந்திருக்கிறது என்றும் அதிகாரிகள் கூறினர்.

இந்தியக் கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தி நான்கு இலங்கையர்களை லண்டனுக்கு அனுப்ப முயற்சித்த மற்றுமொரு இலங்கையரான மகாமுனி யோகராஜ் மற்றும் இந்தியரான ராஜன் ஆகியோர் தற்போது தேடப்பட்டு வருகின்றனர். (உ-5)

## மூன்று...

களைச் சேதப்படுத்தியுள்ளது. இதனால் அந்தப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பீதியுடனேயே இரவுப்பொழுதைக் கழிக்கின்றனர்.

வவுனியா ஓமந்தைப் பகுதியில் உள்ள மாணிக்கர்வளவு, காயன்குளம் ஆகிய குடியிருப்புகளுக்குள் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் புகுந்த தனி யானை, 3 வீடுகளைச் சேதப்படுத்தியது. அத்தோடு பயன்தரு மரங்களையும் முறித்தெறிந்தது.

ஓமந்தையில், கண்டி வீதியைக் கடந்து மாணிக்கர்வளவு மக்கள் குடியிருப்புக்குள் முதலில் புகுந்த அந்த யானை [illegible] இரண்டு வீடுகளுக்குச் சேதம் விளைவித்தது. பயன்தரு மரங்களான தென்னை, வாழை போன்றவற்றையும் சேதப்படுத்தியது. பின்னர் அங்கிருந்து காயன்குளம் பகுதிக்குச் சென்றது. அங்கு யாரும் அற்ற வீட்டின் ஒரு பகுதியை உடைத்துச் சேதப்படுத்தியது. அடுத்த வீட்டில் நின்ற வாழை, தென்னைமரங்களையும் பிடுங்கி அழித்தது.

அங்கிருந்து காட்டுக்குத் திரும்பியது என பிரதேச மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பாக ஓமந்தை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் அங்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இதே போன்று கடந்த வெள்ளிக் கிழமையும், சனிக்கிழமையும் கூடத் தனி யானை ஒன்று அம்மிவைத்தான், பறநட்டாங்கல் ஆகிய இடங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களைத் துரத்தியடித்தது. 4 வீடுகளைச் சேதப்படுத்தியது.

தொடர்ந்து மூன்று நாள்களாக அட்டகாசம் செய்யும் யானை ஒரே யானையா என்ற அச்சத்தில் மக்கள் வாழ்கின்றனர்.

கடந்த மாதம் வவுனியா பாலமோட்டை, கொம்பு வைத்த குளம் பகுதியில் குழியில் விழுந்த யானைகள் மூன்றை மீட்டபோது அவற்றில் ஒன்று சுட்டுக்கொல்லப்பட்டது. மீட்க வந்த அதிகாரியை தாக்க முற்பட்டதாகத் தெரிவித்தே அது சுடப்பட்டது.

அவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்ட யானையின் இணை யானைதான் தற்போது ஊர்களுக்குள் புகுந்து அட்டகாசம் செய்கிறது என்று மக்கள் பேசிக்கொள்கின்றனர். (உ-21)

## மக்களை...

ளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கூட்டு அரசுக்கு அக்கறையில்லை. முன்னாள் அரச தலைவரின் பாதுகாப்பைக் குறைப்பதன் மூலம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது. மக்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கி ஆட்சி செய்யப் பார்க்கின்றனர்.

நாட்டில் உள்ள அனைத்துத் தொழில்துறையினரும் இன்று வீதியில் உள்ளனர். இராணுவத்தினர், பிக்குகள், பல்கலைக்கழக மாணவர்கள் என்று அனைவர் மீதும் தாக்குதல் நடத்துகின்றனர். நாட்டின் சட்டம் ஒழுங்கு தொடர்பில் அமைச்சர்களின் பேச்சையும் செயற்பாட்டையும் பார்த்தால் மக்களுக்கு நன்கு தெரியும்.

மக்களின் ஜனநாயக உரிமையான தேர்தலை நடத்த இந்த அரசு பயப்படுகின்றது. இவர்கள் 2020 வரை ஒருபோதும் தேர்தலை நடத்தப் போவதில்லை. இந்தப் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முழுமையான ஆதரவுடன் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு விரைவில் அமையும்.

அதற்கு மக்கள் முழுமையாக அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர். அதன் காரணமாக அரசு தேர்தலை நடத்தப் பயப்படுகின்றது. விரைவில் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு அமையும். அதனை அவர்களால் தடுக்க முடியாது என்றார்.

(உ-5)

## மகிந்தவை...

வடிக்கையும் அல்ல. இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரி வித்துள்ளார்.

கம்பகாவில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புலனாய்வுப் பிரிவினரின் அறிவுரைக்கு அமைவாகவே முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புத் தொடர்பில் முடிவு எடுக்கப்பட்டது. இது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை அல்ல.

மேலும், புதிய அரசமைப்பின் ஊடாக நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. புதிய அரசமைப்பின் ஊடாகப் பௌத்த மதத்துக்கு முக்கியத்துவம் வழங்குவது அரசின் நோக்கம் என்றார். (த-5)

## இந்தியாவின்...

கிருலப்பனையில் அமைந்துள்ள அந்த அமைப்பின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

அரசு உலக வெசாக் தினத்தை இலங்கையில் நடத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது. அது நாம் மகிழ்ச்சியடையக்கூடிய விடயமல்ல. எதிர்காலத்தில் இதனால் பெரும் பிரச்சினைகளைச் சந்திப்பதற்கான முன் ஏற்பாடாகும்.

உலக வெசாக் தினத்தின் முதன்மை விருந்தினராக இந்தியத் தலைமை விருந்தினராக இந்தியத் தலைமை அமைச்சர் மோடியை அழைத்து வருகின்றனர். அவரின் வருகையால் இலங்கையில் உள்ள தேசியவாதிகள் கடும் அதிருப்தியில் உள்ளனர். அச்சமும் அடைந்துள்ளனர்.

நாட்டில் ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அரச தலைவர் மீது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் இவை அனைத்தும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும். இந்தியாவின் குடியேற்றமாக இலங்கையை மாற்றும் செயற்பாட்டை முன்னெடுக்க நாங்கள் ஒரு போதும் அனுமதியளிக்க மாட்டோம் என்றார். (உ

## திருத்தங்களை...

எதிர்வரும் 23ஆம் திகதி முன்வைப்பார்கள் "தரப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையை ஆராய்ந்து வருகின்றோம். ஏற்கனவே இது போன்ற இடைக்கால அறிக்கைகள் தரப்பட்ட போது, அதில் கூறப்பட்டிருந்த பல விடயங்களை நாங்கள் நிராகரித்தோம். அவை தற்போது தரப்பட்டுள்ள அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டிருக்குமானால் இந்த அறிக்கையையும் நிராகரிப்போம். நாம் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் உள்வாங்கப்படாவிட்டால், வழி நடத்தல் குழுவிலிருந்து வெளியேற நேரிடும்"" என்று பெயர் குறிப்பிட விரும்பாத மகிந்த அணியின் முக்கிய தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை இறுதி செய்வதற்காக, வழிநடத்தல் குழுவின் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதியிலிருந்து 26ஆம் திகதி வரை நான்கு நாள்களில் 5 அமர்வுகளாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

## பயமிருந்தால்...

சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் சால்வையில் தொங்கவிட்டுக் கொன்று விடுவேன் என்ற அச்சத்தில் மகிந்த ராஜபக்ச இருக்கின்றார். அவருக்கு 200, 300 பேரைப் பாதுகாப்புக்காக வழங்கத் தேவையில்லை. அவரது பாதுகாப்புக்கு 100 பேரைக் கூட வழங்கக் கூடாது.

மகிந்த ராஜபக்ச என்னைப் பிடித்துச் சிறையில் அடைத்தார். முன்னாள் இராணுவத் தளபதியான எனக்குப் பாதுகாப்பு வழங்கினாரா? எந்த பாதுகாப்பும் இல்லாமல் பயங்கரவாதிகள் இருக்கும் சிறையில் என்னை அடைத்தனர். இப்படியான வேலைகளைச் செய்தவருக்கு தனது பாதுகாப்புக் குறித்துப் பேசத் தார்மீக உரிமை கிடையாது. மகிந்தவின் பாதுகாப்புக் குறித்து பேசும், சத்தமிடும் அவரது அடிவருடிகள் அந்தக் காலத்தில் எனது பாதுகாப்புப் பற்றிப் பேசவில்லை. மகிந்தவுக்கு யாரிடம் அச்சுறுத்தல் இருக்கின்றது என்பதை அரசும் புலனாய்வுப் பிரிவும்தான் தீர்மானிக்கும். அவர் செய்த தவறுகள் கண்ணாடிக்கு முன்னால் சென்று பார்க்கும்போது தெரிகின்றது போலும். அந்தத் தவறுகள் தம்மை திருப்பித் தாக்குமே என்ற அச்சம் இருக்கலாம். பயங்கரவாதத் தாக்குதலுக்கு இலக்கான முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு 60 பேரின் பாதுகாப்பே வழங்கப்படுகிறது. சிறப்பு அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவினரே சந்திரிகாவுக்கு பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். இதனால், மகிந்த ராஜபக்சவுக்கும் அதே பாதுகாப்புதான் வழங்கப்பட வேண்டும் -என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றி

யாழ்ப்பாணம், மே 9
நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது.
பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து கலைமதி அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 27:25, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கண்கில் வெற்றிபெற்றது ஆவரங்கால் இந்து இளைஞர் அணி.
(ம-23)



## இளைஞர் அணி மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், மே 9
மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழகம் நடத்திய கால்பந்தாடத் தொடரில் திக்கம் இளைஞர் அணி கிண்ணம் வென்றது.
மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் ஆதிக்கம் செலுத்தியது திக்கம் இளைஞர் அணி. 10ஆவது நிமிடத்தில் சாருஜன், 17ஆவது நிமிடத்தில் அரிகரன் ஆகியோர் இரு கோல்களைப் பதிவு செய்ய இடைவேளைக்கு முன்னர் திக்கம் இளைஞர் அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.
இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்திலும் திக்கம் இளைஞர் அணியின் ஆதிக்கம் மேலோங்கியது. 9ஆவது நிமிடத்தில் சாருஜன், 18ஆவது நிமிடத்தில் அகிலதீபன் கோல்களைப் பதிவு செய்ய நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் திக்கம் இளைஞர் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.
ஆட்ட நாயகனாக திக்கம் இளைஞர் அணியின் சாருஜன், தொடராட்ட நாயகனாக டயமன்ஸ் அணியின் பிறேம்குமார் ஆகியோர் தெரிவாகினர்.
(ம-422)

## இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் 8 முன்னணி அணிகள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி மோதவுள்ளது.
(ம-23)

## யங்ஹென்றிஸ் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், மே 9
உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்றது இளவாலை யங்ஹென்றிஸ் அணி.
உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் மல்லாகம் நியூ வொரியர்ஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதியது. 5:1 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றது.
(ம-23)

## யாழ்ப்பாணம் நெருப்பாட்டம்

யாழ்ப்பாணம், மே 9
இளைஞர் சேவை மன்றத்துக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர் அணி சம்பியனானது.
குருநாகலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கொழும்பு இளைஞர் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மாவட்ட அணி மோதியது. 47:12 என்ற புள்ளிகள் யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர் அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.
(ம-422-23)




## டெல்லிக்கு வாய்ப்புண்டு நம்பிக்கையில் சகீர்கான்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில், டெல்லி அணி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறுவதற்கான வாய்ப்பு இன்னும் உள்ளது என்று அந்த அணியின் தலைவர் சகீர்கான் தெரிவித்தார்.
ஐ.பி.எல். தொடரில் சரிவுகளைச் சந்தித்துள்ள அணிகளில் ஒன்றாக டெல்லி உள்ளது. அந்த அணி இதுவரை 11 ஆட்டங்களில் விளையாடி 4 வெற்றிகள், 7 தோல்விகள் என வெறும் 8 புள்ளிகளைப் பெற்று ஏழாவது இடத்தில் உள்ளது. டெல்லி அணி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற வேண்டுமாயின் அடுத்த மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெறும் அதேநேரம் ஏனைய அணிகளின் பெறுபேறுகளையும் எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அடுத்த சுற்றுத் தொடர்பில் சகீர்கான் நம்பிக்கை தெரிவித்தார்.
"டெல்லி அணி பிளே ஓவ் சுற்றுக்கு தகுதிபெற இன்னும் வாய்ப்புகள் இருப்பதாகவே கருதுகிறேன். அதற்கு இனிவரும் ஆட்டங்களில் வென்றாக வேண்டும். மற்ற ஆட்டங்களின் தோல்விகளைப் பற்றி கவலைப்படாமல் சிறப்பாக செயற்பட வேண்டும். நாங்கள் மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட்டு வலிமையாக மீண்டு வருவோம்" என சகீர்கான் மேலும் தெரிவித்தார்.
(ம)

## பயிற்றுனரானார் மரடோனா

ஐக்கிய அரபு இராச்சியத்தின், அல்புஜைரா அணியின் தலைமை பயிற்சியாளராக ஆர்ஜென்ரீனா கால்பந்து அணியின் முன்னாள் தலைவர் மரடோனா நியமிக்கப்பட்டுள்ளார்.
இதுதொடர்பாக, அல் புஜைரா கால்பந்து கழகம், தமது ஜெர்சியுடன் மரடோனா நிற்கும் ஒளிப்படத்தைப் பதிவிட்டு தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.
(ம)



## பார்சிலோனா அணி மிரட்டலான வெற்றி

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வில்லாரியலை அபாரமாக வீழத்தியது பார்சிலோனா.
ஆட்டத்தின் 21 ஆவது நிமிடத்தில் நெய்மார் முதல் கோலைப் பதிவுசெய்தார். வில்லாரியலின் சார்பில் அடுத்த சில நிமிடங்களில் பதில் கோல் பதிவானது. 45 ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி பார்சிலோனாவின் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:1 என்று ஆதிக்கம் செலுத்தியது பார்சிலோனா.
இரண்டாம் பாதியின் 69 ஆவது நிமிடத்தில் சுவாரஸ் பார்சிலோனாவின் மூன்றாவது கோலைப் பதிவு செய்தார். 82 ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வெற்றிபெற்றது.
(ம)



கரப்பந்தாட்டப் பயிற்றுனர்களுக்கான பயிற்சி முகாமொன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. கொழும்பில் இருந்து வருகை தந்த வளவாளர்களைக் [illegible] செய்யப்பட்டது. கரப்பந்தாட்டத்தில் உள்ள நுட்பங்கள் தொடர்பில் அதிக[illegible] முறையில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.
(ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரோனியை வென்றார் செரபோவா

மட்ரிட் ரென்னிஸ் தொடரில் (ஸ்பெய்னின் தொடர்) நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் குரோசியாவின் பரோனியை வென்றார் ரஷ்ய வீராங்கனை செரபோவா.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 4:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் போராடி இழந்தார் செரபோவா. ஆனால் அவர் சரிவில் இருந்து மீண்டு அடுத்த இரு செற்களையும் முறையே 6:4, 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார்.

**பவுச்சட்டுடன் மோதுகிறார்**

செரபோவா தனது இரண்டாம் சுற்று ஆட்டத்தில் கனடா வீராங்கனை பவுச்சட்டை எதிர்கொள்கிறார். மெல்டோனியம் என்ற தடை செய்யப்பட்ட மருந்தைப் பயன்படுத்தி தடைபெற்றிருந்த செரபோவா தற்போதே களத்துக்குத் திரும்பியுள்ளார். அவரை, மோசடிநபர் என்று கடுமையாக விமர்சித்திருந்தார் பவுச்சர்ட். இந்த நிலையில் இவர்கள் இருவரும் நேருக்குநேர் மோதவுள்ளமை பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

**செரபோவா வெல்வார்**

செரபோவா - பவுச்சர்ட் இடையிலான ஆட்டத்தில் செரபோவா வெற்றிபெறுவார் என்று ரென்னிஸ் ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் கருத்துக்களைப் பதிவிட்டு வருகின்றனர். பொதுவான கருத்துக்கணிப்பைப் போல செரபோவா வென்றால், பவுச்சர்ட் மீண்டும் செரபோவைச் சீண்டும் வகையில் வார்த்தை மோதலில் ஈடுபடுவார் என்றும் கருதப்படுகிறது.

**258 ஆவது இடம்**

இரண்டு வருடங்கள் தடைக் காலத்தால் செரபோவா தரப்படுத்தலில் தற்போது 258 ஆவது இடத்தில் உள்ளார். தரப்படுத்தலில் முன்னெற்றத்தைப் பெற அவர் இந்தத் தொடரை சிறப்பாகப் பயன்படுத்த வேண்டிய அவசியமுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)





# கிரனடாவை வீழ்த்தியது ரியல் மட்ரிட்

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் லாலிகா தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு (இலங்கை நேரப்படி) இடம்பெற்ற ஆட்டத்தில் கிரனடாவை மிக இலகுவாக வீழ்த்தியது ரியல் மட்ரிட். ஆட்டத்தின் மூன்றாவது நிமிடத்தில் ரொட்ரிக்காஸ் ரியல் மட்ரிட்டின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 11 ஆவது நிமிடத்திலும் ரொட்ரிக்காஸால் மற்றுமொரு கோல் பதிவானது. மொறாட்டா 30 ஆவது மற்றும் 35 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் ரியல் மட்ரிட் அணி 4:0 என்று முன்னிலை பெற்றது.

கிட்டத்தட்ட வெற்றி என்ற நிலையில் இரண்டாம் பாதியில் களமிறங்கியது ரியல் மட்ரிட். கிரனடா பதிலடி கொடுப்பதற்காக பல தடவைகள் முயற்சி செய்த போதிலும் எந்த முயற்சியும் கைகூடவில்லை. ரியல் மட்ரிட்டின் சார்பாகவும் கோல்கள் பதிவாகவில்லை. எனினும் அந்த அணி தனது ஆதிக்கத்தைத் தக்க வைத்தது. முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் வெற்றிபெற்றது. (ம)

**குமார் சங்கக்கார களமிறங்கவில்லை**

இங்கிலாந்து கழகங்களுக்கு இடையிலான றோயல் லண்டன் தொடரில் சர்ரேயின் சார்பாக விளையாடி வரும் சங்கக்கார நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் களமிறக்கப்படவில்லை. சுசெக்ஸ் அணியை எதிர்த்து சர்ரே மோதிய இந்த ஆட்டத்தில் சர்ரே அணி 95 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)




# தவான், ரோகித் சேர்ப்பு இந்திய அணி அறிவிப்பு



மினி உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணி அந்த நாட்டின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டது. காயத்தால் அணியில் இருந்து விலகிய ரோகித் சர்மா மீண்டும் அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். தவானும் மீண்டும் அணியில் இடம்பிடித்தார்.

மினி உலகக்கிண்ணத் தொடர் இங்கிலாந்தில் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகிறது. இந்திய அணியைத் தவிர ஏனைய அணிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்திய அணி விவரம் - கோகிலி (தலைவர்), ரோகித் சர்மா, தவான், டோனி, யுவராஜ், ரகானே, அஸ்வின், ஜடேயா, பும்ரா, சமி, புவனேஸ்வர் குமார், உமேஸ் யாதவ், கேதர் யாதவ். இந்திய அணி நடப்புச் சம்பியன் அந்தஸ்துடன் இந்தத் தொடரில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. பன்னாட்டு கிரிக்கெட் சபையின் வருவாய்ப் பகிர்வு முறையில் பன்னாட்டு கிரிக்கெட் சபைக்கும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கும் இடையில் இழுபறி நிலைகள் நீடித்து வந்ததாலேயே இந்திய அணியின் அறிவிப்பு தாமதமானது என்று கருதப்படுகிறது. (ம)

# அயர்லாந்தை வழித்துத் துடைத்தது இங்கிலாந்து

அயர்லாந்துக்கு எதிரான இரண்டு ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் தொடரை 2:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்து.

அயர்லாந்து அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. மினி உலகக்கிண்ணத் தொடருக்கான தயார்ப் படுத்தலாக இந்தத் தொடர் அமைந்துள்ளது என்று சொல்லப்படுகிறது. இரண்டாவது ஆட்டம் லோட்ஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு (இலங்கை நேரப்படி) நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது அயர்லாந்து. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 328 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக மோர்கன் 76 ஓட்டங்களையும், ரூட் 73 ஓட்டங்களையும், பரிஸ்ரெளவ் ஆட்டமிழக்காமல் 72 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சேஸ், மெக்கார்டி இருவரும் தலா 2 இலக்குகளையும், முஸ்தாக், டொக்ரெல் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய அயர்லாந்து 46.1 பந்துப்பரிமாற்றங்களில் 243 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அணித்தலைவர் போட்டர்பீல்ட் 82 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்துவீச்சில் ரூட், பிளங்கட் இருவரும் தலா 3 இலக்குகளையும், வூட் 2 இலக்குகளையும், போல், ரசிட் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலைவாய்ப்பு**

கொழும்பில் இயங்கும் தனியார்
நிறுவனம் ஒன்றிற்கு
பண வசூலிப்பாளர்கள் தேவை.
தங்குமிட வசதி செய்து தரப்படும்.

**071 8 695 695**

# மும்பையை வென்றது ஹைதராபாத்

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் மும்பையைத் தோற்கடித்து தனது பிளே ஓவ் வாய்ப்பை தக்கவைத்தது ஹைதராபாத்.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது மும்பை. ஆரம்ப வீரர் சிம்மன்ஸ் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். ரணாவும் அடுத்த சில பந்துப் பரிமாற்றங்களில் ஆட்டமிழந்தார். ரோகித், பாண்டியா இருவரும் இலக்குச் சரிவால் அதிகம் நிதானிக்க ஆரம்பித்தனர். இதுவும் மும்பைக்கு பின்னடைவைக் கொடுத்தது. தான் குவித்த 15 ஓட்டங்களுக்காக 24 பந்துகள்ள எதிர்கொண்டார் பாண்டியா. முடிவில் 138 ஓட்டங்களையே மும்பையால் பெற முடிந்தது.



பந்துவீச்சில் சித்தார்த் 3 இலக்குகளையும், புவனேஸ்வர் குமார் 2 இலக்குகளையும், நபி, ரசிட்கான் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத்துக்கு வோர்ணர் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் தவான், ஹென்றிக்ஸ் இருவரும் இணைந்து ஆட்டத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இணைப்பாட்டமாக 91 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 44 ஓட்டங்களுடன் ஹென்றிக்ஸ் ஆட்டமிழந்தார். எனினும் அரைச்சதம் கடந்து வெற்றிக்கு வித்திட்டார் தவான். (ம)

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 648
சீட்டிழுப்பு திகதி 08.05.2017
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
20 26 44 47 X
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.44, 674, 896/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919
நீல நிற டிக்கட்டுக்கள் 13.05.2017 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1362
சீட்டிழுப்பு திகதி 2017.05.08
வெற்றி இலக்கங்கள்
12 32 51 57 V
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 11,416,740/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919
வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2875 திகதி: 08.05.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
16 24 49 67 I
போனஸ் இல. 12
சனிக்கிழமை ஜக்பொட் ரூ. 60,385,982/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919
பச்சை நிற டிக்கட்டுக்கள் 2017.05.13 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

திரு.ஷாம்சன் அவர்களின்
SPOKEN ENGLISH
தொழில்புரிவோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
வாரநாள் பிரிவுகள் ஆரம்பம்
திங்கள், புதன் பிரிவுகள் 10.05.2017
1.காலை 08-10 2.காலை 10-12 3.பி.ப 01-03 4.மாலை 03-05
செவ்வாய், வியாழன் பிரிவுகள் 11.05.2017
1.காலை 08-10 2.காலை 10-12 3.பி.ப 01-03 4.மாலை 03-05
SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

அராலி தெற்கு களவத்துறை விளையாட்டுக் கழகத்தினால் 70 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும்
மென்பந்து துடுப்பாட்டம், கரப்பந்தாட்ட போட்டிகள்
மென்பந்து துடுப்பாட்டம் - 6பேர் 05 ஓவர்
கரப்பந்தாட்டம் (மின்னொளியில்) - செற்றப் கேம்
வெற்றிபெறும் அணிகளுக்கு பெறுமதியான பணப்பரிசு வழங்கப்படும்.
பதிவுக்கட்டணம் 1000/=
முடிவு திகதி 21.05.2017
தொடர்பு இலக்கங்கள்
077 532 4927, 077 207 0240

NEC
மனைக்கூட்டு வீதி, யாழ். நகர்.
தொடர் கருத்தரங்கு
தமிழ்
T.S.குகன்
காலம் -10.05.2017 (புதன்கிழமை) 8.00 A.M-1.00P.M
அலகு - இலக்கணம்
- சுருக்கம்
- கிரகித்தல்
வெளிமாணவர்களிற்கும் அனுமதி வழங்கப்படும்.

Dialog Mega அதிஷ்டம்
சனிக்கிழமை இரவு 9.55 க்கு வசந்தம் TV ஊடாக
110 வது வாரத்தின் வெற்றி இலக்கங்கள்
34 71 26 59 17 C
இந்த வாரத்தின் சுப்பர் பரிசு ரூ.10,384,615/-
உங்கள் இலக்கங்களை அறிந்திட, பரிசுகளைப் பெற்றிட 121 க்கு அழையுங்கள்.
Dialog

## மரண அறிவித்தல்

### முத்தையா சண்முகராஜா

(பொறியியலாளர் - London)

**பிறப்பு** 31.03.1947 **இறப்பு** 07.05.2017



கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட முத்தையா சண்முகராஜா (பொறியியலாளர்) 07.05.2017 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்புப் புத்திரரும், காலஞ்சென்றவர்களான இராசரட்ணம் - விமலாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், பாமாராஜா சௌந்தரி (Bama) அவர்களின் அன்புக் கணவரும், வேலாயுதபிள்ளை (லண்டன்), துரைராஜா (Canada), தியாகராஜா (Canada), மணிமேகலாதேவி (கனடா), தவமணிதேவி (கொக்குவில்), குணராஜா (லண்டன்), கலாரஞ்சினிதேவி (லண்டன்), பரந்தில்லைராஜா (Canada/Kokuvil) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**திருமதி பரமநாதன் நவமணிதேவி**
**121, ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு.**

**021 222 5652**

MedExPo Jaffna 2017 International Healthcare and Medical exhibition
வடக்கின் மாபெரும் சுகாதாரக் கண்காட்சி
இந் நிகழ்வில் கலந்து கொண்டு அனைவரும் பயன்களை பெறலாம்
மே 19 20 21 ஆகிய திகதிகளில்
10.00 am - 6.30 pm
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்
+ வைத்தியசாலைகள்
+ மருத்துவ உபகரணங்கள்
+ மருந்து வகைகள்
+ ஆயுர்வேதம் - சித்தமருத்துவம்
+ ஒப்பனையும் அழகுசாதனமும்
+ FMCG
+ உணவு மற்றும் போசாக்கு
+ ஆயுட் காப்புறுதி
+ மருத்துவக் கல்வி
பிரசித்தி பெற்ற இந்திய மருத்துவர்களினால் மகப்பேறு இல்லாத தம்பதியர்களுக்கு இலவச ஆலோசனைகள் வழங்கப்படுகின்றது
வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் ஏற்பாட்டில் உயிரியல் கண்காட்சி
பதிவுகளுக்கு : 0773436927
www.evolutionecs.com
Platinum Sponsor
Official Cosmeceutial Partner
Official Healthcare Partner
Official Event Partner
Official Print Media Partner
Official Electronic Media Partner
Official Digital Media Partner
Event Organized by
Supported by

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org